

கல்கி
KALKI
16-6-68
40 காசு



## இளமையின் எழில் ததும்பும் வதனம்
## பூவிலும் மென்மையான சருமம் பெறுங்கள்!

**...அதற்கு உங்கள் சருமத்தின் இயற்கையான ஈரத் தன்மை மாறாமல் பாதுகாப்பது அவசியம்**

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமிலுள்ள பிரத்தியேகக் கலவை 'ஹ்யுமெக்டன்ட்' சருமத்தின் இயற்கையான ஈரத்தை உலராமல் காக்கிறது. இதனால் பருவகால மாறுதல்களாலோ, தூசு முதலியவற்றாலோ, சருமம் வறட்சியடையாமல் மிருதுவாக இருக்கிறது. துல்லிய வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் வதனத்திற்கு இளமை எழிலையும், மென்மை சோபையையும் அளிக்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாகப் பூசிக் கொண்டாலே உங்கள் முகம் பொலிவுடன் விளங்கும். அல்லது முகத்தில் முதலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவி அதன் மேல் பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து முகம் மாசு மறுவில்லாமல் திகழும்!




**பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—உலகத்து அழகிகளின் வதனத்தில் மிளிர்வது**

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப்பட்டது)

P.6990

வகுப்பிலோ... அல்லது விளையாடும் போதோ

# பின்னியின்
# D318 மற்றும் D380
# கேஸ்மென்ட்டுகள்

உயர்தர பள்ளிச்சீருடைக்கு உகந்தவை

வகுப்பு முடிந்ததும் உங்கள் குழந்தைகள் D318 மற்றும் D380 கேஸ்மென்ட் உடையில் அவர்கள் விருப்பப்படி விளையாடி மகிழலாம். எடுப்பானதும், நீடித்து உழைக்கக்கூடியதுமான அவை எத்தனை முறை சலவை செய்தாலும் சாயம் போகாது. மேலும், நாடு முழுவதிலுமுள்ள பள்ளிகள் குறிப்பிட்டு கேட்கும் எல்லா வண்ணங்களும் பின்னியிடம் இருக்கின்றன.

பின்னியின் D318 மற்றும் D380 கேஸ்மென்ட், சோபா செட்டுகள் மெத்தை, தலையணை, ஜன்னல்கள் இவற்றிற்கு கவர்ச்சியான உறைகள், திரைகள் தயாரிப்பதற்கேற்ற பல வண்ணங்களில் கிடைக்கும்.



பின்னி - துணி உலகிலே புகழ்பெற்ற பெயர்

AUTHORISED STOCKIST OF BINNY FABRICS

BY-4616


# வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

**உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!**

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்...இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக்கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

**எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.**









மற்றும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ்—
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கல

PT.G.B TAM.

# கல்கி




படவிளக்கம் 8ம் பக்கம் பார்க்க

## பொருளடக்கம்

மலர் ஆனி 3 :: ஜூன் 16


மாய்க்கவேண்டிய மாயைகள் — 5
ராஜாஜியின் கருத்துக்கள் — 9
துருவங்கள் சேர்ந்தால்... — 18
ஒருபோ தம்பதி — 20
இலங்கைக் காட்சி — 23
மகாபாரதம் — 26
இனிக்கும் நினைவுகள் — 33
தாமரை நெஞ்சம் — 39
ஒநாய்க் கோட்டை — 42
கோல் கொடுத்த பெருமான் — 45
பொன்னிவனத்துப் பூங்குயில் — 46
உஷ்! ரகசியம்! — 57
சொர்க்கத்துக்கு ஒரு குறுக்கு வழி — 60
விஞ்ஞானிகள் வரிசை — 69
தனிமைத் துயர் (அட்டைப்படக் கதை) — 72
விளையும் பயிர் — 79
வட்டமேஜை — 80


''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.






TAMIL




பயோ-ஸால்
(கிரைப் மிக்சர்)

ஜே. & ஜே. டிஷேன்
ஹைதராபாத் - இந்தியா


எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. — குறள்
அமெரிக்கா
இந்தியா
நன்றி சூன்யம்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 46

# மாய்க்க வேண்டிய மாயைகள்

இந்தியாவில் பல துறைகளில் மாய எண்ணங்கள் மக்களை மயக்கி வருகின்றன. மாயை விலகினால்தான் உண்மை அறிவு உண்டாகும். நம் நாட்டில் சத்தியத்துக்கும் சுபிட்சத்துக்கும் இடையூறாக நிற்கும் இம்மாயைகளில் சிலவற்றைப் பார்ப்போம்:

தொழிலாளிகளை ஒரு மாயை மயக்கி வருகிறது. தனி முதலாளிகளின் தலைமை அகன்று, அதற்குப் பதிலாகச் சர்க்காரே தொழில்களை நடத்தினால் தங்களுக்கு நன்மை விளையும் என்ற மகத்தான மாயைக்குத் தொழிலாளர்கள் ஆட்பட்டுள்ளனர். உண்மையில் தொழிலாளர்கள் விரும்புவது போதிய ஊதியமும், தாங்கள் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதும்தான். தொழில் நிறுவனம் லாபகரமாக நடந்தாலொழியத் தொழிலாளரின் ஊதியம் உயர முடியாது. லாப-நஷ்டங்களால் பாதிக்கப்படாத சர்க்கார் ஊழியர்கள் நடத்தும் தொழில்கள் இவ்வாறு லாபகரமாக நடக்க முடியுமா? அல்லது லாப நோக்கத்தோடு தொழில் நடத்தும் தனியார் துறையில் இத்தகைய நிலையைக் காண முடியுமா? தொழிலாளர் திருப்தியுடன் வேலை செய்தால்தான் உற்பத்தி குந்தகமடையாமலிருக்கும். எனவே உற்பத்தி உயர்வில் அக்கறையுள்ள தனி முதலாளிகள்தான் தொழிலாளர் திருப்தி அடைவதில் கவனம் காட்டுவார்கள். இது குறித்துச் சந்தேகத்துக்கு இடமே இல்லை. சந்தேகம் இருக்குமாயின், உலகத்தில் தனியார் தொழில் முறை நடக்கும் நாடுகளின் சரித்திரத்தையும், சர்க்கார் தொழிலாதிக்கம் நடைபெறும் நாடுகளின் சரித்திரத்தையும் சிறிது ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும்.

நிறைய மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டுமாயின் தனியார் தொழிலகங்கள் வளமுடன் பல்கிப் பெருகினால்தான் முடியும். தொழிலகங்களிடையே போட்டி யிருக்கும்போதுதான் உற்பத்தி உயரவும், உத்தியோக வாய்ப்புப் பெருகவும் இடமேற்படுகிறது. மகத்தான அதிகாரம் படைத்த சர்க்காரைப் போட்டியற்ற ஏகபோக்கிய முதலாளியாக ஆக்கிக் கொள்வது தொழிலாளருக்குப் பிராணபத்தாகும். எனவே தனியாரின் தொழில் சுதந்திரத்துக்குப் பாடுபடும் சுதந்திரக் கட்சியே தொழிலாளரின் உண்மை நண்பன்; சர்க்காரிடம் ஏகபோக்கியத் தொழிலாதிக்கத்தைத் தர விரும்பும் கட்சிகளல்ல.

தொழிலாளருக்கு நன்மை உண்டாக்குகிறதோ, இல்லையோ சர்க்கார் ஒரு தொழிலை எடுத்து நடத்துவதால் அத்தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும் என்ற கருத்துச் சிலரிடம் நிலவுகிறது. இதற்கு நாட்டு அரசியல் சிந்தனையின் போக்கு ஒரு காரணமாகும். வறட்டுக் கொள்கை என்ற புகையால் கருப்பாக்கப்பட்ட கண்ணாடியைப் போட்டுக் கொண்டுள்ள அரசியல்வாதிகளால் உண்மையை உள்ளபடி பார்க்க முடியவில்லை. அவர்கள் பரப்புகிற மாய எண்ணங்களே காங்கிரஸின் சோஷலிஸப் பரிசோதனைகளாகின்றன. கம்யூனிஸ்டுகளிடமிருந்து கடன் வாங்கிய வறட்டுக் கொள்கைகளுக்கு வாய்க் கோஷங்களினால் வலிவூட்ட முயற்சி நடக்கிறது. இதனால் ஏற்படும் மாயத்தைத் தலைவர்களும் உணரவில்லை; வாக்காளரும் உணரவில்லை. இம்மாயத்தைத் தகர்க்க வேண்டும். சுய லாபத்துக்கும் அக்கறையான ஈடுபாட்டுக்கும் இடையே உள்ள இயற்கையான தொடர்பைத் தேச நலனுக்கு உகந்த வகையில் பயனுக்கிக் கொள்வதே பொருளாதார மேம்பாட்டின் ரகசியமாகும்.

நம் நாட்டில் இன்று நிலவும் மாயப் பிரமைகளில் இன்னொன்று எல்லைப் புறத்தில் வாழும் மக்களைக் குறித்தது. எல்லைப்புறம் என்பது வெறும் நிலப் பகுதி என்று கருதி, எல்லைப்புறத்தைப் பற்றிய அரசாங்க முடிவுக்கு அப் பகுதி மக்கள் அடிபணிய வேண்டும் என்று

நீக்கப்படுகிறது. நிருவாகம் என்பது நிலப்பரப்பு பற்றிய விஷயமல்ல. அது உயிருள்ள மக்கட் தொகையைக் கையாளும் கலையாகும். ஓர் உபகண்டமாக விரிந்துள்ள நாட்டின் எல்லைப்புற மக்களைக் கையாள்வதோ சாதாரணக் கலையல்ல. அதனை நுண் கலை என்றே சொல்லலாம். எல்லைப்புற மக்கள் பலவித சக்திகளால் ஆட்டி வைக்கப் படுகிறார்கள். அவர்களிடம் நம் கருத்தை இதமாகச் சொல்லி, அவர்கள் அதனை மனமொப்பி ஏற்குமாறு செய்வதே யுக்தம்.

இன்னொரு மாயை நம்முடைய திட்டங்கள் குறித்தது. ஏராளமாக வரி விதித்தும் கடன் வாங்கியும் இந்தத் திட்டங்களை நிறைவேற்றி, அதன் பின் பல பண்டங்களைப் பெருமளவுக்கு உற்பத்தி செய்து மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்றுப் பொருளாதார மேம்பாடு காணலாம் என்பதாக ஒரு மாய எண்ணம் நிலவுகிறது. மேல் நாடுகளில் தயாராகும் பண்டங்களுடன் நம் நாட்டுப் பொருள்கள் போட்டியிட்டு அந் நாடுகளில் விற்பனையாக முடியும் என்கிற மாய எண்ணம் நம்மைப் பெரும் கடனாளியாக்கி நாசப் பாதையில் இட்டுச் செல்கிறது.

ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி பெற முடியும் என்பது நம் நாட்டில் பலரைப் பிடித்துள்ள மற்றொரு மாயப் பிரமையாகும். இந்திய ராஜ்யங்கள் யாவற்றிலும் மும்மொழித் திட்டத்தை அமுலாக்க வேண்டும் என்று துணைப் பிரதமர் கூறி வருவது இந்த மாயத்தின் உருவகமே. இம் மாயை எவ்வளவு சீக்கிரத்தில் விலகுகிறதோ அவ்வளவுக்குத் தேசிய ஒற்றுமை வலுப் பெறும். இம்மாயை அகன்றாலே தேசத்தின் அத்தியாவசியப் பிரச்னையான பொருளாதார மேம்பாட்டில் அனைவரது கவனமும் தீவிரமாகச் செலுத்தப்படுவதற்கும் வழி பிறக்கும். 'ஆங்கிலமே அகில இந்தியாவின் தொடர்பு மொழி' என்ற சந்தேகத்துக்கிடமில்லாத உண்மையை ஒப்புக்கொண்டு ஒவ்வொரு ராஜ்யத்திலும் தாய் மொழி—ஆங்கிலம் ஆகிய இரு மொழித் திட்டத்தை அமுல் செய்தால்தான் தேசத்தில் எல்லாப் பகுதிமக்களும் ஏற்றத் தாழ்வற்ற சமநிலையில் இருப்பர்.

வெளி விவகாரத்தில் நம் சர்க்காரின் நடுநிலைமை, கூட்டுச் சேராமை ஆகியவற்றின் மாயம் பற்றிச் சொல்லவே தேவையில்லை. கிழக்கத்திய உலகின் தென் கிழக்குப் பகுதியான ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, மலேஷியா, இந்தியா ஆகிய நாடுகள் நட்பு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற நல்ல உணர்வு சமீபத்தில் இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரிய நல்ல ஆரம்பம். ஆனால் இதிலும் சில மாய எண்ணங்கள் புகுந்திருக்கின்றன. இந்நாடுகள் கப்பல்படையில் சக்திவாய்ந்த வேறொரு பேரரசின் துணையின்றித் தனித்து நிற்க முடியும் என்று நினைப்பது மாயை. ஆஸ்திரேலியாவும், நியூஜிலாந்தும், மலேஷியாவும் இந்தியாவின் பக்கமே பூரணமாகச் சாய்ந்து பாகிஸ்தானின் வெறுப்பைப் பெறவும் தயாராக இருக்கும் என்று நினைப்பது மற்றொரு மாயை. அமெரிக்காவும் ஜப்பானும் உலகின் தென்கிழக்கு நாடுகளுடன் உறுதியான உறவு கொண்டு உதவி புரிந்தாலே இந்நாடுகளின் பாதுகாப்பும் பொருளாதாரமும் சக்தி பெறும் என்ற உண்மையை உணர வேண்டும். எனவே அமெரிக்காவின்பால் நம் அரசாங்கத்துக்குள்ள மாறுபாடான, நன்றியற்ற போக்கை நீக்கிக்கொள்ள வேண்டும்.

இப்படியாகப் பல மாயைகள் பாரதத்தை, பாரத சர்க்காரைப் பிடித்து ஆட்டுகின்றன. இவற்றில் மிகப் பெரிய மாயை — காங்கிரஸ் கட்சி நம் நாட்டை நியாயமான முறையிலும் திறமையாகவும் ஆள முடியும் என்பதுதான். காங்கிரஸின் ஆற்றல் அவ்வளவும் அற்றுப் போய்விட்டது என்பதுதான் உண்மை. இன்றைய காங்கிரஸ் தலைமையைப் பரீட்சித்துப் பார்த்து, அது தேசத் தேவைக்குப் போதுமானதல்ல என்பது நிதரிசனமாகிவிட்டது. என்றாலும் இந்த ஒரு கட்சியே ஆட்சியில் நீடிப்பதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ஆபத்தை பாரதம் உணரவில்லை.

---

## காமகோடியின் கருணைமொழி



செயலற்ற நிலை தம்மொருவரை மட்டும் குறித்த விஷயம். செயல் என்று ஏற்பட்டு விட்டால் அது பிறரையும் குறித்த விஷயமாகும். செயல் என்று உண்டாகும்போது அந்தச் செயலைப் புரிபவர் இருப்பதோடு, அச்செயலின் விளைவுக்கு ஆளாகும் ஒருவரும் இருக்கத்தான் வேண்டும். நீங்கள் எது செய்தாலும் அதற்கு அன்பு ஒன்றே ஆதாரமாக இருக்கட்டும். அன்பின் மீதே செயல்படும்போதுதான் செயல் புரிபவர், அச்செயலால் பாதிக்கப்படுகிறவர் ஆகிய இருவருக்கும் நன்மை விளையும். அன்பே செயலின் ஆதாரம் என்னும்போது நான் காந்திய அஹிம்சை தத்துவத்தைக் குறிக்கவில்லை. அஹிம்சைக்கு மாறுபட்ட நடவடிக்கைகள் தேவைப்படுகிற சந்தர்ப்பங்களும் உண்டு. போர்கள் புரிவதற்குக்கூட அவசியம் ஏற்படலாம். ஆயினும் செயலின் தோற்றம் ஹிம்சையாயினும் சரி, அஹிம்சையாயினும் சரி, அச்செயலைப் புரிகிறவனுடைய உள்ளத்தில் அன்பு இருக்க வேண்டும். அதன் உந்துதலின் மீதே அவன் செயலாற்ற வேண்டும். விருப்பு, வெறுப்பு, கோபம், தீய எண்ணம் இவற்றை அறவே களைந்து விட்டு அன்பொன்றையே எல்லாச் செயல்களுக்கும் வழிகாட்டியாகக் கொண்டோமாயின் உலகத் தீமைகளில் பெரும்பாலானவை மறைந்தே போகும். இதுவே பாரதத்தின் ஞானிகளும், முனிவர்களும் உலகுக்குத் தந்த உபதேசம்.



சங்கீத ரசிகர்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு கானகலாதர மதுரை ஸ்ரீ மணி அய்யரவர்கள் மறைந்துவிட்டார்.

கருதியுடன் அற்புதமாக இழையும் கஸ்வர சாரீரம்; புஷ்பவனம் முதலிய மகா வித்வான்கள் தோன்றிய வித்வத் பரம்பரையில் பிறந்ததன் பயனான இசை ஞானம்; சாகித்தியத்தின் பொருளில் ஈடுபாடு; தமக்கே உரித்தான ரஞ்சகமான ஸ்வரப் பிரஸ்தாரம்—இவை யாவும் இணைந்த மதுர சங்கீதக் கலைஞராக மதுரை மணி அய்யர் விளங்கி வந்தார். பலப்பல ஆண்டுகளாக நாடெங்கிலும் ஏராளமாகக் கச்சேரிகள் செய்து லட்சோப லட்சம் மக்களை ஆகர்ஷித்தார். யௌவனப் பருவத்திலேயே சங்கீத உலகில் ஒரு தனி இடம் பெற்று நாளுக்கு நாள் மெருகும் பொலிவும் மிகுந்து மாபெரும் முன்னணி வித்வானானார்.

மணி அய்யர் அவர்களுடைய கச்சேரியில் ஒரு தனிச் சிறப்பைச் சொல்ல வேண்டும். அவர் மேடையில் வந்தமர்ந்து சுருதி சேர்த்துக்கொண்டவுடனேயே சபையில் உள்ள தம் அன்பர் குழாத்தின் இதயத்துடனும் இழைய இழையச் சுருதி சேர்த்துக்கொண்டு விடுவார் போலும்! அப்பேர்ப்பட்ட ஒரு லயிப்புடன், பரவசத்துடன், ஆவேசத்துடன் அவரது இசையை ஆயிரமாயிரம் மாந்தர்கள் மாந்தி மகிழ்ந்தனர். அவரது 'காணக் கண் கோடி'யும், 'கந்தன் கருணை'யும், 'தாயே யசோதா'வும், 'ஸரஸ ஸாம தான'வும், 'மாயே'யும், ஆங்கில நோட்டும் எத்தனை முறை கேட்டாலும் மக்களை மயக்கிக் கூத்தாட வைத்ததை ஓர் அற்புதம் என்றே சொல்லலாம். அவரது ஸ்வரக் கோவைகளோ ரசிகர்களை ஆனந்தத்தின் எல்லைக்கே தூக்கிச் சென்றன. பல்லவியில் ராகமாலிகை ஸ்வரத்துக்காக ஆவல் மீதுறக் காத்திருக்கும் ரசிகர்களைச் சற்றும் ஏமாற்றுமல் பொழிந்து தள்ளிவிடுவார். சொல்லொணு சரீர இன்னலுக்கு ஆளான ஒருவர் கன்னலனைய தமது கானத்தால் தாமும் ஆனந்தித்து, லட்சோப லட்சம் மக்களையும் ஆனந்தத்தில் ஆழ்த்தி வந்தார். குடும்ப பந்தம் ஏதுமின்றி, இசையுடனேயே அனவரதமும் இணைந்திருந்த அவரைத் தமது குடும்பத்தில் ஒருவர் போலவே பாவித்த ரசிகர்கள் அனந்தம்.

மதுரை மணி அய்யர் அவர்களின் கச்சேரியில் குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிப் பாடல்களும் இயல்பாக இடம் பெற்றதுதான். சிவன் பாடல்களும், தியாகையர் கிருதிகளும், தீக்ஷிதர் உருப்படிகளும் மிக மிக இயல்பாக அவரது கச்சேரியில் பொதுவான ரஸாநுபவத்தை உண்டாக்கும்.

மணி அய்யருடைய இசையின் மற்றொரு விசேஷத்தைக் 'கல்கி' பின்வருமாறு சொல்வார்: 'அவர் கனராகங்களை அபூர்வமாகப் பாடுவார்; அபூர்வ ராகங்களைக் கனமாகப் பாடுவார்!'

ஒரு கலைஞர் மறைந்துவிட்டாலும் அவரது கலைப் பாணி தொடர்ந்து பல வாரிசுகளிடம் வாழும் என்று வழக்கமாகச் சொல்வதுண்டு. ஆனால் மணி அய்யர் அவர்கள் வகுத்துக் கொண்டது அலாதியான ஒரு பாணி. மற்றவர்கள் அப்படியே பின்பற்ற முடியாத தனி முத்திரை படைத்த பாணி அது. எனினும் அவரது பாணியின் உட் சிறப்புக்களான சுருதி சுத்தம் கொண்ட நீண்ட கார்வைகளையும், உணர்ச்சி நிறைந்த நிரவல் முறையையும் அனைவரும் பின்பற்றிப் பயனடையலாம். சரளத்துவமும் சௌக்கியமும் நிறைந்த இசைக்கு அவரது கானம் ஓர் உதாரணம்.

பாடுவதுடன் கேட்கவும் அறிந்தவர் ஸ்ரீ மணி அய்யர். நல்ல கலையை வஞ்சனையின்றிப் பாராட்டுவார். கள்ளமற்ற உள்ளம் படைத்த நல்ல மனிதர்.

பெரும் கலைஞரை, ரசிகரை, தங்கமான மனிதரை அவரது மறைவில் இழந்துவிட்டோம். இசையுலகின் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பது உபசார வார்த்தையல்ல.



# அமர காவியம்

கிரேக்க மன்னன் அலெக்ஸாண்டர் மாபெரும் படை திரட்டிப் பல நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு இந்தியா வரை வந்தான் என்று படிக்கும்போது அவன் சாகசத்தையும், மனத் திண்மையையும் கண்டு வியக்கிறோம்.

எட்ட முடியாத பனி உறையும் எவரெஸ்ட் சிகரத்தை டென்ஸிங் வெற்றி கொண்டான் என்று படிக்கும்போதும் அவன் சாகசத்தைக் கேட்டு மெய் சிலிர்க்கிறோம்!

ஆனால் இவையெல்லாம் ஒன்றுமில்லை என்று நினைக்கச் செய்துவிடுகிறது ஸ்ரீமதி ஹெலன் கெல்லரின் சாகச வரலாறு.

ஹெலன் கெல்லர் 1880ம் ஆண்டில் பிறந்தார். பத்தொன்பது மாதக் குழந்தையாக இருந்தபோது கடும் விஷ ஜுரம் தாக்கி, பார்க்கும் சக்தியையும், கேட்கும் சக்தியையும் பேசும் சக்தியையும் இழந்து விட்டாள். உலகத்தோடு யாதொரு தொடர்பும் இன்றி குருடியாகவும் ஊமையாகவும் இருந்தாள்.

அவளது ஐந்தாவது வயதில் அவளது பெற்றோர் அவளுக்கு ஓர் ஆசிரியை சம்பாதித்தனர். அவள்தான் மிஸ் ஸல்லிவன்.

இந்த அம்மையார் கெல்லர் கையில் 'டால்' (பொம்மை) என்ற வார்த்தையின் எழுத்துக்களை எழுதி மெல்ல உச்சரிப்பும் கற்றுக் கொடுத்தார். இதுதான் முதல் பாடம்!

ஸ்பரிசத்தால் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளும் பிரெய்ல்முறை மூலம் படிக்கக் கற்றுக் கொண்டாள் ஹெலன். ஸல்லிவன் தொண்டையில் கைவைத்து, உதடுகளில் கைவைத்து, அந்த ஸ்பரிச உணர்ச்சி மூலம் பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ளத் தொடங்கினாள்.

இப்படிப் பயின்று பயின்று 1904ல் பட்டப் பரீட்சையிலும் தேறினார், மிகச் சிறப்பாக. ஒரு பெண்மணி உள்ளத்தின் உறுதியால் உடலின் ஊனங்களையெல்லாம் கடந்துவிட முடியும் என்கிற அற்புத சாதனையைப் புரிந்தார்.

அதன் பின்னர் கெல்லர் உலகிலுள்ள அந்தகர், ஊமையர் ஆகியோரின் வாழ்வு மலரத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார். இந்தக் குறிக்கோளுடன் உலகச் சுற்றுப்பிரயாணம் செய்து பல அறிவாளிகள் நிரம்பிய சபைகளில் சொற்பொழிவாற்றி, சபையோரின் உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறார்.

கெல்லர் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவற்றில் மிக மிக பிரமிப்பூட்டும் புத்தகம் அவருடைய சுயசரிதையே.

வாழ்நாள்முழுதும் இப்படி அங்கஹீனமுற்றவர்களுக்கே பணியாற்றிய கெல்லரை, "நீங்கள் எப்பொழுதாவது 'இது என்ன பயனற்ற வேலை' என்று சோர்வடைந்திருக்கிறீர்களா?" என்று யாரோ கேட்டார். அதற்கு "சோர்வா? ஓ! ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு கணம்தான் இடம் தந்திருக்கிறேன். அடுத்த கணம் அதைத் தள்ளிவிட்டு உற்சாகமாக வேலை செய்ய முனைந்திருக்கிறேன். நம்மைக் கண்டு நாமே பரிதாபப்படுவதும், சோர்வடைவதும்தான் நமக்கு முதல் விரோதிகள்!" என்றார் ஸ்ரீமதி கெல்லர்.

தீரமாகப் போராடி உலகப் பணியாற்றிய வீர காவியம் முடிந்துவிட்டது! ஆயினும் அந்தக் காவியத்தின் ஆதார சுருதியாகிய திடசங்கற்பத்தின் வெற்றி நெஞ்சில் நீங்காமல் நின்று தளர்ச்சி கண்ட மக்களுக்கெல்லாம் ஊக்கமூட்டும் !

# தனிச் சலுகையுள்ள வர்க்கம்

1917 டிசம்பரில், புரட்சிக்கு ஒரு மாதத்துக்குப் பின்னர், தாய் — சேய் பாதுகாப்பு என்பது அரசின் நேரடிக் கடமை என்று சோவியத் அரசு தீர்மானித்தது. அந்நாட்டில் பதினாறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் தொழில் துறையில் பணியாற்றுவதில்லை; ஏனெனில் குழந்தைகளை வேலை வாங்குவது சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது. உலகில் குழந்தைகள் மரண விகிதம் மிகக் குறைந்துள்ள நாடு சோவியத் யூனியன்தான்.

சோவியத் சட்டப்படி எல்லாக் குழந்தைகளுக்கும் எட்டாண்டு கட்டாயக் கல்வி தரப்படவேண்டும். பிறந்த குழந்தை ஒவ்வொன்றும் மருத்துவரால் மிக அக்கறையுடன் பரிசோதிக்கப்படுகிறது. இதற்குக் கட்டணம் கிடையாது.

'பயோனியர் ஸ்கயா பிராவ்தா' என்ற இளைஞர் பத்திரிகை 80 லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிறது. சோவியத் நாட்டில் அதிக விநியோகமுள்ள பத்திரிகை இதுவே.

பொருளடக்கப் பகுதியில் நீங்கள் காண்பது ஒரு சோவியத் குழந்தை.

# ராஜாஜியின் கருத்துக்கள்

மானுட முயற்சிக்கு ஓர் அற்புத மூர்த்தியாக விளங்கியவர் ஹெலன் கெல்லர். மனிதர்களின் உள்ளார்ந்த ஆற்றல் எவ்வளவு அதிசயமானது என்பதை நிரூபித்தவர் அவர். எண்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்து விட்டார். சென்னையில் அவரைச் சந்தித்த பேறும், பேரானந்தமும் பெற்றவன் நான். குழந்தைப் பருவத்தில் அவருக்கு 'ஸ்கார்லெட்' ஜுரம் கண்டு அவர் குருடாகவும் செவிடாகவும் ஊமையாகவும் ஆனார். இம் மூன்றினையும் அவர் கடந்து வெற்றி கண்ட கதையை அவரிடமிருந்தே கேட்டிருக்கிறேன்.

ஃஃஃ

ராபர்ட் கென்னடியின் உயிரைக் காக்க டாக்டர்கள் செய்த முயற்சி தோற்றுவிட்டது என்ற துயரச் செய்தி வந்துள்ளது. உலகம் துக்கமும் துன்பமும் அடைந்துள்ளதோடு, தீர்க்கமான சிந்தனையில் ஆழ்ந்துள்ளது. எது நல்லது எது கெட்டது என்பதில் நாம் விவேகம் பெற்றால் நாகரிக வாழ்வு நாசமாகாமல் காக்க வழியுண்டு. அவசரப்பட்டு வெறும் உலகாயத கபிட்சத்தில் தன்னை ஆழ்த்திக் கொண்டதற்காக அமெரிக்கா தண்டிக்கப்பட்டிருக்கிறது. நம் அநுதாபம் அவ்வளவும் இன்று அமெரிக்காவின் பால் செல்கிறது. இதிலிருந்து உலகம் எச்சரிக்கை பெற்று, கல்வி முறையையும் வீட்டில் குழந்தைகளை வளர்க்கும் முறையையும் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.

இளைஞர்களின் மனம் கெட்டுப் போவதற்கும், பாபங்களிலும், குற்றங்களிலும் அவர்கள் சாகஸமாக ஈடுபடுவதற்கும் இன்றைய கதைப் புத்தகங்களும் சினிமாக்களும் பெருமளவுக்குக் காரணமாகும். சுதந்திரம் அளிப்பதாக நினைத்துக் கொண்டு, பாபத்திலும் குற்றத்திலும் இஷ்டப்படி சஞ்சரிக்க இடம் தந்தாகி விட்டது. அமெரிக்க அரசியல் சாஸனம் விரும்பும் சுதந்திரம் இதுவல்ல. எந்த நாடுமே இத்தகைய 'சுதந்திரத்'தை விரும்பாது.

மதங்களுடன் தொடர்புள்ள புராணக் கதைகளையும், அறிவுக்குப் பொருந்தாத நம்பிக்கைகளையும் கண்டு அறிவாளிகள் மதத்தையே கொன்றுவிட்டார்கள். இது தவறான போக்கு. இதன் விளைவாக, புராணங்களின் இடத்தில் நவீனக் கதைகளும், சினிமாக்களும் அமர்ந்துவிட்டன. புராணக் கதைகள் முடிவில் இளைஞரின் உள்ளங்களுக்குக் காவலாக நின்று அவற்றை உயர்த்த உதவின. நேர் எதிராக இன்றைய நாவல்களும் சினிமாக்களுமோ அவர்களது உள்ளங்களைக் கெடுப்பதற்கே பயனாகின்றன.

ஃஃஃ

காங்கிரஸுக்குள் உள்ள பேதமும் பிரிவினையும் வெளிப்படாதவாறு அழுத்தி வைக்கப்பட்டுள்ளன. "நாம் விரோதிகளால் சூழப்பட்டுள்ளோம். எனவே ஒற்றுமையாக நிற்போம். இல்லாவிடில் நம்மை விரட்டியடித்து விடுவார்கள். நம் விரோதிகளுக்கு உதவி புரியவே மக்களும் மெத்த விரும்புகிறார்கள். ஜாக்கிரதை!"– இதுவே இன்றைய காங்கிரஸ் கட்சியின் கொள்கை. முன் ஒரு காலத்தில் ஏதோ ஒரு கோட்பாடு — சரியானதோ, தப்பானதோ—காங்கிரஸ்காரர்களை ஒன்றாகப் பிணைத்து வந்தது. இப்போதோ அதிகாரத்தை நழுவவிடாமல் இருக்க வேண்டும் என்ற ஆசை ஒன்றே அவர்களை ஒன்றாகச் சேர்த்து வைக்கிறது. காங்கிரஸ் கட்சி விவாதங்களைப் படிக்கையிலே வாக்கியங்களின் மறைபொருளாக இந்த உண்மையைப் பார்க்க முடிகிறது. காங்கிரஸுக்குள் தோன்றிய எதிர்ப்புக் கிளர்ச்சியை அழுத்தி வைத்து விட்டதில் ஸ்ரீ


மைசூர் ஜில்லா போலீஸ் உதவி நிதிக்காகவும்
போலீஸ்காரர்களுக்கு வைத்திய வசதிக்காகவும்

மைசூர் இன்ஸ்பெக்டர்ஜெனரல் ஸ்ரீ எஸ். என். ஹொஸாலி அவர்கள் தலைமையில்



எம். எஸ். சுப்புலக்ஷ்மி ... பாட்டு
கண்டதேவி அழகர்சாமி ... வயலின்
பாலக்காடு குஞ்சுமணி ... மிருதங்கம்
உமையாள்புரம் நாராயணஸ்வாமி ... கடம்

மைசூர் டவுன் ஹாலில்

14-6-68 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு

டிக்கெட்டுகள்: ரூ. 100/- 50/- 25/-. 10/-

மொரார்ஜி தேசாயும், ஸ்ரீமதி இந்திரா காந்தியும் மகிழ்ச்சி யடைந்திருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு கட்சிக்குள் பெறுகிற வெற்றி, பொருளாதாரத்தில் பெரிய ரண சிகிச்சை தேவைப்படும் நம் நாட்டுக்கு உதவாது.

'சிவசேனா ஜிந்தாபாத்' என்று கூச்சலிட்டுக் கொண்டு, ஒரு கூட்டம் தெற்கு பம்பாயில் உள்ள இரு தென்னிந்திய ஹோட்டல்களுக்குள் புகுந்து சூறையாடி, இரும்புக் கம்பிகளாலும் தடிகளாலும் தாக்கியதாகச் செய்தி வெளியாகியுள்ளது. ஹோட்டலின் கண்ணாடிக் கதவுகளும், மேஜை நாற்காலிகளும் நொறுக்கப்பட்டனவாம். பத்தாயிரம் ரூபாய் மதிப்புக்கு மேல் பொருள் நஷ்டம் உண்டாக்கப்பட்டிருப்பதாகப் போலீஸார் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற நடவடிக்கைகளில் சிவசேனை ஈடுபடுவதற்கு ஒரு முடிவு காணப் போவதாகப் பாரத உள்நாட்டு மந்திரி ஸ்ரீ சவான் கூறி வந்திருப்பதை இப்போது நினைவுகூர வேண்டியிருக்கிறது.

சிவசேனை செய்துள்ளது போன்ற வன்செயல்களைத் தடுக்காதிருக்கும் வரையில் அகில இந்திய ஐக்கியம் மேன்மேலும் எட்டா இடத்துக்குச் செல்ல வேண்டியதுதான். மராட்டியரான உள்துறை மந்திரிக்கு அரசியலில் ஏற்படக்கூடிய எதிர் விளைவு யாதாயினும்சரி, இத்தகைய சேனைகளை அரசாங்கம் தடை செய்ய வேண்டும்.

சக்திவாய்ந்த உரிய நடவடிக்கை எடுப்பதில் கால தாமதம் செய்தால், எதிராளிகளும் பதிலடி நடவடிக்கைகளில் இறங்கி, இரு தரப்புகளும் ஒன்றையொன்று தூண்டிவிட்டுக் கொண்டு, ஆத்திரம் உச்ச நிலையை அடைந்து பிரச்னை அரசாங்கத்தின் கைமீறிப் போய்விடும்.

சுதந்திரக் கட்சியின் தேசிய நிருவாகக் குழு கூடி எல்லாக் கோணங்களிலும் ஆலோசித்து ஸ்ரீ மஹீதாவைக் கட்சியிலிருந்து வெளியேற்றி விட முடிவு செய்தது. இவர் கட்சியின் மத்திய போர்டின் உத்தரவை மீறி குஜராத்தில் ராஜ்யசபைத் தேர்தலுக்கு நின்று வென்றவராவார். இவரது வேட்புக்கு முன்மொழிந்த ஐந்து சுதந்திரக் கட்சி அங்கத்தினர்களில் மூவர் மூன்றாண்டுகளுக்குக் கட்சியில் எவ்விதப் பதவியும் வகிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளனர். முன்பு ராஜ்கோட் மக்கட் சபை ஸ்தானத் தேர்தலுக்கு ஸ்ரீ மஸானி நின்றபோது அவருக்கு எதிராகப் பிரசாரம் செய்த ஸ்ரீ பகவான்ஜி பட்டேல் அடுத்த இரண்டாண்டுகளுக்குக் கட்சியில் எவ்வித பதவியும் வகிக்கலாகாதெனத் தடை செய்யப்பட்டிருக்கிறார்.

ஜூன் 1ந் தேதி சுதந்திரக் கட்சியின் பொதுக் குழு விவகாரத்தை முற்றிலும் விவாதித்தது. தேசிய நிருவாகக் குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் மாற்றப்படவில்லை. மேலும் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காகப் பிரேரிக்கப்பட்ட இரு தீர்மானங்களைப் பொதுக் குழுவின் பெரும்பான்மை நிராகரித்துவிட்டது.

தேசிய நிர்வாகக் குழுவிலிருந்தும் சுதந்திரக் கட்சியின் மத்திய பார்லிமெண்டரி போர்டிலிருந்தும் முன்பு ராஜிநாமாச் செய்துவிட்ட மஸானி அந்த ஸ்தானங்களுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மறுத்துவிட்டார். எனினும் பார்லிமெண்டிலும் பார்லிமெண்டுக்கு வெளியிலும் கட்சிக்காகத் தாம் தொடர்ந்து பணி புரியப் போவதாக ஸ்ரீ மஸானி பொதுக் குழுவுக்கு வாக்களித்தார்.

கட்சியின் கட்டுப்பாடுகளை மீறியவர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது சிலர் கருத்து. கண்டிப்பாக இருப்பது நல்லதுதான். எனினும் கண்டிப்பு 'அதி'யாகிவிட்டால், ஒன்றுகூடிச் செயலாற்ற வேண்டியவர்களுக்கிடையே நிரந்தரமான பிளவுகள் ஏற்பட்டுவிடும். ஆக்கரீதியில் உதவாத விசாரணைகளை நடத்தி அவற்றின் மூலம் கட்சிக்குள் நம்பிக்கையின்மையையும், ஐக்கியக் குலைவையும் ஏற்படுத்துவது அறிவுடைமை அல்ல என்பதே என் கருத்து.

## உத்தரசுவாமிமலை: ஓர் உத்தமத் திருப்பணி

தில்லித் தமிழர்கள் ஒன்றுகூடி பாரதத் தலைநகரில் முருகப் பெருமானுக்கு ஆலயம் எழுப்பி வரும் செய்தி வாசகர்களுக்குத் தெரியும். இதற்கான கருங்கல் திருப்பணிகள் காஞ்சிக்கு அண்மையிலுள்ள வாலாஜாபாத்தில் உருவாகி வருகின்றன. நான்கு லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு, திருப்பணி வேலைகள் நடந்து வாலாஜாபாத்திலிருந்து ஒரு பகுதி கற்கள் தில்லிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. திருப்பணியின் மற்ற அம்சங்களும் நிறைவு பெற்று சுவாமிநாத மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து உத்தர சுவாமியை நிர்மாணிக்க இன்னும் இரண்டு லட்சம் ரூபாய் தேவை.

இவ்வாலய நிர்மாணத்தில் அளப்பரும் ஈடுபாடு காட்டி வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் வாலாஜாபாத்திலிருந்து எஞ்சிய கற்களைத் தில்லிக்கு ரயில் மூலம் சேர்ப்பிப்பதற்குத் தேவைப்படும் ரூ. 40,000ஐ வசூலிப்பதற்குத் தமது ஸ்ரீமடமே பொறுப்பு ஏற்றுக்கொள்ளக் கருணைகூர்ந்திருக்கிறார்கள். எனவே ஞான பண்டித சுவாமிநாதனின் கிருபையோடு, ஞானாசாரியரும் பூர்வாசிரமத்தில் சுவாமிநாதன் என்ற திருநாமம் கொண்டவருமான காஞ்சி ஜகத்குரு அவர்களின் அருளையும் ஒருங்கே பெற இது ஒரு நல்ல சந்தர்ப்பம். ஆஸ்திக அன்பர்கள் தங்களால் இயன்ற பொருளுதவியை ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள் மடத்து முகாமாகிய ஹைதராபாத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

# ராபர்ட் கென்னடி



குழந்தைகளும் மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பம; குறைவற்ற புகழும் பாக்கியமும் கணக்கற்ற செல்வமும் பெற்றவர்; தேர்தலுக்குக் கோடிக்கணக்கில் செலவிடத் திட்டம் போட்டு முதல் வெற்றி அடைந்து அந்த வெற்றியின் ஆரவாரம் உச்சநிலை அடைந்து இன்னும் அடங்கவில்லை. அப்போது ஒரு கண்ணிமைப்பொழுதில் அனைத்தும் அடங்க ஒரு கொலையாளி வந்து கென்னடியை முடித்து விட்டான். இதைத்தான் நம்மாழ்வார் தம் பாசுரக் குறளில்,


**அடங் கெழில் சம்பத்(து)**
**அடங்கக் கண்(டு) ஈசன்**
**அடங் கெழில் அஃதென்(று)**
**அடங்குக உள்ளே**

என்று பாடினார். கர்வப்பட்டுப் பால் பொங்கி அடுப்பில் விழுந்து நாசமாவது போல் பொங்கி நாசமாகாமல் எல்லாம் ஈசனது என்று உணர்ந்து அடக்கம் பெறுவோமாக. கை நொடிப் பொழுதில் எல்லாம் மறைந்து போகலாம். எனவே கர்வப்படாமல் இருப்போமாக. பாசுரத்துக்குப் பெரியார்கள் வேறு பொருள் தந்திருக்கிறார்கள். நான் கண்ட பொருளை வைத்து எழுதுகிறேன். கென்னடியின் கதியை வைத்தே பாடினாற் போல் நம்மாழ்வார் பாடி யிருக்கிறார்.

**— சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி**



ஸ்ரீமதி ராபர்ட் கென்னடி



# 107-ல் சென்னை!



## ஒரு மனையாசி கூறுகிறாள் :

''நேற்றெல்லாம் வெயில் தாளவில்லை, ஆ, ஊ, உடம்பெல்லாம் எரிகிறது என்றீர்களே? இன்று 107 டிகிரி வெயில்! 'அப்பாடா!' என்று சொல்லி விட்டு நிம்மதியாகப் படுத்துப்பிட்டீங்களே, இன்றைக்குச் சூடு உறைக்கவில்லையா?'' என்று எங்க வீட்டுக்காரரைக் கேட்டேன். இதற்கு அவர், ''இன்று 107 டிகிரி என்பதை நம்பவே முடியாது. 'குளுகுளு' என்று இருக்கிறது......!'' என்றார்.

''எப்போது முதல் இப்படிக் குளுகுளு என்று இருக்கிறது?'' என்று கேட்டால், ''இன்று காலை ஜனதா எக்ஸ்பிரஸில் உங்க அம்மாவை ரயில் ஏற்றிவிட்டு வந்ததி லிருந்து!'' என்கிறார். என்ன பொல்லாத்தனம் பாருங்க!

## ஒரு வீட்டுக்காரர் சொல்கிறார் :



'என்னடா இது, இன்று வாங்கிய பால் ரொம்பவும் கெட்டியாக இருக்கிறதே' என்று நினைத்தேன். இதன் மர்மம் 'என்னவென்று இப்போதான் தெரிந்தது! '107 டிகிரி வெயிலில் தண்ணிருக்கும் படுகிற பாடு...... அதை ஏன் கேட்கிறீங்க போங்க' என்கிறான் பால்காரப் பக்கிரிசாமி! போகட்டும், நல்ல பாலாக இன்னும் கிடைக்கட்டும். இதற்காக வெயில் எவ்வளவு டிகிரி ஏறினாலும் பொறுத்துக் கொள்ளத் தயார்!

"கரி"




எஃகுக் கம்பியால் செய்யப்பட்ட மூன்று எலிப் பொறிகளுடன் அந்த ஆள் வீட்டுக்குள் நுழைந்ததும் எனக்கு வியப்புதான் ஏற்பட்டது. வீட்டில் எலி உபத்திரவம். எலிப்பொறி வாங்க வேண்டும் என்று அடிக்கடி நினைத்துக் கொள்ளுவேன்; ஆனால் கடை வீதிப் பக்கம் போகும்போது எலியோ, எலிப் பொறியோ நினைவுக்கு வராது!

'எலிப்பொறி விற்பனைக்கா? என்ன விலை?' என்று கேட்க வாயெடுத்தேன். வந்தவன் என்னிடம் ஏதும் பேசாமல் பொறிகளைக் கீழே வைத்து விட்டுக் கையிலிருந்த காகிதப் பொட்டலத்தைப் பிரித்தான். அதிலிருந்து ஒரு மசால்வடையை எடுத்துப் பொறிக்குள் பொருத்தி வைத்துவிட்டு எங்கள் வீட்டின் இலக்கத்தைக் குறித்துக் கொண்டு போய் விட்டான். அவனிடம் நான் எதுவும் கேட்கவே அவன் வாய்ப்பு அளிக்கவில்லை. எலிப்பொறியைச் சமையலறையில் வைத்தேன்.

மறுநாட் காலை அதே நேரத்துக்கு அவன் சில எலிப்பொறிகளுடன் வந்தபோதுதான் முதல் நாள் அவன் விட்டுச் சென்ற எலிப்பொறியின் நினைவு வந்தது. விரைந்து சமையலறைக்குச் சென்றேன். என்ன ஆச்சரியம்! பொறிக்குள் ஓர் எலி அகப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த எலிப் பொறியை எடுத்து வந்து அதை முதல் நாள் விட்டுச் சென்ற ஆளின் எதிரில் வைத்தேன். (எலி என்றால் சில பெண்மணிகளுக்கு ரொம்ப பயம். எலி உள்ளே இருந்தால் அப்பொறியின் அருகில் செல்லவே நடுங்குவார்கள்! நான் அத்தனை பயந்தாங்கொள்ளி அல்ல.) அந்த ஆள் எலியுடன் இருந்த எலிப் பொறியை எடுத்துக் கொண்டு, வேறொரு எலிப் பொறியை (மசால் வடை பொருத்தப்பட்டதுதான்) என் எதிரில் வைத்து விட்டுப் போய் விட்டான். அந்த ஆளிடம் எதுவும் கேட்டு விளக்கம் பெற முடியாது. எனக்கு மராத்தி தெரியாது; அவனுக்குத் தமிழ் தெரியாதே!

பக்கத்து வீட்டில் குடியிருந்த பெண்மணியிடம் கேட்டபோதுதான் உண்மை விளங்கியது. நகர சபைக்காரர்களே எலி ஒழிப்புக்காக இந்த இலவச சேவையைச் செய்கிறார்கள் என்று. 1948ல் நான் புனாவிலிருந்தபோது இப்படி ஓர் இலவச எலிப் பொறி சர்வீஸ் நிகழ்ந்து வந்தது அங்கு நகர சபையின் ஆதரவில். இப்போதும் அது தொடர்ந்து நடைபெறுகிறதா என்பது எனக்குத் தெரியாது.

ஆனால், சென்னை நகராண்மைக் கழகம் இந்தப் பணியைச் செய்ய முன்வந்தால் பல குடும்பங்களுக்கு உதவியாக இருக்குமே? தமிழகத்தின் மற்ற நகரசபைகளும் இதைப் பின்பற்றலாமே?

# இலக்கியப் பரிசுக்கு இருவர்

பாரதிய ஞானபீட் 1967க்கான இலக்கியப் பரிசைக் குஜராத்திக் கவிஞர் உமாசங்கர் ஜோஷிக்கும், கன்னட காவியகர்த்தா கே. வி. புட்டப்பாவுக்கும் பகிர்ந்தளித்திருக்கிறது.

பரிசுத் தொகை ஒரு லட்சம் ரூபாய்.

படைப்பு இலக்கியத்தில் இந்தியத்தன்மையின் பிரதிபலிப்பு என்கிற விஷயத்தில் பெரிதும் சிரத்தை எடுத்து இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

உமாசங்கர் ஜோஷிக்கு அவரது 'நிஷீத்' (நள்ளிரவு) என்கிற கவிதைத் தொகுப்புக்காகப் பரிசு கொடுக்கப்பட்டுள்ளது. அவரது ஏழு கவிதை நூல்களில் இது மூன்றுவதாகும். பதினெட்டு வயதில் இவர் எழுதிய 'விஸ்வ கீத்' என்கிற முதல் கவிதை விமர்சகர்களின் கவனத்தைக் கவர்ந்தது. தற்பொழுது குஜராத் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராயிருக்கும் இவருக்கு ஐம்பத்தேழு வயது ஆகிறது. ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று இரண்டு முறை சிறை சென்றிருக்கிறார். ஓரங்க நாடகங்கள், விமர்சனக் கட்டுரைகள், நாவல்கள் என இலக்கியத்தின் வெவ்வேறு துறைகளிலுமாக மொத்தம் முப்பது நூல்கள் எழுதியிருக்கிறார். மொத்தம் நூற்றுப் பதினறு கவிதைகள் கொண்ட 'நிஷீத்' என்கிற கவிதைத் தொகுப்பின் அநேக வரிகள் குஜராத் மக்களின் உள்ளத்தில் அழியா இடம் பெற்றவை.

'குவெம்பு' என்கிற கே. வி. புட்டப்பா 'ராமாயண தர்சனம்' என்ற காவியத்தை எழுதியவர். அறுபத்து நான்கு வயது ஆன இவர், மைசூர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராய்ப் பணியாற்றியிருக்கிறார். 'பத்ம பூஷண்' பட்டம் பெற்ற இவர் மொத்தம் அறுபதுநூல்கள் எழுதியிருக்கிறார். ராமாயண தர்சனம் அநேக ஆயிரம் வரிகள் கொண்ட ஒரு முழு நீளக் காவியம். 'குவெம்பு' இதைப் பற்றிச் சொல்லும்போது 'இந்தக் காவியத்தை நான் எழுதியதாகச் சொல்வது





தவறு: இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து அதன் எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சக்திதான் இந்தக் காவியத்தையும் எழுதியது' என்கிறார். நவீன கன்னட இலக்கியத்துக்குச் சிறப்புத் தேடித் தரும் இந்த நூல், ராமாயணத்தைப் புதிய கோணத்தில் நிரம்ப அர்த்தமும் அழகும் பொருந்தியதாய் நமக்கு அளிக்கிறது.

— ஆர். ஸ்வாமிநாதன்

# மூல நோயை

முற்றவிடாமல நம்பிக்கையான

**ஹெடன்ஸா**

உபயோகித்து நிவாரணம அடையுங்கள்;
—ரண சிகிச்சையையும் தடுங்கள்

DOL-3271I TAM

## சங்கீத ஆசிரியர்கள் கல்லூரி

(இந்தியாவில் உள்ள கல்லூரி இது ஒன்றே)

மியூஸிக் அகாடமி, சென்னை
115-E, மோபரேஸ் ரோடு, சென்னை-14

பிரின்ஸ்பால் :
சங்கீத கலாநிதி முடிகொண்டான்
ஸ்ரீ C. வெங்கடராம ஐயர்

பள்ளிகளில் சங்கீத உபாத்தியாயர்களாக நியமிக்கப்படுவதற்கு
சென்னை அரசாங்க கல்வி இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்டது

சங்கீத சாஸ்திர (டிகிரி) வகுப்பு, சங்கீத போதனா முறை (டெக்னிக்) வகுப்பு இவைகளிரண்டும் விசேஷத் திறமை வாய்ந்த சங்கீத உபாத்தியாயர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

5-7-68-ம் தேதி அன்று
கல்லூரி திறக்கப்படுகிறது

சம்பளச் சலுகையும்
உபகாரச் சம்பள வசதியும் உண்டு

மாடல் பள்ளிக்கூடம்

சர்க்கார் லோயர், ஹையர் வகுப்பு சங்கீதப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் பயிற்சி அளிக்கப் படுகிறார்கள். பிராஸ்பக்டஸ்-க்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் கரெஸ்பாண்டெண்டுக்கு மனுச்செய்து கொள்ளவும்.

## ஓர் பரிபூரண சேவைத் திட்டம்

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

**நெருப்பு — கப்பல் — விபத்து**

ஆஸ்திகள் : ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம் : பாண்டியன் பில்டிங், மதுரை-1


கிளைகள் : பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர் கோயமுத்தூர், கொச்சி, கோவில்பட்டி

4



பம்பாய் சர்வகலாசாலை விசேஷப் பட்டமளிப்பு விழாவின்போது டாக்டர் கே. எம். முன்ஷி அவர்களுக்குச் சட்டத் துறையில் டாக்டர் பட்டத்தை பம்பாய் கவர்னர் திரு பி.வி. செரியன் அளிக்கிறார்.

□





சென்னை, மத்திய நூலகத்தில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பதினெட்டாவது ஆண்டு விழா கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நாவலரின் சுவைமிகு தலைமையுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. திரு கெ. சந்திரசேகரன் அவர்கள் சிறப்புரை நல்கிச் சிறப்பித்தார். குழந்தை இலக்கியத் துறையை ஊக்குவிக்கும் வகையில் மாணவர்களுக்குப் பாராட்டும் பரிசுகளும் வழங்கப்பட்டன

□

பாரதப் பிரதமர் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்தார். ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி ஜான் கார்ட்டன் தம்பதியோடு கான்பராவில் பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்தார்.



# தேர்வு முடிவு தேறவில்லை!




கொக்கி





பிற்பகல் மூன்று மணிக்கு வெளியாக வேண்டிய பத்திரிகைகளுக்குப் பகல் பன்னிரண்டு மணி வரையில் எஸ். எஸ். எல். ஸி. தேர்வு முடிவுப் பட்டியலுக்கு அதிகாரிகள் திருத்தங்கள் அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

— தமிழகச் செய்தி



''சார்! இது இந்த வருடத்துக்கான திருத்தம்தானே, போன வருடத்துத் திருத்தம் இல்லையே, அதையும் அறிவித்து விடுங்கள்!'' என்கிறது ஓர் இளங் குரல்.

ஃ ஃ ஃ

பத்திரிகைக் காரியாலயத்தில் டெலிபோனை எடுத்தவர்: ''இது ராங் நம்பர் சார். நீங்க சொல்லுகிற நம்பர் இல்லே. என்னது எஸ். எஸ். எல். ஸி. ரிசல்ட்டா? அதுவும் ராங் நம்பர்தான்; அந்த நம்பர் ரிஸல்டில் இல்லே!''

ஃ ஃ ஃ

''வழக்கம் போல் இந்த ஆண்டும், கல்லூரிகளில் பி. யூ. ஸி.க்கு நெரிசல் அதிகம் இருக்கும்.''

— சென்னை கல்வி மந்திரி

நெரிசல் குறைய, இடம் தேடி வரும் பெற்றோர்கள் காத்திருக்கும் இடங்களில் உட்காருவதற்குச் சற்று நீளமான பெஞ்சுகளையாவது போடச் சொல்லுங்கள்...!

ஃ ஃ ஃ

ஒரு மாணவன் (தேர்தல் முடிவுத் தாளைப் பார்த்த பின்): என் நம்பரை உனக்குக் கூறினேனே, உன் அண்ணன் நம்பர் என்ன?

மற்றொருவன்: சொல்ல மாட்டேன் போ!

முதல் மாணவன்: சொல்லாவிட்டால் போ, இப்படி நீ சொல்வாய் என்று எதிர்பார்த்துத்தான் நான் உனக்கு வேறொரு நம்பரைச் சொல்லி வைத்தேன்!

---

**யாருக்குச் சிலை ?**

திரு கருணாநிதிக்குச் சிலை எழுப்புவதென நினைத்து மேடை அமைத்தார்கள். ஆனால் கருணாநிதி தமக்குச் சிலை வேண்டாம் என்று கூறிவிட்டார். மேடை நிற்கிறது. அதில் யாருடைய சிலையை நிறுவுவது என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? யாருடைய சிலையை நிறுவலாம் என்பதைத் தகுந்த காரணங்களுடன் விளக்கி கல்கியில் அரைப் பக்கத்துக்கு மேற்படாத விதத்தில் எழுதுங்கள். சிறந்த கட்டுரை கல்கியில் பிரசுரமாவதுடன் ரூ. 25 பரிசு பெறும்.

கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. ஜூன் 23ந் தேதிக்கு முன்னதாகக் கட்டுரைகள் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். கடிதப் போக்குவரத்துக் கிடையாது. உறையின் மேல் 'யாருக்குச் சிலை?' என்று குறிப்பிட்டு ஆசிரியர், கல்கி, சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.



# உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்




இவன் பெரியவனானதும் யாராகவிருப்பான்? என்ஜினியரா? கட்டடக் கலைஞரா? டாக்டரா? அல்லது வக்கீலா? இவர்களில் யாராகவிருக்க இவன் விரும்பினாலும், அதற்கு, பணம் செலவாகும் — ஏராளமாகத்தான். இவனது வருங்கால வாழ்வு வளம் பெறுவதற்காக நீங்கள் பணம் சேமித்து வருகிறீர்களா? வட்டி பெற்று பணம் பெருகிக்கொண்டே வரும் யுகோ பாங்கில் சேமித்து வாருங்கள்.

தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க்
லிட்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

***நீங்கள் பணம் சேமிக்கலாம், யுகோ பாங்க் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.***

ASP/UCO 9/68

பெரியார் ஈ. வே. ரா. தம் வீட்டில் கொலு வைக்க ஏற்பாடு செய்கிறார்.



# துருவங்கள் சேர்ந்தால்...

இந்தாப்பா! வாசலிலே கூவிக்கிட்டுப் போறான் பாரு! ஏதும் வியாபாரமா? இல்லை திருப்பதி கோவிந்தாவா கவனி!

அடேடே! பொம்மை விக்கற ஆளு! இப்படி இறக்கி வை கூடையை! என்னா அப்படி முழிச்சுப் பார்க்கறே?

நான் என்னா சின்னக் குழந்தையா? உடைச்சுப் போடுவேன்னு பயப்படறியா? சும்மா இறக்கு! வெங்காயம்! என் வயசிலே எத்தனை பொம்மை பார்த்திருப்பேன்? என்ன சொல்றே?... எனக்கு வேணும்கற பொம்மைகள் இல்லையா?

உனக்கு எத்தனை வயசு ஆகுது?

நான் வைக்கத்திலே மறியல் பண்ணின வருஷத்திலே நீ பொறந்திருப்பே! ஆனாக்க என்கூட ஈரோட்டுப் பள்ளிக்கூடத்திலே படிச்சவன் மாதிரி எனக்கு என்ன பொம்மை பிடிக்கும், பிடிக்காதுன்னு தெரிஞ்சு வச்சிருக்கியோ?

பொம்மைகளுக்கு வைக்கோல் பிரி சுற்றல்லேயே? பொம்மைகளை எடுத்து வை!

புத்தர் பொம்மையா? வேணாம்பா! நான் சொல்ற வார்த்தைகளையே கேட்கமாட்டேங்கறானுக பயக! புத்தரைப் பற்றிச் சொல்லியும் எனக்கும் அலுத்துப் போச்சு.

இந்தா! இந்தா!... அதென்ன துணியைப் போட்டு மறைக்கிறே! அந்தப் பொம்மையை எடு!

அடேடே! ராமரு பொம்மை! அடேயப்பா! என்ன நல்லாப் பண்ணியிருக்கானுக! முகத்திலே என்னா களை வழியுது? கண்களிலே உசிரு இருக்குதே!

அட நீ என்னப்பா சுவரிலே சாயறே? வெயில் மயக்கமா? வியாபாரத்தை முடிச்சுட்டுப் போறபோது வெளியே எங்கேயாவது ஓட்டலிலே போயி நல்ல குளிர்ந்த தண்ணியாச் சாப்பிடு.

அது யாரு? சீதையா? 'காவிய நாயகி காவிய நாயகி'ன்னு சும்மாவா சொல்லுறானுக? அது முகப் பொலிவே அலாதிதான்.

மெதுவா!.... மெதுவா!.... கீழே வை! உடைச்சுடப் போறே! ஏன் உன் கை பதறுது?

என்னதான் உசிரை விட்டு உழைச்சு உழைச்சு ஓடாகித் தலைவனானாக்கூட இப்போ இருக்கிற தொண்டப் பசங்க தலைவன் காலை எப்ப வாரி விடலாம்னு சதி பண்ணுவாங்க! இல்லாட்டி எப்போ அவன் முன்னுலே கால் மேலே கால் போட்டு உட்கார்ந்து அவன் மானத்தைக் கப்பலேத்தலாம்னு திரி பார்ப்பானுக.

இந்தச் சீதை இருக்காளே! இவ ஒருத்திதான் தன் மாமியார்க்காரியைப் புகழ்ந்து பேசியிருக்கான்னு வால்மீகி எழுதி வைச்சிருக்கான். அகில உலகத்துக்கும் ஒரு நாயகனைப் பெற்ற பாக்கியம் செய்தவள் என் மாமியார்க்காரி கௌசலேன்னு சொன்னுளாம் சீதை. இந்தக் காலத்திலே எந்த மருமகளாவது இப்படித் துணிஞ்சு பாராட்டுவாளா?

தலைவருக்கு வயசாச்சு ஒதுங்கணும்னு நினைக்கிற சிஷ்யங்க வாழுற காலம்தானே?

மாமியார்க்காரி ஒழிகன்னுதானே கூச்சல் போடுவா?

ராமரை வச்சுட்டே! சீதையை வச்சுட்டே! ரொம்பப் பொருத்தம். மனுஷங்க எப்படி வாழணும்கறதுக்குக் கதை ரூபத்திலே வாழ்ந்து காட்டினவங்க. அவங்க பொம்மை களைப் பார்க்கறபோது நம்ப மனசுலேயும் ஒரு மாதிரி பலம் தோணுது!

ராமன் ஒரு பஞ்சாபி. ராவணன் நம்ப திருநெல்வேலிக்காரன். இவன்தான் உயர்ந்தவன் அப்படி இப்படின்னு சொல்ற திலே என்னா இருக்கு? சுத்த வெங்காயம்! இந்தத் தப்பபிப்பிராயத்தையெல்லாம் சீர்திருத்தி யாகணும்.

''அடேடே! இந்தப் பொம்மைகூட நல்லா இருக்குதே! அதென்ன பாஷன்? சினிமாக் கொண்டையா? சினிமா ஸ்டார் பத்மினியா? ....ஆண்டாள்!... அசல் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாளம்மா! திருப்பாவை ஆண்டா ளம்மா!

என்னவோ பாட்டு சொல்லுவாங்களே...

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்

ஆமா! ஆமா! இந்தப் பாட்டை நினைக் கிறப்போவே எனக்குக் குளிரு நடுங்குது! மார்கழி மாசம் ஏற்கனவே குளிரு பிடுங்கற மாசம்! விடிகாலேயிலே குளிக்கணும்னு முடி யுமா? வெயில் காலத்திலேயே எனக்குக் குளிக்கிறதுன்னு அவ்வளவு ஒத்துக்காது! ஒதுங்கிடுவேன்.

பொம்மைக்காரத் தம்பி!... அதென்ன? சிவன் தலையிலே கங்கை இருக்கிற பொம்மையா?

உனக்குக் கதை தெரியுமா?

அந்தக் காலத்திலே நான் காசிக்கே ஓடிப் போயிருக்கேன். அங்கே போய்க்கூட ரொம்ப நாள் நான் கங்கையிலே குளிக்கலே! குளிச்ச மாதிரி நடிச்சுக்கிட்டே ஒரு சாமியாருக்கு வில்வம் பறிச்சுக் கொடுத்துக்கிட்டு இருந் தேன். அவர் கண்டுபிடிச்சு எனக்குச் சீட்டுக் கொடுத்துட்டாரு. அப்படியும் நான் கங்கை யிலே முழுகலே தம்பி.

நமக்குத் தண்ணி ஒத்துக்கிடாது. அத னாலேதான் எனக்கு இதுவரை கங்கைத் தண்ணியோ, காவிரித் தண்ணியோ கொடுத் துப் பாராட்டித் தண்ணி காட்டலே.

மறந்துட்டேனே தம்பி! நீ பிள்ளையார் பொம்மை கொண்டாரலியா? மாதிரிக்கு ஒண்ணுகூடக் காணுமே!

நம்ப வீடுங்களிலே நவராத்திரி கொலு வுக்குப் பிள்ளையார் பொம்மை வைக்காம இருப்பாங்களா? பொழைக்கத் தெரியாத பிள் ளையாக இருக்கியே!

ஒவ்வொரு சீசனிலே ஒவ்வொரு அரசியல் தலைவனை அழைச்சுக்கிட்டு அவன் புகழை யும் பெருமையையும் பாடற இந்தக் காலத் திலே உனக்கு எப்போ எப்போ எந்தப் பொம்மை கொண்டு வரதுன்னு தெரியலியே!

பிள்ளையார் சதுர்த்தியப்ப இரண்டணா களி மண்ணோடே ஜோலியை முடிச்சுடுவாங்களே.

சரி... சரி... இந்த நாலு பொம்மைகளுக் கும் உனக்கு என்ன சில்லறை வேணும்?

ஆமா! வாங்கத்தான் போறேன். நம்ப வீட்டுக்கு உறவுக்காரக் குழந்தைங்களெல் லாம் வந்திருக்கு. அதுகளுக்கு பிரசென்ட் பண்ணியாகணும்.

...என்ன?... நாலு பொம்மையும் ஏழு ரூபாயா?... எடு கூடையை! கட்டு கடையை! இந்தக் கிழவன் சொத்து அனாமத்துச் சொத் துன்னு நினைச்சுட்டியா?... நாலு பொம்மை யும் நாற்பது காசு! அதுவும் போனாப் போகுதுன்னு! என்னவோ களிமண்ணிலே காமா சோமான்னு வருணத்தைப் பூசிக் கொண்டாந்துட்டுக் கொள்ளையடிக்கவா பார்க்கறே!... போ!...போ!... இந்த நாற் பது காசிலேகூட, இருபதை மிச்சப்படுத்திட்டு இருபதுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுத்துக் குழந்தைகளைச் சமாளிக்கலாம். மீனு கோழி அப்படி இப்படின்னு மிட்டாயிலும் கூட நிறைய பொம்மை இருக்கே!....

**— கோமதி ஸ்வாமிநாதன்**

## கால்ஃப் ஹாஸ்யங்கள்






'''கால்ப்' விளையாட உங்க பையனுக்கு வேறு இடம் அகப்படல்லேயோ?''

''அவ்வளவு பெரிய காலி இடம் நம்ப ஊரில் எங்கே இருக்கு சார்?''



குடையுடன் ஸ்ரீமதி ஒருபோ ஆடப் புறப்பட்டுவிட்டார்!

# ஒருபோ தம்பதியும் கால்ஃப் பந்தாட்டமும்

''சென்னை கால்ஃப் மைதானம் நீண்டு பரந்து எவ்வளவு பெரிசாக இருக்கிறது!''

''இதோ பாரும்! இந்தக் கால்ஃப் மைதானத்தை வழங்கியவர் பெயரைக் கல்லில் பொறித்திருக்கிறார்கள்!''

''ஹிஸ் ஹைனஸ் ஸ்ரீ பத்மநாப தாஸ வஞ்சி பால ஸ்ரீ பாலராம வர்மா குலசேகர கிரீடபதி மன்னத் சுல்தான் மகாராஜா ராஜா ராம ராஜா பகதூர் ஷாம்ஷீர் ஜங் திருவாங்கூர் மகாராஜா அவர்கள் 1938ம் ஆண்டு ஜனவரி 15ந் தேதி நன்கொடையாக வழங்கிய மைதானமாம்!''

''அவரது நீண்ட பெயரைப் போலவே மனமும் விரிந்திருக்கிறது. இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய மைதானத்தை நன்கொடையாக வழங்க மனசு வருமா?''

''அதோ குடையுடன் போகிறாளே, ஜப்பானியப் பெண்மணி ஸ்ரீமதி ஒருபோ, கால்ஃப் ஆட்டத்தில் ரொம்பக் கெட்டிக்காரியாம்!''

''அவளா?... அவள் கூடப் போகிறவன் பந்தடிக்கப் பல வளைந்த குச்சிகளைச் சுமந்து செல்கிறானே அவனைப் பார்த்தால்தான் ஆடப் போகிறவன் மாதிரி இருக்கு!''

''சுவாமி, அவன்தான் காடி. இந்த விளையாட்டுக்கு வேண்டிய பலமாதிரி பந்தடிக்கும் மட்டைகளையும் சுமந்து செல்கிறவன்!''

''ஸ்ரீமதி ஒருபோ ஒவ்வொரு மேடையிலிருந்தும் பந்தை அடித்து, குழிக்குள் தள்ளி முன்னேறுகிறாள்!''

''அவள் ஒன்பது அல்லது பதினெட்டுக் குழிகளில் இப்படி ஆடியாக வேண்டும்! இரு குழிகளுக்கிடையில் 300 முதல் 600 கஜ தூரம் இருக்கலாம்! கணக்குப் போட்டுப் பாரும்!''

''அப்பப்பா! நடை ரொம்ப அதிகம் போலிருக்கே! நான் பெவிலியனிலேயே உட்கார்ந்திருக்கேன். நீங்க ஆட்டத்தைப் பார்த்து வாருங்கள்!''

□ கால்ஃப் மைதானத்தில் ஒன்பது அல்லது பதினெட்டுக் குழிகள் உண்டு. இந்தக் குழியைச் சுற்றி வட்டங்கள் உண்டு. டீபாக்ஸ் ஒரு சிறு மேடை. அந்த இடத்திலிருந்து 310 கஜ தூரத்திலுள்ள (இந்தத் தூரம் மைதானத்துக்கு மைதானம் வித்தியாசப்படலாம்!) குழிக்குப் பந்தை அடித்துப் போட வேண்டும். பந்தைக் குழிக்குள் தள்ள இத்தனை தடவைகளுக்கு மேல் அடிக்கக் கூடாது என்று கணக்கு உண்டு. இதற்கு 'போகி' என்கிறார்கள். பந்து செல்ல வேண்டிய எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த எல்லைகளைப் பந்து தாண்டிவிட்டால் 'ஸ்ட்ரோக்' இழக்க வேண்டும்! செயற்கைத் தடைகளான 'பங்கர்' ஒவ்வொரு குழிக்குப் பக்கத்திலும் உள்ளது. பந்து மரத்தின் மீதோ செடிகளின் மீதோ தங்கிவிட்டால் மறுபடியும் விளையாட முடியாதல்லவா? ஆகவே பந்தை அங்கிருந்து எடுத்து விளையாடக் கூடிய இடத்தில் வைத்து அடிக்கலாம். ஆனால் ஆட்டக்காரர் 'ஸ்ட்ரோக்' இழக்க வேண்டும்!

□ அமெரிக்காவில் ஒரு கால்ஃப் கிளப்பில் ஆறாவது குழியண்டை அந்தச் சிறுவன்

கம்பீரமாக மட்டையை ஓங்கி...





...பந்தைத் தட்டினார் ஸ்ரீமதி ஒருபோ.

காலஃப் குச்சியுடன் நிற்பான். அந்த மைதானத்தில் 120 கஜத்துக்குக் கழிவு நீருக்காகக் குழி வெட்டியிருப்பார்கள். காலஃப் ஆடி வரும் பெண்களுக்கு இந்த இடத்தில் வந்ததும் முன்னேறக் கஷ்டமாக இருக்கும். "உங்கள் பந்தை இந்தக் குழி தாண்டி அடித்துத் தருகிறேன். ஒரு நிக்கல் நாணயம் (ஐந்து காசு) தந்துவிடுங்கள்!" என்பான் சிறுவன் பால்மர். அர்னல்ட் பால்மர் இப்படி ஆடி ஆடியே அமெரிக்காவின் தலைசிறந்த அமெச்சூர் சாம்பியனானான். 1960ம் வருஷப் பந்தயங்களில் புரொபஷனல் பால்மருக்கு 44,256 டாலர்கள் வருவாய் கிட்டியது.

□ ஸ்காட்லாந்தில் காலஃப் ஆட்டம் மிகப் பிரபல்யமாக விளங்கியது. இதைக் கண்டு பார்லிமெண்ட் காலஃப் ஆட்டத்துக்குத் தடை விதித்தபோது, மன்னன் ஜேம்ஸ் 'அந்தத் தடையைப் பொருட்படுத்த வேண்டாம்' என்று பிரகடனப்படுத்திவிட்டான். ஏனெனில் மன்னனுக்கே அந்த ஆட்டத்தில் ஒரு மோகம். தடைச் சட்டம் ஏட்டளவோடு நின்றது.

□ சென்னை காலஃப் மைதானத்தில் எனக்கு முன்னால் ஒருபோ தம்பதியினர் சளைக்காமல் மத்தியான வெய்யிலில் ஆடிச் சென்றார்கள். தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்தேன்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று ஒருபோ கேட்டார்.

"ஸ்ரீமதி ஒருபோவின் ஆட்டத்தைப் பார்க்க வந்தேன்!"


"அப்படியா? ரொம்ப சந்தோஷம்!" என்று கூறிவிட்டுத் தம் ஆட்டத்தில் கவனத்தைச் செலுத்தினார் ஒருபோ. குடையைக் 'காடி'யிடம் கொடுத்துவிட்டுப் பந்தை லாகவமாக அடித்தாள் ஸ்ரீமதி ஒருபோ. அந்தக் கம்பீரத்தைக் கண்டு பிரமித்துப் போனேன். மறுபடியும் பந்தை அடிக்க நடக்கும்போது, "நீங்கள் காலஃப் ஆட்டத்தை எப்போது கற்றுக்கொண்டீர்கள்?" என்று அருகில் சென்று கேட்டேன்.

"நான் ஜப்பானில் டோக்கியோவில் பயிற்சி பெற்றேன். ஆனால் விளையாட்டில் தீவிரமாக ஈடுபட்டது சென்னையில்தான்."

"நீங்கள் காலஃப் பந்தயங்களில் கலந்து கொண்டிருக்கிறீர்களா?"

"ஓ! 1966ம் ஆண்டில் கல்கத்தா பதக்க விளையாட்டில் இந்திய ஆட்டக்காரியை வென்றிருக்கிறேன். இந்த வருஷம் ஜப்பானியக் கழகப் பந்தயத்தில் எனக்கே வெற்றி!"

"ஸார்! நீங்க ஸ்ரீமதி ஒருபோவின் ஆட்டத்தைப் பார்க்கத்தானே வந்தீர்கள், பேச வரவில்லையே?" என்று ஒரு போடு போட்டார் திருவாளர் ஒருபோ, கையில் பந்தடிக்கும் காலஃப் கிளப்புடன் வந்து. மனைவி பேச ஆரம்பித்தால் ஆட்டத்தில் லயிப்புக் குறைந்துவிடுமே என்ற கவலை அவருக்கு.



பந்து குழிக்குள் விழுந்துவிட்டது !

ஒருபோ தம்பதியினர் பதினெட்டுக் குழிகளில் பந்தைத் தட்டிப் போட்டுக் கொண்டு வேகமாக முன்னேறினர். பின்னால் பிற காலஃப் ஆட்டக்காரர்கள் அவர்களுக்குச் சமதையாக ஆட முடியாமல் திணறிக் கொண்டு மெல்ல முன்னேறி வந்துகொண்டிருந்தனர்.

□ காலஃப் ஆட்டத்தின்போது நீண்டதூரம் நடக்க வேண்டியிருப்பதால் தொந்தி கரையும் என்று நம்பிப் பலர் இந்த விளையாட்டை மேற்கொள்ளுகிறார்கள். ஒரு மாதம் தினம் அதிகாலையில் காலஃப் விளையாடிவிட்டுத் திரும்பிய என் நண்பரைக் கேட்டேன்: "என்ன கரைந்ததா?"

"ஓ! நிறையக் கரைந்தது" என்றார்.

பிறகு நான் சந்தேகத்துடன் அவர் உருவத்தை நோக்குவதைப் பார்த்து, "பணத்தைச் சொல்கிறேன்!" என்றார்.—குண்டுமணி.

சிந்தித்து வாங்குங்கள்–சிறந்ததையே வாங்குங்கள்

# பிரிட்டானியா

## க்ளூகோஸ்

## மில்க் பிஸ்கட்டுகள்




ப்ரோட்டீன் சேர்க்கப்பட்டு புது உறைகளில் கிடைக்கின்றன

பிரிட்டானியா க்ளூகோஸ் மில்க் பிஸ்கட்டுகளில்

மட்டுமே அதிக சக்திக்கு அவசியமான அதிகப்படி ப்ரோட்டீன்கள் உள்ளன.
கோதுமை, சர்க்கரை, க்ளூகோஸ் மற்றும் பாலுடன் விட்டமின்களும்
சேர்த்து இவை தயாரிக்கப்படுகின்றன.

# இலங்கைக் காட்சி. ௯



புத்தபிரான் சுமார் 2591 ஆண்டுகளுக்கு முன்னர் நேப்பாளத்தில் பிறந்தார். என்றாலும் அவர் மறைந்த 250 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இலங்கைக்குப் பௌத்த மதம் வந்தது.

பௌத்த தர்மத்தை உலகமெங்கும் பரப்ப நான்கு திசைகளுக்கும் நூற்றுக் கணக்கான தர்ம தூதுவர்களை அனுப்பிய அசோகச் சக்கரவர்த்தி இலங்கைக்கு மட்டும் தம் குமாரர் மகிந்தரை (மகிந்த தேரோ) அனுப்பினார்.

மகிந்தர் முதன் முதலாக ஈழத்தில் அடியெடுத்து வைத்ததும், பௌத்த மதத்தை உபதேசித்ததும் இந்த மலையில்தான். அதனால் இந்த மலை மகிந்தலை எனப் பெயர் பெற்றது. இங்கு வேட்டையாட வந்த தேவ நம்பிய தீசன் என்ற மன்னர் மகிந்தரின் முதல் சீடரானார். அது முதல் பௌத்தம் அரசாங்க மதமாகி இலங்கை முழுவதும் பரவியது.

இந்த நாளைப் பௌத்தர்கள் போசன் பண்டிகையாகக் கணக்கிட்டு அன்று முதல் இன்றுவரை கோலாகலமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

- கே. வி. எஸ். மோகன்

"உங்கள் குழந்தைக்குப் பிரத்தியேகமான பவுடர் தேவைப்படுகிறது —
கால்கேட்டே அந்த
நேர்த்தியான பவுடர்!"







காஸ்கேட் பேபிபவுடர் மிகவும் மென்மையானது. அதிகமாக வேர்வையை உறிஞ்சக்கூடியது. பட்டுப்போல் மிருதுவானது. அது குழந்தையின் இளம் சருமம் எரிச்சலடையாமல், நமைச்சலடையாமல் பாதுகாத்து குழந்தையை குளுமையுடன், சுகமாகவும், ஆனந்தத்துடனும் வைத்திருக்கும். உங்கள் குழந்தைக்கு இன்றே காஸ்கேட் பேபி பவுடரை வாங்குங்கள்!

காஸ்கேட் பேபி பவுடர்
வாங்குங்கள்
— அதிக பவுடர்...
அதிக சிக்கனம்!

CBP.G.7 TAM

---

VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEEN



வீணா

Veena • எம்ப்ராய்டரீஸ்

நவீன டிசைன்கள். கண் சிறந்த வண்ணங்கள்.
மனதைக் கவரும் சித்திர தையல்
வேலைப்பாடுகள் அமைந்தது.
மற்ற எல்லா சித்திர தையல் துணிகளுக்கும்,
வேலைகளுக்கும் மிகச்
சிறந்தவை.



டிரேட் மார்க்

தயாரிப்பாளர்கள்:
S. S. M. பிரதர்ஸ் (பி) லிட்.,
த.பெ.எண்: 8, குமாரபாளையம் போஸ்ட்
(ஈரோடு வழி)

எங்கள் இதர உற்பத்திகள்:
யாழ் (வீணா) மார்க் பருத்தி & ரயான் வேஷ்டிகள்,
சர்ட்டிங்ஸ், பட்டுத்துணிகள்,
விசேஷ ரக பவானி பட்டு சிப்பன்கள்.

சென்னை நகர
ஸ்டாக்கிஸ்ட் & ஏஜண்ட்:
அமர்ஜோதி டிரேடர்ஸ்
99, கிடங்கு தெரு, சென்னை-1

VE-103

# 007 படும்பாடு!

மிகக் குறுகிய காலத்தில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பிரபலமான கதாபாத்திரம் ஜேம்ஸ் பாண்ட். அசல் வைரமான 007க்கு மக்களிடம் 'மௌஸ்' இருப்பதைக் கண்டு பல போலி வைரங்கள் ஈசல் போலக் கிளம்பித் திரை உலகை முற்றுகை யிட்டதைப் பார்த்தோம்.

இப்படி எல்லாரையும் பைத்தியமாக அடித்த 'ஜேம்ஸ் பாண்ட்' பாணிக் கதைகளைக் கேலி செய்யும் விதமாக கொலம்பியாவின் 'காஸினோ ராயேல்' என்ற படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. கவர்ச்சிகரமான விளம்பரங்களைக் கண்டு வழக்கமான 'ஜேம்ஸ் பாண்ட்' பாணிப் படம் என்று நம்பிப் போனவர்களுக்கு மகிழ்ச்சிகரமான ஏமாற்றமாக அமைந்திருந்தது காஸினோ ராயேல். பல பிரபல நட்சத்திரங்கள் இப்படத்தில் நடிக்கிறார்கள். சார்லஸ் போயர், டேவிட் நிவன், ஆர்ஸன் வெல்ஸ், உர்ஸெலா ஆண்டரஸ், பீட்டர் ஸெல்லர்ஸ், இப்படி நட்சத்திரப் பட்டியல் நீளுகிறது. ஆனால் இவர்களில் பலர் ஓரிரண்டு காட்சிகளில் தான் வருகிறார்கள். உலகெங்கும் பிரபலமாகி விட்டதொரு படைப்பைக் கிண்டல் செய்ய வேண்டுமானால் அதற்கும் அபாரத் திறமை இருந்துதானே ஆக வேண்டும்! ரொம்பப் பிரமாதமான கற்பனைகளை இந்தப் படத்தில் காண முடிகிறது — கதை என்று ஏதுமில்லா விட்டாலும்கூட! வழக்கமான 'பாண்ட்' பாணியில் உல்லாச மங்கையர், உருட்டல் மிரட்டல்கள், கட்டழகிகள், காதல் வலைகள், குளியல் காட்சி எல்லாமே உண்டு. முடிவில் அத்தனையும் கேலிக்கூத்தாகி நம்மைச் சிரிக்க வைக்கின்றன. வண்ணப்படமாதலால் கண்ணுக்கு விருந்தாக அமைந்திருக்கும் காட்சிகள் ரசிக்கும்படி இருக்கின்றன. காட்சி ஜோடனைகள் தரமாக இருக்கின்றன. படத்தின் முடிவிலே காட்டப்படும் அத்தனை களேபரங்களிடையேயும் நாம் ஹாஸ்யத்தை ரசிக்க முடிகிறது. திகிலையும், தீரச் செயல்களையும் எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தாலும் சிரிக்க வைத்துச் சோர்வகற்றியது 'காஸினோ ராயேல்'.



# மகாபாரதம்

## ராஜாஜி



அரசன் கட்டளைப்படி, வழியில் இடையர்கள் முனிவரை உபசரித்தார்கள். அதன் பயனாக அவர் பெரும்பாலும் கோபம் தணிந்து ராஜதானியை அடைந்தார்.

சுவர்க்கத்தில் தேவேந்திரன் இருப்பதைப் போல் அரசன் மாளிகையில் தம்முடைய புத்திரன் இருப்பதைக் கண்டார். மின்னலைப் போன்ற வடிவத்தோடு ஜொலிக்கும் ராஜகுமாரி பாணிக்கிரகணம் செய்யப்பட்ட மனைவியாகத் தம் மகனுடன் அமர்ந்திருப்பதையும் கண்டார்.

விபாண்டகர் அரசனை அனுக்கிரகம் செய்தார். புத்திரனைப் பார்த்து, ''இந்த அரசனுக்குப் பிரியமானதெல்லாவற்றையும் செய். ஒரு புத்திரன் பிறந்தவுடன் வனத்துக்கு மறுபடியும் வந்து சேர்வாயாக'' என்றார். அவ்வாறே ரிஷ்யசிருங்கரும் செய்தார்.

''நளனுக்குத் தமயந்தியும், வசிஷ்டருக்கு அருந்ததியும், அகஸ்தியருக்கு லோபாமுத்திரையும் போல, யுதிஷ்டிரனே! உமக்குத் திரௌபதையும் போல், சாந்தா ரிஷ்யசிருங்கருடன் வனத்துக்குச் சென்று பிரீதியுடன் பணிவிடை செய்து தவத்தில் பங்கு பெற்றாள். ரிஷ்யசிருங்கருடைய ஆசிரமம் இருந்த இடம் இது. இந்த நதிக் கரையில் இறங்கி ஸ்நானம் செய்து பரிசுத்தனாகக் கடவாய்'' என்று லோமசர் யுதிஷ்டிரனுக்குக் கதையைச் சொல்லி முடித்தார். பாண்டவர்கள் அங்கே ஸ்நான ஜபங்கள் முடித்தனர்.

### 33. பயனற்ற தவம்: யவக்கிரீதன் கதை

பாண்டவர்கள் யாத்திரை போன காலத்தில் ஒரு நாள் ரைப்யருடைய ஆசிரமம் என்று வழங்கும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

''அதோ பார், கங்காதீரம்'' என்றார் லோமசர்.

''இதுதான் தசரத குமாரன் பரதன் ஸ்நானம் செய்த இடம். விருத்திரனை அதர்ம வழியில் கொன்றதனால் இந்திரன் அடைந்த பிரம்மஹத்தி தோஷம் இந்தத் தீர்த்தத்தில்தான் கழுவப்பட்டது. சனத்குமாரர் சித்தியடைந்த க்ஷேத்திரமும் இதுவே. தேவர்களின் தாயான அதிதி புத்திரப்பேறு பெற இந்த மலையில்தான் பொங்கல் வைத்தாள். யுதிஷ்டிரனே, இந்தப் புண்ணிய மலையில் ஏறி, உங்களுடைய புகழுக்கு வந்த இடையூறுகளையெல்லாம் போக்கிக் கொள்ளுங்கள். இங்கே ஓடும் கங்கையில் நீராடினால் ஆணவமும் குரோதமும் நீங்கும்'' என்று லோமசர் பாண்டவர்களுக்கு அந்த இடத்தின் மகிமையையெல்லாம் விளக்கிச் சொன்னார்.

''ரிஷி புத்திரனான யவக்கிரீதன் இவ்விடத்தில்தான் நாசமடைந்தான்'' என்று கதையைச் சொல்லுகிறார்:


''பரத்வாஜர், ரைப்யர் என்ற இரண்டு பிராமண சிரேஷ்டர்கள் வனத்தில் ஆசிரமங்கள் அமைத்துக்கொண்டு இருந்தார்கள். இருவரும் மிக நெருங்கிய சிநேகிதர்கள். ரைப்யரும் அவருடைய குமாரர்களான பராவசு, அர்வாவசு என்கிற இருவர்களும் நன்றாக வேதம் ஓதி, பெரிய வித்வான்களாகப் புகழ் பெற்றார்கள். பரத்

வாஜர் தவத்திலேயே தம் நேரத்தையெல்லாம் கழித்து வந்தார். பரத்வாஜருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் யவக்கிரீதன். பிராமணர் வித்வானான ரைப்யரை மதிப்பது போல் தன்னுடைய பிதாவை மதிக்கவில்லை என்பதை யவக்ரீதன் கண்டான். ரைப்யரும் அவர் குமாரர்களும் தங்கள் கல்வியின் பயனாக ஜனங்களிடம் அதிகமான மதிப்பைப் பெற்றிருப்பதைப் பார்த்து யவக்கிரீதன் பொறாமைப்பட்டுத் துயரம் அடைந்தான்.

யவக்கிரீதன் இந்தக் குறையைத் தீர்த்துக் கொள்ள இந்திரனைக் குறித்து, கடுந்தவம் புரிந்தான். நெருப்பில் தன் தேகத்தை வாட்டி, தேவராஜனுக்குச் சந்தாபம் உண்டாக்கினான். மனிதர்கள் தவம் செய்து உடலை வாட்டிக் கொள்வது தேவர்களைத் துன்புறுத்தும். யவக்கிரீதனுடைய கடுந் தவத்தைக் கண்டு தேவராஜன் இரங்கி, ''ஏன் இந்தக் கோரமான தவம்?'' என்றான்.

''பிராமணர்கள் இதுவரையில் ஓதியிராத வேதங்கள் எல்லாம் எனக்கு வர வேண்டும். நான் பெரிய வித்வானாக வேண்டும். அதற்காக இந்தத் தவம் செய்கிறேன். குருவின் வாயால் நீண்ட காலம் ஓதிக் கஷ்டப்பட்டு வேதங்களை அடைய வேண்டியதாயிருக்கிறது. அவ்வாறு இல்லாமலே அடைய நான் தவம் செய்கிறேன். எனக்கு அருள்வாயாக'' என்றான் யவக்கிரீதன்.

இந்திரன் நகைத்தான். ''பிராமணனே! நீ வழியில்லாத வழியில் செல்லுகிறாய். திரும்பிப் போய்த் தகுந்த குருவை நாடிக் கற்றறிந்து வேதங்களை அடைவாயாக. படிப்புக்கு வழி தவமல்ல; படிப்புக்கு வழி படிப்பேயாகும்'' என்று சொல்லிவிட்டு மறைந்தான்.



பரத்வாஜ புத்திரன் விடவில்லை. இன்னும் மிகக் கோரமான முறையில் தவம் செய்தான். அதனால் தேவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். இந்திரன் மறுபடியும் வந்து யவக்கிரீதனைப் பார்த்து, ''சரியாக ஆராய்ந்து விஷயத்தை அறிந்து கொள்ளாமல் இந்தக் காரியத்தில் பிரவேசித்திருக்கிறாய். உன் தகப்பனாருக்கு வேதம் தெரியும். உன்னாலும் ஓத முடியும். போய்க் கற்றுக் கொண்டு வேதங்களை அடைவாயாக. உடலை வாட்டித் தவம் செய்வதை நிறுத்து'' என்றான்.

இவ்வாறு இந்திரன் இரண்டாம் முறை சொன்னதையும் யவக்கிரீதன் கேட்கவில்லை. ''என்னுடைய விருப்பத்தை நீ செய்யாமல் போனால் என்னுடைய சரீர அங்கங்களை ஒவ்வொன்றாக வெட்டி நெருப்பில் போட்டு ஹோமம் செய்யப் போகிறேன். விடுவதில்லை'' என்றான்.

அவ்வாறே கடுந்தவம் செய்தான். தவத்துக்கிடையில் ஒரு நாள் காலை, கங்கையில் ஸ்நானம் செய்யப் போனான். அங்கே நோய்ப்பட்டு மெலிந்திருக்கும் ஒரு வயோதிகப் பிராமணன் கங்கைக் கரையில் உட்கார்ந்து கொண்டு, பிடிப்பிடியாக மணலை எடுத்துத் தண்ணீரில் போட்டுக் கொண்டிருந்தான்.

'' என்ன செய்கிறாய், கிழவா ?'' என்று கேட்டான் யவக்கிரீதன்.

''கங்கையைத் தாண்டச் சேது ஒன்று கட்டுகிறேன். இங்கே நதிக்குக் குறுக்காக ஒரு மணற் சேது கட்டிவிட்டால் ஜனங்களுக்குச் சௌகரியமாக இருக்கும். இப்போது கங்கையைத் தாண்டிப் போக ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் இந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறேன்'' என்றான் அந்தக் கிழவன்.

யவக்கிரீதன் நகைத்து, ''ஓடும் ஆற்றை இம்மாதிரி தடுத்துச் சேதுவை உண்டாக்க முடியாது. எழுந்து வேறு காரியம் செய்'' என்றான்.

''தாங்கள் வேதங்களை ஓதாமலே அடையப் பெருந் தவம் செய்கிறீர்கள் அல்லவா? அவ்விதமே நானும் கங்கைக்குச் சேதுவைக் கட்ட முயற்சி செய்கிறேன்'' என்றான் கிழவன்.

யவக்கிரீதனுக்குக் கிழவன் யார் என்று இப்போது தெரிந்து விட்டது.

'' தேவராஜனே ! என்னுடைய முயற்சி வீண் என்று எண்ணுவதாயிருந்தால், எவ்வாறு நான் வித்துவான் ஆவேனோ,அவ்வாறு எனக்கு வரம் தருவாயாக'' என்று மறுபடியும் யவக்கிரீதன் இந்திரனை வருந்திவேண்டினான்.

''சரி, வரம் தந்தேன். போய் வேதங்களை அத்தியயனம் செய். நீ வித்துவான் ஆவாய்'' என்று இந்திரன் யவக்கிரீதனை ஆசிர்வதித்துத் திருப்தி செய்தான்.

## 34. யவக்கிரீதன் மாண்ட கதை

யவக்கிரீதன் வேதம் ஓதிப் பாண்டித்தியமும் அடைந்தான். ''நான் இந்திரனிடம் வரம் பெற்று வேதங்களை அடைந்தேன்'' என்று மிகுந்த கர்வம் கொண்டவனாக அலைந்தான். பரத்வாஜருக்கு இது பிடிக்கவில்லை. தம்முடைய நண்பர் ரைப்யரை இவன் அவமரியாதை செய்துவிட்டு நாசத்தைச் சம்பாதித்துக் கொள்வான் என்று பயந்தார்.

''பிடிவாதத் தவம் செய்யும் அற்பர்களுக்கும் தேவர் வரங்களைக் கொடுப்பார்கள். அதனால் அவர்கள் அடக்கத்தை இழந்து மதிமயங்கிப் போய்ச் சீக்கிரமே அழிந்து போவார்கள்'' என்று பரத்வாஜர் மகனுக்குச் சொன்னார்; புராணக் கதை ஒன்றை யவக்கிரீதனுக்கு உதாரணமாகவும் சொன்னார்.

முன்னொரு காலத்தில் பாலதிஷி என்ற ஒரு புகழ்பெற்ற ரிஷி இருந்தார். அவருக்கு ஒரு குமாரன் இருந்தான். அவன் இறந்து விட்டதைப் பார்த்து ரிஷியானவர் சோகத்தால் வருந்தி, சாகாத ஒரு மகனை அடைய வேண்டும் என்று பெருந்தவம் செய்தார்.

''மனித ஜாதி சாகாத வரம் பெற முடியாது. ஆயுளுக்கு ஒரு வரம்பு இருக்கத்தான் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு வரம்பு இஷ்டப்படி நீரே வைத்துக் கேளும்'' என்று தேவர்கள் ரிஷிக்குச் சொல்ல, அவரும், ''சரி, அப்படியானால் அதோ அந்த மலை இருக்கும் வரையில் என் மகனுடைய உயிரும் இருக்கக் கடவது'' என்றார். அவ்வாறே வரம் பெற்றார். பிறகு, அவருக்கு ஒரு மகன் உண்டானான், அவன் பெயர் மேதாவி.

தன்னுடைய உயிருக்கு அபாயமே இல்லை; மலைபோல் ஸ்திரமாக இருக்கலாம் என்று மேதாவி கர்வம் கொண்டான். எல்லாரிடத்திலும் மரியாதையின்றி நடந்து கொண்டு வந்தான்.

ஒருநாள் இந்தத் துஷ்டன் தனுஷாக்ஷர் என்கிற மகாத்மாவினிடம் அபசாரமாக நடந்து கொண்டான். அவர் உடனே, ''நீ சாம்பலாவாய்'' என்று சாபமிட்டார்.

ரிஷி குமாரனான மேதாவியோ அந்தச் சாபத்தினால் ஒரு விதத்திலும் துன்பம் அடையாமல் ஆரோக்கியமாகவே நின்றான். இதைக் கண்டு வியப்படைந்த பெரியவருக்கு இவன் பெற்றிருந்த வரத்தைப் பற்றி நினைவு வந்தது.

'அப்படியா!' என்று தனுஷாக்ஷர் தன்னை ஒரு காட்டெருமையாகச் செய்து கொண்டு தன்னுடைய தவ வன்மையால் மலையை முட்டி உடைத்தார். மேதாவியின் ஆயுள் தீர்ந்து அவன் இறந்து கீழே விழுந்தான்.

''இந்தப் புராணக் கதையிலிருந்து அறிவு பெறுவாயாக. வரங்களைப் பெற்றுக் கர்வப்பட்டு அழிந்து போக வேண்டாம். அடக்கத்துடன் இருப்பாயாக. மரியாதையை மறக்காதே. மகான் ரைப்யரிடம் போகாதே'' என்று பரத்வாஜர் யவக்கிரீதனுக்கு எச்சரிக்கை செய்தார்.


பாபநாசம் சிவன்

**கீர்த்தன மாலை**

இரண்டாம் பாகம்

ஸ்வரப்படுத்தப்பட்ட

101 கீர்த்தனங்கள்

விலை ரூ. 8

தபால் செலவு தனி

கிடைக்குமிடம்:

திரு பாபநாசம் சிவன்

9, சீனிவாசன் தெரு, சென்னை-28


**வ**சந்த காலம். மரங்களும் செடிகளும் கொடிகளும் எல்லாம் அழகிய மலர்கள் நிறைந்து வனம் சோபித்தது.

உலகமெல்லாம் மன்மதன் வசம் இருந்தது. ரைப்யருடைய ஆசிரமத்தில் புஷ்பித்த செடிகளின் மத்தியில் பராவசுவின் மனைவி தனியாக நடந்து கொண்டிருந்தாள். அழகும் தைரியமும் பரிசுத்தமும் ஒன்றுகூடி ஒரு கின்னர ஸ்திரீயைப் போல் விளங்கினாள். அச்சமயம் யவக்கிரீதன் அவ்விடம் வந்து அவள் வடிவத்தைப் பார்த்து மன மாறுதலை அடைந்தான்.

காமத்தால் மதியிழந்த யவக்கிரீதன், ''அழகியே இங்கே வா!'' என்று அவளை அழைத்தான். அவள் வியப்பும் வெட்கமும் அடைந்தாள். ரிஷிபுத்திரனுடைய சாபத்துக்குப் பயந்து அவன் சொன்னபடியே அவன் நின்ற இடத்துக்குச் சென்றாள். அவன் அவளைத் தனி இடத்துக்கு அழைத்துச் சென்று காம மயக்கத்தால் தூண்டப்பட்டு, அவளுக்கு வெட்கம் உண்டாகும்படி நடந்து கொண்டான்.

ரைப்யர் ஆசிரமத்துக்குத் திரும்பி வந்தார். நடந்த நிகழ்ச்சியால் துன்புறுத்தப்பட்டு அழுது கொண்டிருந்த மருமகளைப் பார்த்து, ''ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?'' என்று விசாரித்தார். நடந்த அவமானத்தைச் சொன்னாள். ரைப்யர் கோபாவேசமாகித் தன் தலையிலிருந்து ஒரு ரோமத்தைப் பிய்த்து அக்னியில் மந்திரம் சொல்லிப் போட்டார்.

அவருடைய மருமகளின் அழகுக்குச் சமமான வடிவம் கொண்ட ஒரு பெண்ணுருவம் ஹோமத் தீயிலிருந்து கிளம்பிற்று. மறுபடியும் ஜடையிலிருந்து ரோமத்தை எடுத்து ஹோமம் செய்தார். அதன் பயனாக ஒரு பயங்கரமான பூதம் நெருப்பிலிருந்து கிளம்பிற்று. இந்த இரண்டு உருவங்களையும் பார்த்து ரைப்யர், ''போய் யவக்கிரீதனை வதம் செய்யுங்கள்'' என்று நியமித்தார். ''அப்படியே!'' என்று அந்த இரு பூதங்களும் சென்றன.

காலைக் கடன் கழித்துக் கொண்டிருந்த யவக்கிரீதனருகில் பெண் பூதம் சென்று நகைத்தும் விளையாடியும் அவனை ஏமாற்றி அவன் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு போய் விட்டது. அந்தச் சமயத்தில் ஆண் பேய் சூலத்தைக் கையில் ஓங்கி ரிஷி குமாரன் மேல் பாய்ந்தது.

யவக்கிரீதன் பயந்து எழுந்தான். அசுத்த நிலையில் தன் மந்திரங்கள் உதவமாட்டா என்று அறிந்து, கால் கழுவக் கமண்டலம் எடுக்கப்போனான். அது இல்லாததைக் கண்டு தண்ணீர் இருக்கும் குளத்தைத் தேடி ஓடினான். குளம் வற்றிக் கிடந்தது. பக்கத்திலிருந்த ஓடைக்குச் சென்றான். அதுவும் வற்றிக் கிடந்தது. இவ்வாறே எங்கு சென்றாலும் தண்ணீர் கிடைக்கவில்லை. பயங்கரத் தோற்றத்துடன் பூதம் துரத்திக் கொண்டே வந்தது. எங்கும் தண்ணீர் காணாமல் அரக்கனால் துரத்தப்பட்டு விரத வலிமையிழந்து ஓடிய யவக்கிரீதன், கடைசியாகத் தன் தகப்பனாருடைய அக்கினிஹோத்திர சாலைக்குள் புகுந்து தப்பித்துக் கொள்ளப் பார்த்தான். சாலை வாயிலில் இருந்த காவலாளி அரைக் குருடன். பயந்து கத்திக் கொண்டு ஓடி வரும் யவக்கிரீதனுடைய அடையாளம் தெரிந்து கொள்ளாமல், யாரோ என்று தடுத்தான். இதற்குள் அரக்கன் வந்து யவக்கிரீதனைச் சூலத்தால் குத்திக் கொன்றான்.

(தொடரும்)




ஆயிரமாயிரம் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட

அமரர் **கல்கி**யின்

மகோன்னதப் படைப்பு

# பொன்னியின் செல்வன்




**ஆகஸ்ட் 4ல்**
**கல்கி**
**இதழில் ஆரம்பம்**

# மலாய்
# சந்தன சோப்

# மலாய்
# சந்தன டால்க்



**இவை இரண்டும்
இணைந்தால்
சந்தனத்தின்
நறுமணம் நாள் முழுவதும் திகழும்.**




மலாய் சந்தன சோப்பின்
நறுமணம் இப்போது மலாய்
சந்தன டால்க் மூலம் உங்களை
நாடுகிறது. இவை இரண்டையும்
உபயோகித்தால் நீங்கள்
பெறுவது பேரானந்தம்.
மலாய் சந்தன சோப்பின்
மென்மை உங்களுக்கு
புத்துணர்ச்சியூட்டும். மேனியின்
அழகை மிகைப் படுத்தும்.
மலாய் சந்தன சோப்பால்
நீராடி, மலாய் சந்தன
டால்க் மூலம் மேனியை
சீராடினால் காலமெல்லாம்
புத்துணர்ச்சியுடன் இருக்கலாம்
நீங்கள். அது கோடையில்
குளிர்ச்சியூட்டி தேகத்தில்
நறுமணம் பரவச் செய்யும்.

தி கல்கட்டா கெமிகல்
கம்பெனி லிமிடெடின்
தயாரிப்பு.

MLT 3757 TAM



# இனிக்கும் நினைவுகள்

கோமகள்

## 11. நினைவின் நிழல்

ஒரு மாதம், முப்பது நாட்கள் ஓடி விட்டன.

புதிய மருந்தின் குணமும், அதன் பலனைப் பெற்ற செல்லம்மாவின் சுக நிலையும் வசந்தனுக்குப் பெருந்த தெம்பாய், பெரும் ஆறுதலாய் நின்றன. உலகில் பிறக்கும் நிம்மதி யாவும் அவனுக்கே பிறந்ததுபோல் உணர்ந்தான் அவன். அம்மாவுக்கு நோய் என்பதே அறிவு கூறும் பொய்யாகவும், நினைவு கூறும் மெய்யாகவும் இருப்பது போல் இருந்தது. அந்தப் பொய்ப் பின்னணியிலேயே அவன் கலகலப்பை உணர்ந்தான்.

தன் கையாலேயே, முழங்கையின் மேற்புறத்தில் கொழுவிக் கிடந்த பகுதியை அணைத்துப் பிடித்துக் காட்டி, ''பாரடா, வசந்த்! இரண்டு விரலளவு சதை பிடித்திருக்கிறது!'' என்று அன்னை கூறும்போது வசந்தனின் பரவசத்தைச் சொல்லி முடியாது.

''அம்மா! அம்மா!''

எத்தனை இனிமையான சொல்! உலகுக்கு முதல் குரல் கொடுக்கும்போதும், துன்பத்தில் துடிக்கும்போதும் அந்தத் தண்மையான சொல்லை உச்சரிக்கும் போதுதான் எத்தனை இதம் ஏற்படுகிறது! பெற்றவளை நினைவு தெரியு முன்பே, 'அம்மா' என்று அழைக்கிறதே, குழந்தை, அது குறிப்பிட்ட வயதடையும்வரை அன்னைக்கு நிம்மதியான இரவுத் தூக்கம்தான் ஏது?— இப்படி எண்ணியவன், நாளுக்கு நாள் புதிய பலம் பெருகி வரும் தாயைப் பார்த்துப் பூரித்துப் போனான். அப்படி நோக்கும் போது அம்மா என்ற உருவின் புறச் சின்னங்களும் அவனுக்குப் புலப்படாமல் போகவில்லை. அவள் கிழிந்திருக்கும் ஒரு சாயம் போன புடவையை உடுத்தியிருந்தாள். புடவையின் கீழ் ஓரங்கள் நைந்து, நூலிழைகள் தொங்கின. வெள்ளை வாயில் ரவிக்கை தூய்மைக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தது. கைகளில் மெல்லிய ஒற்றைப் பொன் வளையல்கள். கழுத்தில் மங்கலப் பொன்னணி. காதிலும் மூக்கிலும் கிடந்த ஆபரணங்கள் எண்ணெயும், மஞ்சளும் இறங்கிக் கறுத்துக் கிடந்தன. நெற்றியில் அளவான வாடாமல்லிகை வண்ணக் குங்குமப் பொட்டு. அந்த எளிமையிலேயே தெய்வீகக் களை பிரதிபலித்தது! அம்மா இளமையில் எத்தனை அழகாக இருந்திருப்பாள்! இன்னும்கூட அவள் தலை முடி உதிராமல் முதுகில் அடர்ந்து கிடக்கிறது!

''ஏனம்மா சாயம் போன புடவையை உடுத்தியிருக்கிறாய்?''

''பின்னே கிழியும் முன் வீசி எறிந்து விடுவதா?''

''போனால் போகிறதம்மா. இதையெல்லாம் எறிந்துவிட்டு வேறு கட்டிக் கொள்!''

செல்லம்மா சிரித்துக் கொண்டாள். ''என்னிடம் இருக்கும் நாலைந்தில் இவை தானடா நல்லவை.''

இதைக் கேட்டதுமே அவன் கண்கள் புனலூர ஆரம்பித்து விட்டன.

''தூய்மையாக, அழுக்கு இல்லாமல் இருப்பது போதாதாடா வசந்த்?'' புன்சிரிப்போடு அம்மா கேட்டபோது அவள் முகத்தில் எவ்வித ஏக்கமும் இல்லை. உலக ஆடம்பரங்களையெல்லாம் தன் தியாகம் ஒன்றினால் மட்டும் தூரத்தில் தள்ளிவிட்டு, குடும்பம் என்னும் மகா சமுத்திரத்தில் உழைப்பு என்னும் ஞானத்தால் உலக சுகம் கண்ட திருப்தி விரிகிறது. தெய்வ சந்நிதானத்தில் ஆராதனையின்போது ஏற்படும் திருப்தி அது.

அடுத்த நாளே வசந்தன் அரக்கு நிறத்திலும், மேக வண்ணத்திலுமாக இரண்டு அழகிய புடவைகளை எடுத்து வந்து விட்டான். பொருளாதாரத்தை முன்னிட்டு அதை வாங்கியதில் வருத்தமும், பாசத்தை முன்னிட்டு அதை வாங்கியதில் திருப்தியுமாகச் செல்லம்மா அவைகளைப் பெற்றுக் கொண்டாள்.

அன்று மீனாட்சி சுந்தரத்திடம் தாயின் உடல் நிலை பற்றிக் கூறிவரச் சென்றிருந்தான் வசந்தன். அப்போதே அவர் அவனையும் அழைத்துக்கொண்டு தாம்பரம் சானடோரியத்துக்குத் தம் காரிலேயே வந்துவிட்டார். வசந்தனின்

அம்மாவுக்கு அவரைக் கண்டதும் ஒரே பரபரப்பு. கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

மீனாட்சிசுந்தரம் தாம் வாங்கி வந்திருந்த மலைப் பழங்களையும் ஆப்பிளையும் எடுத்துப் படுக்கையின் மீது வைத்தார்.

''இதெல்லாம் என்னத்துக்குங்க? நீங்கள் காட்டிய அன்பு ஒன்றே போதாதா? வசந்தன் சொன்னான். இந்தக் காலத்தில் உங்களைப் போல் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என்று நன்றிப் பெருக்கில் திணறினாள் செல்லம்மா.

''என்னை எதற்குப் புகழ்கிறீர்கள்? உங்கள் மகன் வசந்தனைப் போன்ற பிள்ளைகளை இந்தக் காலத்தில் காண்பது அரிது. இந்தக் காலத்துப் பிள்ளைங்களைப் போல அவன் கெட்டுப்போகவில்லை; ஹாஸ்டலிலே சேர்ந்தும் கூட!'' என்றார் மீனாட்சிசுந்தரம்.

செல்லம்மாவுக்கு மனத்துள் மகிழ்ச்சி பொங்கிற்று. வசந்தனைப் பற்றிப் பெருமைப்பட்டாள். பேச்சு வாக்கில், ''உங்களுக்கு எத்தனை குழந்தைகளோ?'' என்று கேட்டு வைத்தாள்.

''ஒரே பெண். குழலி என்று பெயர்.''

''உங்கள் நல்ல குணத்துக்கு உங்கள் பெண்ணுக்கு நல்வாழ்க்கை அமைய வேண்டும்.''

''உங்கள் ஆசீர்வாதம் பலிக்கட்டும்'' என்று கூறியவர் விடை பெறும் முறையில் எழுந்தார்.

''ஒன்றுமே உங்களுக்குத் தந்து உபசரிக்க முடியவில்லையே! இதுதான் என் குறை.''

''அந்தக் குறை உங்களுக்கு எதற்கு? இதோ உங்களிடம் இருக்கும் மலைப் பழத்தில் ஒன்றை எடுத்துக் கொள்ளுகிறேன்'' என்றவாறே சீப்பிலிருந்து ஒரு பழத்தைத் திருகிக் கொண்டு கைகூப்பி விடைபெற்றார் அவர்.

அதன் பின் வசந்தனை எதிர்பாராமலேயே மீனாட்சிசுந்தரம் தனியாகச் செல்லம்மாவைப் பார்க்க இருமுறை வந்துவிட்டார்.

ஒரு செல்வந்தர் இத்தனை எளிமையாகத் தன்னை வந்து கண்டு செல்வதும், படாடோபமின்றிப் பேசுவதும் அவரைப்பற்றிச் செல்லம்மாவின் மனத்தில் மலையளவு மதிப்பை ஏற்படுத்தின. உலகின் எந்த மூலையில் இருப்பவர்கள் எல்லாமோ சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வாய்க்கும்போது எப்படித்தான் அறிமுகமாகிவிடுகிறார்கள்! இப்படி நினைத்த செல்லம்மாவுக்கு 'மாதாஜி' என்று அழைத்தவாறே வளைய வளைய வந்த இளமை பொங்கும் சாவித்திரியின் நினைவு வந்தது. இப்படி நினைவு வரும் பொழுதெல்லாம் அவள் ஆத்மாவின் சாந்திக்காகக் கடவுளைத் துதிப்பாள். ஊரை விட்டு வந்து வெகு நாட்களாகிவிடவே, செல்லம்மாவுக்குக் கணவரையும், மகள் கீதாவையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை தோன்றியது. நாளுக்கு நாள் அது வளரவே, ஒரு கடிதம் எழுதிப் போட்டாள். அடுத்த மூன்றாம் நாளே சீதாபதி செல்லம்மாவுக்கு உகந்த பதிலாக எழுதியிருந்தார், கீதாவை அழைத்துக்கொண்டு இரண்டு வாரங்கள் கழித்து வருவதாக. அதைக் கண்டதும், அந்த அன்னையின் மகிழ்ச்சி பெருகியது.

அன்று மாலை வசந்தன் வந்ததும் கடிதத்தை எடுத்துக் காண்பித்தாள். வசந்தன் யோசனையோடு அதைப் படித்தவாறே, ''எனக்குக்கூட அப்பா எழுதியிருந்தார் அம்மா. ஆனால் கீதாவும் கூட வருவதால் எங்கு தங்க வைப்பது என்று யோசிக்கிறேன். ஒரு வாடகை அறை எடுத்துவிடட்டுமா? அப்பா மட்டுமானால் என் அறையில் கூடத் தங்கிக் கொள்ளலாம்'' என்றான்.

''என்னடா வசந்த்? அதை யோசிக்காமல் நான் எழுதிப் போட்டு விட்டேனே. வாடகை அறை என்றாலே உன் அப்பாவுக்குப் பிடிக்காதேடா'' என்று வருந்தும் குரலில் கூறினாள்.

''இடையில்தான் இரண்டு வாரம் இருக்கிறதே! யாராவது எனக்குத் தெரிந்த நண்பர்கள் வீடு இருக்கிறதா என்று பார்ப்போம். நீ இது குறித்து மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே.''

''ஏண்டா வசந்த்! கீதாவை வர வேண்டாமென்று எழுதிவிடவா?''

''என்னம்மா, நான்தான் கவலையை விடு என்கிறேனே!''

''சரி, விட்டு விடுகிறேன். ஆமாம், திவாகர் அப்புறம் ஏன் வரவேயில்லை? அவனை ஒரு முறை வரச் சொல்லேன்.''

''அவன் நான் முன்பிருந்த பிரசவ ஆஸ்பத்திரியில் போய் மாட்டிக்கொண்டான் அம்மா. இரவு பகல் வேலை. பாரேன், அம்மா. நாங்கள் ஆண்களாக இருந்தும், படிப்பை முன்னிட்டுப் பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருக்கிறது!''

''ஒரு விஷயம், வசந்த். எனக்கு ரொம்ப நாட்களாகச் சொல்ல வேண்டுமென்ற ஆசை. கீதா இங்கு வரும்போது ஒரு டாக்டரிடம் காட்டேன்.''

''ஓ! பேரப்பிள்ளை ஆசையா?''

''எனக்கு அப்படியெல்லாம் ஆசை கிடையாதப்பா! ஆனாலும் ஒரு பெண்

ணுக்கு மழலை இன்பம் இல்லையென்றால் அப்புறம் என்னடா இருக்கு?''

''சரி! சிதாவை அழைத்துப் போய் நல்ல கெட்டிக்கார டாக்டரிடம் காட்டுகிறேன்'' என்றான் வசந்தன்.

இரண்டு மூன்று நாட்களாகவே இதமான மழைத் தூற்றல்கள் உதிர்ந்து, வானம் மப்பும் மந்தாரமுமாகக் கிடந்தது. விடியற்காலை குளிர்ச்சி, படுக்கைக் கதகதப்பின் இனிய சுகத்தைக் காட்டி மேலும் கொஞ்ச நேரம் படுத்துக் கொண்டு கண்களை மூடிக் கொள்ளச் செய்தது.

''கிணுங்.... கிணுங்... கிணுங்...''

அலாரம் நடுங்கிக் கூவியது.

சீலியா கைக்கெட்டும் தூரத்திலிருந்த அந்தக் கடிகாரத்தின் உச்சிக் குமிழை அழுத்திவிட முயன்றபோது மற்றொரு கை அதைத் தடுத்தது.

''என்னடி சீலியா! எழ மனமில்லையா?'' — கேட்டது பாரதியின் குரல்.

பக்கத்துப் பக்கத்துக் கட்டில்களிடையே தலைமாட்டில் இருந்த மேஜை மீதுதான் அந்தக் கடிகாரம் வைக்கப்பட்டிருந்தது. கடிகாரம் அலாரம் தீர்ந்து ஓய்ந்ததும் பாரதி எழுந்து கட்டிலில் உட்கார்ந்தாள். சீலியா மறுபுறம் திரும்பிப் படுத்துவிட்டாள்.

சீலியாவுக்குப் பாதி உறக்கம் என்றால் பாதி கனவு மயக்கம். விடியற்காலைத் தூக்கத்தில் இனிய சுகமாக அது வளர்ந்து வந்தது.

சூரிய ஒளிக் கிரணங்கள் படரவாரம்பித்தன. பாரதி குளித்துவிட்டு வந்தபோது வராந்தாவில் நின்ற பெண்கள் குழாமில், ''காப்பியம்'' இதழ் விரிந்து சர்ச்சைக்கும் விவாதத்துக்கும் இடமாகி நின்றது. ''நிச்சயம் அவர்தான்'' என்றாள் ஒருத்தி.

''அவர் ஒருத்தர்தான் வசந்தனா?''

''முதலில் அவருக்குப் போது ஏது?''

''உணர்ச்சி இருந்தால் தானாகப் போது வாய்க்கும்.''

''இதோ, பாரதி வருகிறாளே, கேட்டால் தெரிகிறது..''



''பாரதி, பாரதி!

கைத்தட்டலோடு விளித்த குரல்கள்; ஒவ்வொன்றும் ஒரு விதம். வீணையின் ஒரு மீட்டல். ஜலதரங்கத்தின் ஒரு தட்டு, ஹார்மோனியத்தின் ஓர் அழுத்து, வயலினின் ஓர் இழுப்பு — இத்தனையையும் ஏககாலத்தில் அனுப விக்கும் கலவை சங்கீதம்!

''இங்கே பாரடி இவளே! யாரோ வசந்தனும். அவர் எழுதிய 'அன்னை' என்ற கதைக்கு முதற் பரிசு. தமிழரசி எழுதிய 'பொற் கனவு'க்கு இரண்டாம் பரிசு. தமிழரசியை 'பீட்' டடிக்கவே ஒருத்தன் வந்தாச்சு.''

''என்ன?'' பதறினாள் பாரதி. பத்திரிகையைப் பிடுங்கி நோட்டம் விட்டாள். கேட்டதெல்லாம் உண்மைதவிர வேறில்லை. ''தமிழரசிக்கு இரண்டாம் பரிசா ? வசந்தனுக்கு முதல் பரிசா ? யார் இந்த வசந்தன்? புது 'ரைட்டர்' போலிருக்கு.''

''நாங்கள் உன்னைக் கேட்டால் நீ எங்களைக் கேட்கிறாயா? ஒருவேளை இந்த வசந்தன்தான் அந்தப் 'பரமஹம்ஸன்' வசந்தனோ ?''

''பிரசவ ஆஸ்பத்திரியில் சீலியாவின் 'பார்ட்ட'னராக இருந்தானே!''

அந்தக் குழப்பம் பாரதியைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு அறைக்கு வந்தாள். அங்கே சீலியா இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். சூரிய ஒளிக் கதிர்கள் அவள் தோள் மீது கீற்றுக்களாகப் பதிந்து கிடந்தன. பாரதி அவள் தோள்களை ஆவேசமாகப் பற்றி உலுக்கினாள். ''உன் திறமைக்குத் தூக்கம் ஒரு கேடா ? உன்னை வெல்வதற்கு ஒருத்தன் பிறந்துட்டாண்டி சீலியா!'' என்று விளையாட்டான ஏளனத்தில் கத்தினாள். சீலியா அதிர்ந்தாள். 'என்ன வந்து விட்டது உனக்கு?' என்று கேட்பது போல் விநோதமாகப் பார்த்தாள்.

''பார் சீலியா! 'காப்பியம்' போட்டி முடிவு வெளியாகி விட்டது. முதற்பரிசு யாரோ வசந்தனுக்காம். இரண்டாம் பரிசுதான் உனக்கு!''

''வசந்தனுக்கு முதற் பாிசு!''

சீலியாவின் வாய் முணுமுணுத்தது.

பாரதி புரியாமல் குழம்பினாள்.

''பாரதி ! இந்த வசந்தன் யார் தெரியுமா? என்னுடைய பார்ட்னராக இல்லை ? அவரேதான்!''

''அது யாரடி அந்த 'அவர்'?...'' கொஞ்சம் கேலியாக வந்தது கேள்வி.

அந்தக் கேலிக் குத்தலை உணராத பாவனையிலேயே சீலியா பேசினாள் :— ''டாக்டர் வசந்தன்தான்! ஒருவகையில் சொல்லப் போனால் இந்த வெற்றி என் வெற்றிதான்!''

''ஓகோ !'' சீலியாவின் செழுமையான கன்னங்களைச் செல்லமாகத் தட்டினாள் பாரதி.

''என்ன பாரதி இது!'' ஒரு குலுக்கலுடன் விழித்தாள் அவள்.

''விஷ் யூ வெரி குட் லக், சீலியா !''

''தேங்க்யூ பாரதி! ஆனால் என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளாதே! நீ நினைப்பது போல்....''

''பின்னாடி நடக்கலாம். அப்படித் தானே?'' விநயமான அநுசரணையோடு கேட்டாள் பாரதி.

இதற்குச் சீலியா எவ்வித பதிலும் கூறவில்லை. அவள் காந்தள் விரல்களின் நகக் கண்களில் குபீரென ரத்தத்தின் சூடு உறைத்தது. மனம் நிறைவில் பூத்துத் தெளிந்து உறைந்து கிடந்தாற்போல் நெஞ்சு நிதானமான மூச்சிழைகளால் உயர்ந்து தாழ்ந்தது. ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும் அவர் அவருக்கும் தனித் தனி தனிமையுணர்வு சூழ் உலகம் உருவாகி விடுகிறது. அதனூடே அன்புத் தடாகத்தில் ஜலக்கிரீடை செய்யும் மனம். தங்கக் குழம்பாக ஜொலித்திடும் உள்ளக் கிளர்ச்சி. தனக்குள்ளேயே மன்றாடி, முறையிடும் மதுர பாவம். இப்படி அலுங்காமல், நலுங்காமல் அந்தப் பிரேம பீடம் சமைந்து விடுகிறது. இதை ஓரளவு புரிந்து கொண்ட பாரதிக்கு நினைக்கவே வியப்பு, பார்க்கவே பிரமிப்பு, உணரவே திகைப்பு!

''உம்! முதற்பரிசை மட்டுமா அவர் தட்டிக் கொண்டார். உன்னை இரண்டாம் பரிசு பெற வைத்துவிட்டு, அப்படியே உரியவளாகவும் தட்டிக் கொண்டிருக்கிறாரே!'' சீலியாவின் கைகளை அன்போடு குலுக்கிய போது, அந்த அழுத்தத்தினால் அன்பு இன்னும் இறுகி நெருங்குவதுபோல் இருந்தது. நாணம் மீதூரக் கண்களைத் தாழ்த்தினாள் சீலியா.

''பரிசளிப்பு விழா நேரில் நடைபெறுமாமே! முதன் முதலில் 'காப்பியம்' இதழ் காரியாலயம் புகுந்து உன் பெரியப்பாவை வணங்கி இரட்டை ஆசிகளைப் பெற்றுக் கொள். இது வரையில் உன் பெற்றோருக்கு மட்டும் தெரிந்ததை.... ஏன் மிஸ்டர் வசந்தனுக்கு நீ சொல்லியிருக்க மாட்டாயா என்ன? நீதான் 'தமிழரசி' என்பதை....?''

''அவருக்கு நான் சொல்லவில்லை, பாரதி. எப்படியோ என் பேச்சாலும், செயலாலும், 'காப்பியம்' காரியாலயக் கடிதத்தாலும் உணர்ந்து கொண்டார். நான் 'என் தோழி பாரதிதான்

'தமிழரசி' என்று எத்தனையோ முறை கூறினேன். அவர் நம்பவில்லை...''

''அட, அவர் பெருமையே! இது வரை எனக்கு மட்டுமே தெரிந்திருந்த தமிழரசியே! இதோ இப்போதே போய் ஹாஸ்டல் முழுதும் தம்பட்டம் அடிக்கப் போகிறேன். அதற்குமுன் நீ போய் குளித்து விட்டு வா. நான் மிஸ்டர் வசந்தனின் காதல் கதை எப்படி இருக்கிறது என்று பார்க்கிறேன்.''

சீலியா வழக்கமாக எடுத்துக்கொள்ளும் நேரத்தைவிட வெகு சீக்கிரம் வந்து விட்டாள். உடம்பில் சரிவரத் துடைபடாமல் முந்து முத்தாய்ச் சரிந்து நின்ற நீர் மணிகள் குளிருட்டின.

ஒரே மூச்சில் வசந்தனின் கதையையும், சீலியாவின் கதையையும் படித்து முடித்துவிட்டுக் காத்திருந்தாள் பாரதி. அவள் முகத்தில் ஊடாடிப் பரவிக் கிடந்த ரகசியப் பரிகாசத்தைச் சட்டெனப் புரிந்து கொண்ட சீலியா, பட்டுப் போன்ற தனது நீண்ட கூந்தலை விரித்து வாசனைத் தைலம் தடவினாள். பிறகு கண்ணாடி எதிரே நின்று கொண்டு சீவும் சாக்கில் கட்டிலில் உட்கார்ந்திருந்த பாரதியைக் கண்ணாடியில் பார்த்தாள். சீலியாவையே கண்கொட்டாமல் பார்த்திருந்த பாரதி கண்ணாடியில் சிரிக்கவும், சீலியாவும் சிரித்து விட்டாள். தோழிகளின் கலகலப்பில் விரவிக் கிடந்த சுமுக பாவம் மன நிறைவாய் மலர்ந்தது.

''ஏண்டி, சீலியா? நீ வசந்தனுக்கு 'க்ளூ' கொடுத்தாயா? நிஜத்தைச் சொல்லிவிடு......''

''இல்லை, நிச்சயமாக இல்லை. அவரே ஒரு 'சென்டிமெண்டல் டைப்' ஆயிற்றே! எழுதக் கேட்பானேன்?''

''ஓகோ! அப்படியா? அவரைப் பற்றி அக்குவேறு ஆணி வேறாக உணர்ந்து கொண்டு விட்டாயா இதற்குள்? நான்தான் ஒன்றையும் புரிந்து கொள்ளாமல் கிடக்கிறேனா? உன்னுடைய நாட்கள் ஒவ்வொன்றும் ஒரு சுவாரசியமான கனவாகக் கழிந்து கொண்டிருக்கிறது. 'உயிர்த்தோழி' என்பதில் உள்ள உயிரை என்னிடமிருந்து வெட்டி வேறிடத்தில் ஒட்டி விட்டாய் போலிருக்கிறதே! உண்மையில் எனக்கு வசந்தன் மீது பொறாமையே ஏற்படுகிறது. தான் உணரும் உணர்வையெல்லாம் ஒன்று விடாமல் என்னிடம் ஒப்புவித்துவிடும் என் சிநேகிதியை இப்படித் தயை தாட்சண்யமில்லாமல் பறித்துக் கொண்டு எனக்கும், அவளுக்குமிடையில் ஒரு திரையைப் போட்டு விட்டாரே!'' என்று கேலியாகக் கூற முயன்றாலும், பாரதியின் குரலிலிருந்த வருத்தம் சீலியாவுக்குப் புரிந்தது.

''ப்ளீஸ் பாரதி! நீ நினைப்பது போலெல்லாம் ஒன்றுமே இல்லை'' என்று மறுக்க முயன்றாலும், ஆட்பட்டுப் பிச்சியாகிவிட்ட மனம் தத்தளித்தது. நினைவின் நிழலை அப்படியே காட்டிக் கொண்டது முகம்.

''ஏனம்மா, சீலியா? அவர் கதையில் தாய்மையின் தூய்மை குவிந்து கிடக்கின்றது. உனது, 'பொற்கனா'வில் வெறும் காதலின் மாயா ஜாலம் ததும்புகிறது. பாவங்களே மாறி விட்டனவே?'' என்று வேடிக்கைக் குத்தலாகக் கேட்டாள் பாரதி.

''எனக்கு நேரமாகிறது'' என்று வெள்ளை ஓவர்கோட்டைக் கைகளில் மடித்துப் போட்டவாறே, 'ஸ்டெத்'தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் சீலியா.

''உம்! போ, போ! வார்டில் 'அவர்' காத்திருப்பாரே!'' என்று கேலியுடன் விடை தந்தாள் தோழி. **(தொடரும்)**


பெர்க்லி-கல்கி இலக்கியப் பரிசுத்திட்டம்

எழுத்தாளர்கள் அனைவரும் இந்தப் போட்டியில் பெருமளவில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கும் வகையில் முடிவுத் தேதியை ஒத்தி வைத்திருக்கிறோம்.

**முடிவுத் தேதி: அக்டோபர் 15, 1968**

இது பற்றி மேலும் விவரங்கள் தேவையானால் எழுத்தாளர்கள் **ஆசிரியர் கல்கி, சென்னை 10** என்ற விலாசத்துக்கு எழுதவும்.

# காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச் சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!




## பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க்—
மென்மை மிக்க மகோன்னத டால்க்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

**பாண்ட்ஸ்** ட்ரீம்ஃப்ளவர் வனிதைக்கு ஒரு பெயரை அளிக்கும் போட்டி. நீங்கள் கலந்து கொள்வீர்களா?

1ம் பரிசு: 4-டோர் ஹெரால்ட் கார் அல்லது ரூ 19,600 ரொக்கம்

2ம் பரிசு: லாம்ப்ரெட்டா ஸ்கூட்டர் அல்லது ரூ 3,300 ரொக்கம்

இன்னும் 150 அரிய பரிசுகள்!

[illegible]

[illegible]

கடைசி தேதி: 15 ஜூன் 1968



# தாமரை நெஞ்சம்

## வாடிய இதழ்கள் இவை :

❁ சரோஜா தேவி குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பேற்று அந்த வீட்டுக்குள் நுழைவது 'ஸவுண்ட் ஆஃப் மியூஸிக்' என்ற ஆங்கிலத் திரைப் படத்தை நினைவூட்டுகிறது. முடிவில் சரோஜா தேவி ஒவ்வொன்றாகத் தூக்க மாத்திரைகளை உண்டு தற்கொலை செய்து கொள்ளும்போது நாகேஷ் அவ ளிடம் டெலிபோனில் பேசியபடி அவள் இருப் பிடத்தைத் தெரிந்துகொள்ள முயலும் காட்சிகளில் 'தி ஸ்லெண்டர் திரெட்' என்ற ஆங்கிலத் திரைப் படத்தின் சாயல் அழுத்தமாகவே விழுந்திருக் கிறது. இந்த லட்சணத்தில் 'நான் என்ன காப்பி அடித்தா எழுதினேன்?' என்று சரோஜா தேவிக்கு ஒரு 'டயலாக்' வேறு. பரிதாபம்! ஒட்டுப் போடு வானேன்? அழுத்தமான நல்ல கதையைத் தேர்ந் தெடுத்துக் கதாசிரியருக்கு உரிய பெருமையை அளிக்கலாமே? அதனால் கௌரவம் கூடும்.

❁ இரண்டே செட் போட்டு நாடகம் தயாரிக்கும் நினைப்பிலே திரைப்படத்தையும் எடுத்துவிட்டாரோ? மாற்றி மாற்றி இரண்டு வீடுகளிலேயே நடக்கும் காட்சிகளைப் பார்ப்பது அலுப்புத் தட்டுகிறது.

❁ ஒரு கவிதை எழுதி அனுப்புகிறாள் அவள். அதைப் படித்துவிட்டுப் பாராட்டும் பத்திரிகை ஆசிரியை 'சிறுகதை எழுதுவாயா?' என்று கேட்கிறாள். அப் போது அவள் மளமளவென்று ஒப்பிக்கும் சிறு கதை வெறும் அபத்தம். அதைக் கேட்டுவிட்டு அந்தப் பத்திரிகை ஆசிரியை உடனே தொடர்கதை எழுதுவதற்கு அட்வான்ஸ் தருகிறாள்! இப்படி நடத்தப்படும் பத்திரிகை அந்தத் தொடர்கதை முடியும்வரை உயிருடன் இருக்காது, உறுதி!

❁ பொன்மொழிகள் நிமிஷத்துக்கு ஒன்றாகப் போரடிக்கும்வரை உதிர்ந்துகொண்டே இருக்கின்றன.

❁ கதாபாத்திரங்கள் தங்கள் மனத்துக்குள் எண்ணிக்கொள்வதை உரக்கவே சொல்லிக்கொள் கிறார்கள். அதாவது தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்கிறார்கள். அதுவும் அடிக்கடி. இது இன்றைய நாடக (சினிமா) உத்தியன்று. ரொம்பப் பழங் காலத்து பாணி. வார்த்தைகளின் துணையின்றிக் கதாபாத்திரங்களின் எண்ணங்களைப் பார்ப்பவர் புரிந்துகொள்ள வைப்பதிலேதான் டைரக்டரின் திறமை இருக்கிறது.

❁ குழந்தைகள் கூடி சரோஜாதேவியை 'கேரால்' செய்வது நன்றாக இருந்தாலும் அந்தப் பாட்டும் நடனமும் பாமா விஜயம் 'வரவு எட்டணா செலவு பத்தணா' வை ஞாபகப்படுத்துகின்றன.

## புதிதாய் அலர்ந்த இதழ்கள் இவை :

❁ பாலசந்தரது டைரக்ஷன் திறமை காட்சிக்குக் காட்சி புலனாகிறது. துக்கம் தொண்டையை அடைக் கும்போது தண்ணீரை மடமடவென்று குடிப்பது ஒன்று போதுமே!

❁ அபிநய சரஸ்வதி என்ற பட்டத்துக்குத் தாம் தகுதியுடையவரே என்பதை சரோஜாதேவி ஆரம்பம் முதல் கடைசிவரை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

❁ உணர்ச்சிமிக்க பல கட்டங்களுடன் படம் விறுவிறுப்பாகச் செல்கிறது.

❁ கும் குத்துச் சண்டை, சிக் உடை அலங்காரம், டுவிஸ்ட் நடனம் (குழந்தைகள் ஆடுவது தவிர)



ஆகிய எதுவுமே இல்லாதது நம்மை மகிழ்ச்சி அடையச் செய்கிறது என்றால் பார்க்கிலே ஓடி ஆடிக் காதல் பண்ணுவதும் கனவுக் காட்சியும் இல்லாதது நம்மைப் பரவசப்படுத்துகிறது. பாடல்களும் குறைவு. ஆபாசம் என்று கருதக்கூடிய காட்சியாக மாதிரிக்குக் கூட ஒன்றில்லை - பாராட்டுகிறோம்.

❁ சாதாரணமாக ஒருவருக்கு நேரும் துன்பத்தைக் கண்டு நாம் பச்சாத்தாபப்படுவதை விட நம்மைச் சிரிக்க வைத்து மகிழ்ச்சியில் ஆழ்த்தும் ஒருவருக்கு நேரும் துன்பம் கண்டு நாம் கொள்ளும் அநுதாபம் பல மடங்கு அதிகமாகவே இருக்கும். இந்த மன இயல்பை நன்கு புரிந்து கொண்டு முழுமையாகப் பயன்படுத்தி நம்மைக் கவர்ந்துவிடுகிறார் நாகேஷ்.

❁ கதாநாயகிகள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நிஜமாகம் செய்கையில் ஜெமினி கணேசனுக்கு அதிக முக்கியத்துவம் இல்லாது போகிறது. அதற்காகக் கிடைத்த வாய்ப்புக்களை அவர் கைநழுவ விட்டுவிடவில்லை.

**மலரைப் பற்றி :**

தாமரையின் அழகு நெஞ்சை நிறைத்தாலும் மணம் அசல் அல்ல ; இரவல் !

# மொழியின் தொல்லைக்கு / எல்லைக்கு அப்பால்!

## 'மௌனசாமி' காணுத பேட்டிகள்

**பழம்பட அபிமானி:**

தமிழ் நாட்டில் இந்திப் படம், தமிழ் நாட்டில் எடுத்த ஹிந்திப் படம் என்ற தொல்லைகளை நீக்க ஒரே வழி சொல்கிறேன். இந்த 'டாக்கி'களை எடுத்துவிட்டுப் பேசாமல் பழைய நாள் 'மூவி'களைப் போட்டு விடலாம். ஆகா! அந்த நாள் பேசாப் படங்கள் மறுபடியும் வராதா ?

**கீர்த்தனசுந்தரி பர்வதவர்த்தினி :**

பேச்சு எதுக்குங்க! அபிநயத்தாலே சொல்ல முடியாத பாவம் ஏதாவது உண்டான்னு எங்க குரு மொரந்தநல்லூர் வாத்யாரு அடிக்கடி சொல்லுவாங்க...

**கப்பல் காப்டன் :**

பல தேசக் கப்பல்கள் கடலில் சந்தித்தால் நாங்கள் பேசவா போகிறோம்? கொடியைக் கையில் எடுத்துக் கைசாடையிலே எவ்வளவு சமாசாரம் தெரிவிக்கிறோம் ! இப்படியே நீங்களும் செய்யலாமே!

**தந்திக்காரர் :**

கட்டுக்கட கட்டுக்கட கட்டு என்று தட்டுவதை விட்டு விட்டு நீங்க ஒண்ணு! ஒன்றே மொழி அதுவே 'கடகட கட்டு!' அதையே தட்டு !

**ஊமைப் பள்ளிக்கூட நிர்வாகி :**

எத்தனையோ மொழி பேசுவோர் பெற்ற குழந்தைகள் இங்கே பேசும் ஒரே மொழி — மௌனம். இங்கே பூசல் இல்லை. இதையே நீங்கள் முயன்று பார்க்கலாம்.

**மயிலை சம்ஸ்கிருதக் கல்லூரி வாயிலில் வீற்றிருப்பவர் :**

கண்ணொடு கண் இணை
நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல.

— 'சிரி வாசன்'









# சுத்தமான
# மனம் கவரும் வெண்மைக்கு





## சிங்கம் மார்க்
## விக்டோரியா
## ப்ளூ ஓ ஓ பி (OOB)
(மிகச் சிறந்த நீலம்)

சிறிதளவே விக்டோரியா ப்ளூ ஓ ஓ பி உபயோகித்ததில் உங்கள் ஆடைகளுக்குத்தான் என்ன வெண்மை! ஆடைகளை பளபளப்பான வெண்மையாக்குகிறது. உங்களுடைய சட்டைகள், வேஷ்டிகள், விரிப்புகள் முதலியவைகளை அதிக வெண்மையுடன் வைக்க இதுவே சிறந்த சிக்கனமான முறை.

**தயாரிப்பாளர்கள்: அல்ட்ராமரீன் & பிக்மெண்ட்ஸ் லிமிடெட், அம்பத்தூர், மதராஸ் 53**

**ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: கெம்டைல் ட்ரேடிங் கம்பெனி, 318, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ் 1.**



முக்காடிட்ட உருவத்திடமிருந்து விடுபட்ட அம்பு வஞ்சகன் வஜ்ரகீர்த்தியின் நெஞ்சத்தைத் துளைத்துக் கொண்டு வெளிப்பட்டது. பாதாளப் பெருகுழிக்குப் பலி யானான் பாவி...
23
ஓநாய்க் கோட்டை
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
முக்காடிட்ட உருவம் தூலாக் கோலின் — மையத்துக்கு வந்து வந்தது...
தூலாக் கோலை இந்தப் பெரு மரத்தோடு இணைத்துக் கட்டி விடுகிறேன். நடுக்குழியிலிருந்து கயிற்றைப் பற்றிக் கொண்டு மேலே வரலாம். ஆனால் அதற்கான பலம் உங்களிடமிருக்கிறதா?
இருக்கு மென்றே நினைக்கிறேன். ஆனால் சீக்கிரம்.. சீக்கிரம்...
சற்றுமுன் கேட்டோம்..
கந்தா நம்மைக் காப்பாற்றிய மனிதனைக் காணவில்லை. பெரிய கண்டத்திலிருந்து தப்பினோம்..
ஆனந்தா. சீக்கிரம். என்னால் இனி ஒரு விநாடியும் தாங்க முடியாது.
ஆனந்தா, நரகத்துக்குச் சென்றவர்கள் திரும்பி விட்டோம்... ஐயோ! எத்தனைய குரூரமான — வேதனை?
நாம் உயிரோடிருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை. நம்மைக் காப்பாற்றியவன் — காப்பாற்றி வருபவன் யாராக இருக்கும்? ஏன் உடனே மறைந்து போகிறான்?
உடலின் தசைகளெல்லாம் ரணமாக வலிக்கும் இந்த வேளையில் — எதையும் சிந்திக்கும் தெம்பில்லை.
அப்போது...
கந்தா.. அந்த ஓலம் யாரோ ஒரு மனிதனின் வேதனைக் குரலைப் போலில்லை?
இந்தப் பக்கமிருந்து தான் வருகிறது. வா சீக்கிரம்...


ஐயோ! காட்டுப் பன்றி.. காப்பாற்று-ங்கள்..
அது.. அது.. நம்மை ஒவ்வொரு இக்கட்டிலிருந்தும் காப்பாற்றி வரும் முக்காட்டு உருவமல்லவா?
புதியவர்களைக் கண்டதும் 'தனியன்' என்றழைக்கப்படும் காட்டுப் பன்றி அவர்களை நோக்கித் திரும்பியது.
அந்தோ.. காட்டுப்பன்றி.. தாக்கிறது.
ஆ...ஹ்...ஹ்...ஹா!
ஆனந்தனின் எச்சரிக்கை காலங் கடந்ததாகி விட்டது. கந்தனின் கால் தொடைமுகத்தில் பன்றியின் கோரப் பற்கள் பதிந்து விட்டன.
என் உடல் வலுவெல்லாம் சுலாக்கோல் தொங்கலிலே போய் விட்டது. இருந்தாலும் இந்தச் சம-யத்தில் நான் கந்தனைக் காப்பாற்றியே தீரவேண்டும்.
காட்டுப் பன்றியின் மீது பாய்ந்து அதைக் கட்டிக் கொண்டு புல்வெளியில் உருண்டான் ஆனந்தன். கந்தன் விடுபட்டான். ஆனால்....
என் கால்கள்..? ஐயோ! என்னால் நிற்கவும் முடிய வில்லையே. என் நண்பனைக் காப்பாற்ற-முடியாத அவல நிலையா?
உருண்டு புரண்டு போராடிய ஆனந்தனின் தலை ஒரு கல்லிலே மோதுகிறது..
ஆ..ஹ்..ஹ்..ஆ..!
ஐயோ ஆனந்தா! காட்டுப்பன்றி உன்னைக் கடித்துக் குதறத்தான் போகிறது.. இடையில் நம் முடிவு இப்படியா?

தொடரும்..

# —எதிர்காலத்திற்கு
## நிலையான உறுதிமொழி—

உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் உழைக்கிறீர்கள் .... அவர்களுக்கு, பணநெருக்கடி அளிக்கும் சந்தேகமும் சங்கடமும் இல்லாத ஒரு எதிர்காலத்தை அவர்களுக்காக நீங்கள் திட்டம் இடுகிறீர்கள். உங்கள் குடும்பத்தின எதிர்காலத்தை பாதுகாக்க நீங்கள் இப்போதே செண்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட்., மூலம் ஒரு சேவிங்ஸ் பாங்க் கணக்கை, சிறிய துகையாகிய ரு 5/- மூலம் ஆரம்பியுங்கள். உங்கள் பணம் பாதுகாப்பாக இருப்பதுடன் தகுந்த வட்டியும் கிடைக்கிறது.

இந்த பாங்கின் 464 கிளைகளிலும் ஒரு அன்புகரம் உங்கள் சேமிப்பு, இதர பண விஷயங்களில் துணைபுரிய கை கொடுத்து வறவேற்க எப்போதும் தயாராக இருக்கிறது.

**தி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட்.,**


தனியார் துறையில் உள்ள மிகப்பெரிய பாங்க்

பதிவு காரியாலயம்:
மகாத்மா காந்தி ரோடு,
:.போர்ட், பம்பாய்-1

திரு. பி.ஸி. பிள்ளை
பிரதம ஏஜெண்ட்
சென்னை

திரு வி. வி. படேல்
சேர்மென்
பம்பாய்

SISTA'S-CB-S.TA

# கோல் கொடுத்த பெருமான்



இரா. சுப்பிரமணியன்

சென்னை மாநகராட்சி செய்து தரும் தண்ணீர் வசதி பற்றி எத்தனையோ குறைகள்; குழாயில் சொட்டும் நீரைப் பற்றி எத்தனையோ ஹாஸ்யத் துணுக்குகள் — எல்லாம் சரிதான் — ஆனால் அந்த நீர் குழாயில் வருவதற்காகப் பூண்டி நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டபோது அது பல கிராமங்களை மூழ்கடித்துவிட்டது என்பதும் திருவிளம்புதூர் கிராமமும் அதில் உள்ள ஊன்றீசுவரர் திருக்கோயிலுமே அந்த நீர்த் தேக்கத்துக்குள் மூழ்கிக் கிடக்கின்றன என்பதும் எத்தனை பேருக்குத் தெரியும்?

சென்னையின் குடிநீர்ப் பற்றுக்குறையை நீக்க 1942ஆம் ஆண்டில், குசத்தலையாற்றின் குறுக்கே அணை கட்டினார்கள். இதுவே பூண்டி நீர்த்தேக்கம். இதில் மூழ்கிய திருவிளம்புதூர் ஸ்ரீ ஊன்றீசுவரர் ஆலயம் சோழர் காலத்திய திருப்பணி. இவ்வாலயத்துள் கோயில் கொண்ட ஸ்ரீ ஊன்றீசுவரரின் ஒரு திருவிளையாடலைப் பற்றிப் பெரிய புராணம் கூறுகிறது.


திருவாரூரில் ஸ்ரீ தியாகேசப் பெருமானுக்கு வசந்தோற்சவம் தொடங்கியது. ஆரூர் பெருமான் மீது அழியாக் காதல் கொண்ட ஸ்ரீ சுந்தரர், திருவாரூர் வசந்தோற்சவத்தைக் காணவேண்டும் என்ற தாங்க முடியாத அவாவினால் சங்கிலியார் பொருட்டுச் செய்த சூளுரையை மீறித் திருவாரூருக்குப் புறப்பட்டு விட்டார். திருவொற்றியூரின் எல்லையைக் கடந்ததும் இரு கண்களின் பார்வையும் மறைந்து போயிற்று. இதனால் வருந்தியபடியே வட திருமுல்லை வாயிலை வழிபட்டுவிட்டுத் திருவிளம்புதூரை அடைந்தார் நம்பியாரூரர்.


திருக்கோயிலுள் சென்று இறைவனை வணங்கி, "நின் அடியாளுகிய யான் கண்ணின்றி வாட, நீமட்டும் மகிழ்ந்து கோயிலுள் இருக்கிறாயே" என்று கேட்ட சுந்தரருக்கு ஊன்று கோலொன்று கொடுத்து, "உளோம் போகீர்" என்றருளினார் சிவபெருமான்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஊன்று கோல் அளித்தமையால் இறைவன் ஸ்ரீ ஊன்றீசுவரர் என்று அழைக்கப் பெறுகிறார். ஸ்ரீ சுந்தரர் பாடிய பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் ஈற்றடியிலும் "உளோம் போகீர் என்றானே" என்று வருகிறது. இச்சொற்றொடரே திருவுளோம் போகீர் என்று ஊருக்குப் பெயராக அமைந்தது. திருவுளோம் போகீரே நாளடைவில் திரிந்து திருவிளம்புதூர் என்றாகிவிட்டது. திருவிளம்புதூர், பூண்டி நீர்த்தேக்கத்துள் மூழ்கிவிடவே, அன்பர்கள் பூண்டியில் பாலாலயம் செய்து ஸ்ரீ ஊன்றீசுவரரை அங்கு எழுந்தருளிவித்தனர்.

இன்று இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் பெரிய கற்றளியாகக் கோயிலைக் கட்டி முடித்து விட்டார் ஸ்ரீ ஏ. என். பரசுராமன். இவ்வாலயத் திருப்பணி நடைபெற்ற காலத்தில் தனிமனிதர்கள் யாரிடமும் பணம் பெறவில்லை. பல தேவஸ்தானங்களிடம் பொருள் பெற்றே திருப்பணியை நடத்தியுள்ளார் ஸ்ரீ பரசுராமன். இப்பொழுதுதான் முதன் முறையாக இவ்வாலயக் கைங்கரியத்துக்குப் பொதுமக்கள் பொருள் அளிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஊன்றீசுவரரின் கும்பாபிஷேகத்துக்குப் பொருள் கொடுத்துச் சிவன் அருள் பெறலாம். முக்கியமாக சென்னை மாநகர மக்கள் இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு நீங்கப் பிரார்த்திக்கலாம்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ ஏ என். பரசுராமன், எம். ஏ., திருப்பணிக் குழுத் தலைவர் — அறங்காவலர், ஸ்ரீ ஊன்றீசுவரர் தேவஸ்தானம், 24, ஹால்ஸ் சாலை, எழும்பூர், சென்னை — 8.







# பொன்னிலவைத்துப் பூங்குயில்



### கொத்தமங்கலம் சுப்பு

## அத்தியாயம் 25

## "மகாதேவ பட்டினத்தில்"

காலம் என்னும் காட்டாறு எத்தனை பள்ளங்களையோ மேடாக்கி யிருக்கிறது. எத்தனையோ மேடுகளைப் பள்ளமாக்கி இருக்கிறது. அப்படிப் பள்ளமாக்கியவைகளில் ஒன்றுதான் மன்னார்குடி—பட்டுக்கோட்டை நெடுஞ் சாலையில் இன்றுஉள்ள மகாதேவ பட்டணம்.

உரிக்க உரிக்க மணக்கும் தோல் நிரம்பியது உள்ளி. உடலின் தோலை உரித்தாலும், உள்ளே தேச பக்தி மணக்கும் மக்கள் நிரம்பியது உள்ளிக்கோட்டை. உள்ளம் எனும் கோட்டைக்குள் நாட்டுப் பற்றைத் தவிர வேறு ஒன்றும் நுழைய முடியாத மாரத வீரர்களைக் கொண்ட உள்ளிக்கோட்டை, குப்பச்சிக்கோட்டை ஆலங்கோட்டை, பறவாக் கோட்டை ஆகிய சிறுசிறு கோட்டைகளால் நாற்புறமும் சூழப்பட்டு, அதன் நடுவே ஆழமான அகழிகளும், வானை அளாவிய திருமதில்களையும் கொண்டு வனப்புடன் விளங்கியது மகாதேவ பட்டணம்.

சம்போ மகாதேவரும், சௌபாக்கிய சுந்தரியும் ஒருபுறம் கோயில் கொண்டிருந்தார்கள். பிரதாபசிம்மரின் அறநெறிக்கு வழிகாட்டியாக விளங்கும் கோதண்டராமர் கோயில் ஒருபுறமும், கோட்டைக்குக் காவலாகிய எல்லையம்மனின் ஆலயம் மற்றொரு புறமும் அமைந்திருந்தன. ராமேசுவரத்துக்குப் பாதசாரியாகச் செல்லும் வட நாட்டு யாத்திரீகர்களின் கூட்டம் ஒன்று அங்கு உள்ள அன்ன சத்திரத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு கோதுமை மாவும், நெய், சர்க்கரை மற்றும் சமையலுக்கு வேண்டிய உலுப்பைகளையும் பெற்றுக் கொண்டிருந்தது. அப்போது 'கணகண' என்று கோட்டைக்குள் இருந்து மணியோசை முழங்கவே, அவர்களை நோக்கி அங்குள்ள மணியக்காரர் ''மகாராணி அன்னபூர்ணா தேவியார் ஆலய வழிபாட்டிற்கு வருகிறார்கள். எல்லோரும் ஆதிவராகமூர்த்தியின் ஆலயத்துக்குச் செல்லுங்கள். ஆடை வழங்குவார்கள்'' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டார். லாட சங்கிலிகளையும், கோல், ஜாலர் முதலியவற்றையும் முழங்கிக் கொண்டே ராம நாமத்தைப் பாடிய வண்ணம் கோட்டைக்குள் நுழைந்தது அப்பைராகிகளின் கூட்டம்.

கோட்டையின் உட்புறத்தில் அழகுச் சோலையின் நடுவே விளங்கிய திருக்






சொகுசும், பயனும் இணைந்த

இணையற்ற புதுமை

# டாட்ஜ் / ஃபார்கோ

## டி-250

**விசேஷ பயன் :**

**வசதிமிக்கது, சொகுசானது :**

**நம்பகமானது :**

வலுவானது, உறுதியானது—

**PAL** தி ப்ரீமியர் ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட்

பம்பாய்-70.

உங்கள் அருகிலுள்ள டீலர்களை அணுகுங்கள்

குளத்தில் சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் ஜரச் சேலையுடன் தன் இருக் கரங்களால் தங்கக் குடம் ஒன்றில் தண்ணீரை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு படியேறி வந்து கொண்டிருந்தார். அவரது திருப் பாதங்களில் சிறு கற்கள் உறுத்தாத வண்ணம் பல பணிப் பெண்கள் சிவப்பு நிறக் கம்பளங்களை, நடை பாவாடையாக விரித்து வந்தனர். அந்த அம்மை அதன் மேல் நடந்து வந்து ஆதி வராக ஸ்வாமி சந்நிதியில் உள்ள கருங்கல் தளத்தில் தண்ணீரை வார்த்துத் தம் திருக் கரத்தால் தரையை மெழுகிக் கோலமிட்டார்கள். சன்னிதியின் ஒரு புறத்தில் வான சாத்திரத்தில் வல்லவரும், பஞ்சாங்கம் கணிப்பதில் பண்டிதர்களும் ஆகிய பைங்ஞா நாட்டு வேத விற்பன்னர்கள் பலர் நின்று, இருக்கும், சாமமும் இயம்பினர். அவர்களுக்கு எதிர்ப் புறத்தே பெருக வாழ்ந்தான் மறையவர்கள் பலர் வரிசையாக நின்று ஆழ்வார்களின் அமுதனைய பாசுரங்களை ஓதினர். இவ்வாறு இரு மறைகளும் தொழுதேத்தப் பன்றி உருவெடுத்துப் பார் காத்த பரம்பொருள் ஆகிய ஆதிவராக மூர்த்தி இரு கரங்களையும் வைத்துக் கொண்டு, நின்ற திருக் கோலத்தில் பால் போன்ற மேனியும், திருமறு மார்பில் பச்சை நிற மச்சமும் அலங்கரிக்கத் திருச்சேவை அருளிக் கொண்டிருந்தார். "பிரபோ! தாங்கள் வராக அவதாரமெடுத்து இந்தப் பூமண்டலத்தையே தங்கள் இரு பற்களால் தாங்கி உலகை ரக்ஷித்தீர்கள். எங்கள் குலத்தையும், அவ்வாறு ரக்ஷிக்க வேண்டும்" என்ற கருத்தில் தன் கணவர் இயற்றிய மகாராஷ்டிர கீர்த்தனம் ஒன்றை அம்மையார் அருமையாகப் பாடிக் கொண்டு தம் இரு கண்களாலும் பக்தி கரைபுரண்டோடக் கனிந்து உருகினார்கள். அப்போது "அம்மா!" என்று பிரதாபசிம்மரின் குரல் கேட்கவே, அவர் ஆவலுடன் திரும்பி, "வா மகனே!" என்று தலை அசைத்து மைந்தனை வரவேற்றார்கள். பிரதாப சிம்மர் முதல் யாரை வணங்குவது என்று சிறிது நேரம் யோசித்தார். பிறகு முதலில் தாயின் திருவடிகளைத் தொட்டு வணங்கிவிட்டு, தாய்க்குத் தாயாகிய தாமோதரனைப் பிறகு வணங்கினார்.



"ஒரு நிமிஷம் ஓய்வு ஒழிவு இல்லை. ஆபீஸ்லே வேலை மென்னியைப் பிடிக்கிறது!"

"அப்படின்னுபோராமெ என்ஜினியரிங் படிக்க என்ஜினியர் ஆகுங்க. சௌக்கியமா ஒரு வேலையும் இல்லாமெ ஆயிரக்கணக்கான இன்ஜினியர்கள் இருக்காளாம்!"

உண்டு பருத்தவர்களைக் காட்டிலும் உபவாசத்தில் இளைத்தவர்களிடத்தில் ஒரு தனி தேஜஸ் இருப்பது இயற்கை. 'அன்னபூரணி தேவி' தம் குடிமக்களுக்கு அன்னபூரணியாகவே விளங்கினார். ஆனால் அவரோ விரதம் தன்னில் இளைத்த மேனியுடன் தோற்றமளித்தார். மைந்தர் தஞ்சைக்குச் சென்ற நாள் முதல் அவர் மனத்தில் நிம்மதி இல்லை. மகன் விரைவில் நலமுடன் திரும்பிவர வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டுதான் தம் கையாலே தண்ணீர் சுமந்து தரை மெழுகினார். அரசர் மனைவியானாலும் அன்னை அன்னைதானே?

"உன் தந்தை முகம் கோணினால் உன் பெரியப்பா பொறுக்கவே மாட்டார். அண்ணனும் தம்பியும் நகமும் சதையும் போலிருப்பார்கள். தம் தம்பியிடம் கலந்தாலோசிக்காமல் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார் உன் பெரியப்பா" என்று ஏதோ பெரிய விஷயத்தைச் சொல்லுவதற்குத் தயாரானார் அன்னபூரணி தேவியார்.

பிறகு, அன்றுபகல் அரண்மனையில் மகனிடம் தஞ்சையில் நடந்த விஷயங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். 'மகனே! உன் முயற்சி வெல்க! நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ராஜ காரியத்தைச் செய்வது கடமை. ஆதலால் நீ கடமையைச் செய். ஆனால் பயனை எண்ணிச் செய்யாதே' என்று விரக்தியுடன் கூறினார்.

இதைக் கேட்ட பிரதாபசிம்மர் சிரித்துக் கொண்டே, "பலனை ஆண்டவர் அளித்தால்?" என்றார்.

"அவர் அளிப்பார். அதற்குத்தான் வெற்றி என்று பெயர். நான் சொல்வது அரச பதவியைப் பற்றி. அதில் உனக்கு மறந்தும்கூட ஆசை வேண்டாம்."

"ஏனம்மா? யாருக்காவது நீங்கள் என் பிள்ளை பட்டத்துக்கு ஆசைப்பட மாட்டான் என்று பீஷ்மரைப் போல் உறுதி அளித்திருக்கிறீர்களா?" என்று சிரித்துக்கொண்டேகேட்டார்பிரதாபர்.

"ஆம் மகனே! நீ கேட்டதால் சொல்கிறேன். உன்னுடைய பெரிய அன்னையாரிடம் அவ்வாறு உறுதி யளித்திருக்கிறேன்."




என்ன இது ? ஆட்டம் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே கூட்டம் எக்கச்சக்கமா இருந்திச்சு. இப்ப என்னடான்னா ஒரு பயலேயும் காணுமே.....!!!??''

''பெரியம்மாவுக்கா? பட்ட மகிஷி அர்ஜுபாய் அவர்களுக்கா? என் அண்ணன் பாவா சாகிப்பின் உரிமையை நான் பறிப்பேன் என்று அவர்கள் சந்தேகப்பட்டார்களா? அன்னையே! இது என்ன கொடுமை? பாவாஜியை நான் பிதாஜியாகவே கருதுகிறேன். அன்று அவருக்கு வந்த ஆபத்தை எனக்கு வந்ததாகவே நான் கருதினேன்'' என்று வருத்தத்துடன் கூறினார் இளவரசர்.

''பிரதாபா, பொறு. அவசரப்பட்டு முடிவு செய்யாதே பிரதாபா! அந்தப்புரத்தில் அம்மாதான் ஒருத்தி. சின்னம்மாவும் பெரியம்மாவும் எண்ணற்ற பேர்கள் இருப்பார்கள். அவசரப்பட்டு யாரையும் 'குறை சொல்லாதே. நான் வாக்களித்தது அர்ஜுபாய்க்கு அல்ல. வேறு ஒருவருக்கு. நீ தஞ்சைக்குப் போன பிறகுதானே அங்கு இரண்டு நாட்களில் எத்தனையோ விஷயங்கள் நடந்திருக்கின்றன.

''நாகப் பாம்பை ஏவியது, உன் நண்பனைக் கொல்லப் பார்த்தது. ஆற்றை வெட்டியது, ஊருக்குத் தீ வைத்தது ஆகிய அத்தனையும் நீ அங்கு சென்றவுடன் நடந்திருப்பதிலிருந்தே நீ இதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். உன் அண்ணன் பாவாஜி உடல் மனம் இரண்டிலும் பலவீனம் உடையவராக இருக்கிறார். அதைப் பார்த்து உன் தந்தை அவருக்குப் பின் உன்னைப் பட்டத்தில் அமர்த்தினாலும் அமர்த்தி விடுவாரோ என்ற ஆத்திரத்தினாலேயே உன் எதிரிகள் இதைச் செய்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.''

பிரதாபசிம்மரின் உடல் முழுவதும் நடுங்கியது. மனத்தாலும் பிறருக்குக் கெடுதல் நினைக்காத தனக்கும்கூட எதிரிகள் இருக்கிறார்களா? இது என்ன உலகம்? என்று எண்ணினார். ''அம்மா! எனக்கும் எதிரியா? யார் அது? மறந்தும் நான் ஒருவருக்குத் தீங்கு செய்த தில்லையே'' என்றார் அவர்.

''நீ மறந்து செய்த தீங்கல்ல காரணம். பிறந்து செய்த தீங்குதான் காரணம்..

''பிரதாப், தசரதச் சக்கரவர்த்திக்கு எத்தனை மனைவிகள்?''

''அறுபதினாயிரம் என்கிறார்கள். அவருக்குத் தெரிந்து எத்தனை இருக்குமோ?''

''சரி, கிருஷ்ண பரமாத்மாவுக்கு?''

''பதினாறு ஆயிரம் என்கிறார்கள் பாகவதர்கள். பரமாத்மாவுக்குத்தான் உண்மை தெரியும்.''

''சரி, ஏதோ ஒரு ஆயிரம் பதினாயிரம் கூடுதல் குறைச்சலாகவே இருக்கட்டும். இருவருக்கும் குழந்தைகள் எத்தனை?''

''தசரதனின் மக்கள் நால்வர். கண்ணனுக்கு ஒரே பிள்ளை.''


''இதை ஞாபகம் வைத்துக்கொள். இனி நம் அரண்மனைக்கு வருவோம். உன் பெரிய தந்தையார் ஷாஜி மகாராஜாவுக்கு ?''

''பதினாறு மனைவிமார்கள். ஆனால் பட்டத்துக்குப் பிள்ளை இல்லை.''

''இது ஏன்?''

''யாருக்குத் தெரியும்?''

''எனக்குத் தெரியும். அதுதான் அந்தப்புர ரகசியம். அரசருக்குப் பிள்ளை பிறந்தால் ஊரில் அதிர் வேட்டு முழங்கும். அந்தப்புரத்தில் கலகமும் குழப்பமும் நடக்கும். ஊரில் திருவிழா நடைபெறும். உள்ளே கோபமும் பொறாமையும் அமர்க்களப்படும். 'ஐயோ! அவளுக்குப் பிள்ளை பிறந்து விட்டதே, அவள் மகன் பட்டத்துக்கு வந்துவிடுவானே' என்று அடுத்த ராணி அங்கலாய்ப்பாள். அவள் தோழி தூபம் போடுவாள். கைகேயி முதல் கமலாபாய் வரையில் எந்த நாளும் அந்தப்புரத்தில் இந்தப் பொறாமையும் சூழ்ச்சியும் இருப்பது இயற்கை. பட்டமும் பதவியும் பஞ்சமாபாதகத்தின் பிறப்



# பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5

தந்தி: 'EVERMANS' போன்: 85834

மதராஸ் சிட்பண்டு 1961 ஆக்ட்படி மேற்க்காணும் சிட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 of 1961)

25 மாதங்கள் — குறுகிய காலச் சிட்டுகள் — 25 அங்கத்தினர்கள்

| வகுப்பு | மாதச் சந்தா | சிட்டுத் தொகை | வகுப்பு | மாதச் சந்தா | சிட்டுத் தொகை |
|---|---|---|---|---|---|
| A | ரு 200 | ரு. 5000 | D | ரு 25 | ரு. 625 |
| B | ரு. 100 | ரு. 2500 | E | ரு. 20 | ரு. 500 |
| C | ரு. 50 | ரு. 1250 | F | ரு 15 | ரு. 375 |

40 மாதங்கள் — நீண்ட காலச் சிட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

| வகுப்பு | மாதச் சந்தா | சிட்டுத் தொகை |
|---|---|---|
| LTA | ரு. 500 | ரு 20000 |
| LTB | ரு 250 | ரு. 10000 |
| LTC | ரு 125 | ரு 5000 |

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள்: புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா

## எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

VSK - BBC - 1000 TM - K



## ஏஜெண்டுகள் தேவை

சுதேஷ் டெர்ரிகுவீன் பாண்டுகள் மற்றும் ஷர்ட்டிங்குகளை, கமிஷன் அடிப்படையில் விற்பனை செய்ய, ஏஜெண்டுகள் தேவை. விலையில் சரசமானது. நீடித்து உழைக்கக் கூடியது. நவீன ரகங்களில் கிடைக்கும். கெட்டி சாயத்திற்கு உத்தரவாதமுள்ளது.

இலவச சாம்பிள்களுக்கு எழுதவும்:

**SUDESH TEXTILE MILLS**


(K. K. M.) LUDHIANA



## உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்!

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப் பருக்கள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் வழவழப்பாகவும் மாக மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப் பருக்கள், கட்டிகள் செந்நிறத் தழும்புகள் மேலாகப் பரவும் படை, படர் தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப் பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் அது இருக்கச் செய்யும் என்ற பூர்ண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள்.

# கொளுத்தும் வெயிலில் குளிர்ச்சிமிக்க யோசனை




உற்சாகமூட்டும்
கோடைகால
பானம்



## ஐஸ் காபி

மிகமிகச் சுவை படைத்தது
புத்துணர்வு ஊட்டுவதில்
நிகரற்றது

காபி போர்டு • பெங்களூர்

FDS/CB/S/7 THA

பிடங்கள். சுமார் இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன் இம்மாதிரி ஒருத்திக்கு ஏற்பட்ட பொறுமைதான் என் மகனுக்குப் பட்டம் வேண்டாம் என்று நான் சொல்லக் காரணம்.''

பிரதாபசிம்மர் மிகுந்த அக்கறையுடன் அன்னை மேலும் என்ன சொல்லுகின்றாள் என்பதைக் கவனித்தார்.

துயரம் தோய்ந்த குரலில் அன்னபூரணாதேவி பின்வருமாறு கூறினார்:

''உன் பெரிய தந்தை சரபோஜி அவர்களின் இரண்டாவது பட்டமகிஷியின் பெயர் அபுருபா பாய் சாகிபா. அப்போது உன் தந்தைக்கு மட்டும்தான் புத்திரப் பேறு உண்டாயிற்று. நமக்குப் பிள்ளை இல்லையே. இவருக்கு நாலு பிள்ளைகளா என்று அபுருபா பாய் ஆத்திரம் கொண்டார். அந்தப்புரத்தில் ஒரு நாள் போவது ஒரு யுகமாகிவிட்டது. இந்த மனத்தாங்கல் காரணமாக, நாம் மகாதேவப்பட்டணத்திலேயே இருந்து வந்தோம். ஏதேனும் விசேட காலங்களில் மட்டும் இங்கிருந்து தஞ்சை அரண்மனைக்குச் செல்வது வழக்கம். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் தமக்கு நார்த்தம் பழங்களும், புளிப்பு மாதுளம் கனிகளும் அனுப்பி வைக்கும்படி அபுருபா பாய் தோழிமார்களை அனுப்பியிருந்தார்கள். ஏராளமான கனிகளை அனுப்பி விட்டு, நானும் உன் தந்தையும் எதற்கு இந்தக் கனிகள் என்று ஆச்சரியப்பட்டோம். இப்படி இருக்கையில் ஒரு நாள் அபுருபா பாய் அவர்களுக்கு வளைகாப்பு அணி விழா நடைபெறுவதாக அழைப்பு வந்தது. நான் தாங்கொண்ணா மகிழ்ச்சியில் ஏதோ பூக்காத காலத்தில் பூப்பது போல், காய்க்காத காலத்தில் காய்ப்பது போல் இதுவும் பெரிய நாயகி இருவருள் என்று பத்து ஜோடி முத்து வளையல்கள் செய்து எடுத்துக் கொண்டு இன்பண்டங்களுடன் அங்கு சென்றேன். அப்போது நீ கைக்குழந்தை.

''எல்லா ராணிமார்களும் அபுருபாவுக்குத் தங்கள் கையால் வளையலிட்டார்கள். நான் அடுக்கும் முறை வந்தது. 'ஐயோ, அது வராமலேயே இருந்திருக்கக் கூடாதா?' என்று இன்னும் நான் வருந்துகிறேன்.''

''ஏன் அன்னையே?'' என்றார் பிரதாபசிம்மர்.

உடனே அன்னபூர்ணா தேவி முன்னெச்சரிக்கையாக அங்கு இருந்த பணிப்பெண்களை வெளியே செல்லும்படி உத்தரவிட்டார்கள். மகனை அருகில் அழைத்து அவர் காதில் சொன்னார்:

''உன் தந்தைக்கு மாலையிட்ட பாக்கியம் — எனக்கும் சிறிது வைத்தியம் தெரியும். நான் வளையல் இட அவர்கள் கையை எடுத்தவுடன் அதில் கர்ப்ப நாடியே ஓடவில்லை. கண் குழியவில்லை. முகம் வெளுக்கவில்லை. கையில் பச்சை நரம்புகூட ஓடவில்லை. ஆனால் வயிறு மாத்திரம் பெரிதாக இருந்தது. பெண் புத்திதானே. நான் இந்த ரகசியத்தை உன் அப்பாவிடம் சொல்லியும் விட்டேன். அவர் தன் தமையனாரிடம் சொன்னாரோ என்னவோ!

''அபுருபாவுக்கு அரண்மனையில் ஆண் குழந்தை பிறந்தது. பெயர் சூட்டு விழா பிரமாதமாக நடந்தது. பாட்டனாருக்கு மேல் தன் பிள்ளை ஒன்றே கால் பங்கு பலவானாக விளங்க வேண்டும் என்ற ஆசையில் அந்தக் குழந்தைக்கு ஸவா ஹாஜி என்று பெயரிட்டார் உன் பெரியப்பா. ஆனால் இவை ஒன்றிலாவது உன் பெரிய தந்தை சரபோஜி மகாராஜா கலந்து கொள்ளவே இல்லை. அவர் கலகலப்பாகவும் இல்லை. நாமகரணத்தன்று நள்ளிரவில் அவர் பரிசு வழங்குவதற்காகப் பணிப் பெண்கள் எல்லாரையும் தம்முன் அழைத்தார். அவர் அன்று காலாந்தக மூர்த்தியைப் போல் கடும் சினத்துடன் விளங்கினார். திடீரென்று அவர் கரம் உடைவாளை உருவியது.

'''இந்தப் பிள்ளை என் மகன் அல்ல என்று நான் ஐயப்படுகிறேன். ஆதலால் அதை நானே என் கரத்தால் வெட்டிக் கொன்றுவிடப் போகிறேன்' என்று

---

## என்னைக் கேட்கலாமா ?



பள்ளி விழா ஒன்றில் தலைமை ஆசிரியர் பேசிக்கொண்டிருந்தார். மாணவர்களுக்கு ஓர் உதாரணம் சொல்ல வந்தவர் ''இரண்டும் இரண்டும் சேர்ந்து நான்காகிறது'' என்றார். தான் சொன்னது இலக்கணப்படி சரியா என்று அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அதனால் இடது பக்கம் திரும்பி ''நான் சொன்னதில் எதுவும் தப்பில்லையே?'' என்று தமிழாசிரியரைப் பார்த்துக் கேட்டார்.

''என்னைக் கேட்கிறீர்களே? அவரைக் கேளுங்கள்!'' என்று எதிர்ப்பக்கத்திலிருந்த கணக்கு ஆசிரியரை நோக்கிக் கையைக் காட்டினார் தமிழாசிரியர்.

—கற்பூரம்

சிம்ம கர்ஜனை போல் சினந்து கர்ஜித்தார். நாங்கள் எல்லோரும் 'ஹோ' வென்று அலறிவிட்டோம். அபுரூபாபாய் மட்டும் கலங்கவும் இல்லை. கண்ணீர் விடவும் இல்லை.

''பிராணபதி அவர்களுக்கு அவ்வாறு ஐயம் ஏற்பட்டால் அவர்களுக்கு வேண்டாத பிள்ளை எனக்கும் வேண்டியது இல்லை என்று திட சித்தத்துடன் உரைத்தாள். அவளுடைய பதி பக்தியும் வைராக்கியமும் பெண்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அரசர் எழுந்தார். வாளை ஓங்கியபடி வெறி கொண்டவர் போலக் குழந்தை படுத்திருக்கும் நவரத்தினத் தொட்டிலை நோக்கி ஓடினார். ''அண்ணா! அண்ணா! வேண்டாம். சிசுஹத்தி மகாபாவம்'' என்று உன் தந்தையார் அவர்கள் கரத்தைப் பற்றிக் கொண்டு இழுத்தும் அவர் உக்கிர நரசிம்மரைப் போல் திமிறிக் கொண்டு தொட்டிலை அடைந்துவிட்டார். அப்போது அந்தப்புரமே அதிரும்படி 'வீல்' என்று ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரையில் எங்களுக்கு ஒரு நடுக்கம் ஏற்பட்டது. 'மகாராஜா! என்னைக் கொல்லுங்கள். என் குழந்தையைக் கொல்லாதீர்கள்' என்று அலறிக் கொண்டே ஓடிவந்து, அடியற்ற மரம் போல் விழுந்தாள் ஒருத்தி.

''யார் அது?'' என்று அக்கறையுடன் வினவினார் பிரதாப சிம்மர்.

''மகனே! அது அந்தப்புர ரகசியம். நம் குலத்தின் மானம் அதில் அடங்கியிருக்கிறது. அப்படி விழுந்தவள்தான் அந்தக் குழந்தையை ஈன்றவள். அவள் பெயர், இதை நீ யாரிடமும் சொல்லாதே'' என்று மகனை எச்சரித்துவிட்டு அவர் காதில் ஏதோ இரகசியமாகக் கூறினார் அன்னபூர்ணா தேவி. இதைக் கேட்ட பிரதாப சிம்மர் திகைத்தே விட்டார். சிறிது நேரம் அவரால் பேசவே இயலவில்லை.

''இப்படியும் நடைபெறுமா? இது என்ன கொடுமை! பிறகு?''

''வாள் முனையில் இரகசியம் வெளியாயிற்று. அபுரூபா பாயின் நாடகம் அம்பலமாயிற்று. குழந்தையையும், அரசி அபுரூபா பாயையும் அரசர் தேசப் பிரஷ்டம் செய்து விட்டார்.

''அபுரூபாபாய் அரண்மனையை விட்டு நீங்கும்போது என்னைத் தனியே அழைத்தாள். நான் உன்னையும் தூக்கிக் கொண்டு வருத்தத்துடன் அவள் எதிரில் போய் நின்றேன். அவள் கண்களில் கோபப் பொறி பறந்தது. 'அடி அன்னபூர்ணா! இன்றைக்கு நீ வெற்றி பெற்று விட்டாய். ஆனால் உன் மகன் அரசாள ஒரு நாளும் நான் விடமாட்டேன். என்னைப் பெண் என்று எண்ணாதே. நான் பேய்...பேய் பேய்' என்று கத்தினாள். கட்டிடமே எதிரொலி செய்தது. 'நீங்கள் அரச குலத்துக்கே அவமானம் உண்டாக்கும் செயலைச் செய்து விட்டீர்கள். அதற்காகத்தான் நான் வருந்துகிறேன். என் பிள்ளைக்குப் பட்டம் எந்தக் காலத்தும் தேவையில்லை' என்றேன் நான்.

''சரபோஜி மகாராஜா அவர்கள் இறந்தபோது கூட அபுரூபா பாய் வரவில்லை. மற்ற பட்டமகிஷிகள் இருவரும் அவருடன் உடன்கட்டை ஏறினார்கள். அந்தப் புனிதக் கடமையைச் செய்யக் கூட அந்தப் பெண் ஜென்மத்துக்குப் புத்தி இல்லை.

''அம்மா! அவர்கள் உயிரோடு இருந்தால்தானே? ஒருவேளை அந்த அவமானம் தாங்காமல் என் பெரியதந்தையார் இறந்ததைப் போல் அவர்களும் இறந்து போயிருந்தால்? உடன்கட்டை ஏறுவதற்காக மறுபடியும் பிறந்து வர முடியுமா?''

''அப்படியுமிருக்கலாம். ஆனால் அத்தனை மானம், அவ்மானம் உள்ளவளாக இருந்தால் இப்படி ஒரு சூழ்ச்சியைச் செய்து இருக்க மாட்டாள். பிரதாபா! எனக்கு ஒரு சந்தேகம்....''


பிரதாபசிம்மருக்குச் சிரிப்பு வந்தது. ''ராஜாக்கள் வீட்டிலும் ஓரகத்திச் சண்டை இருக்கிறதே'' என்று எண்ணிச் சிரித்தார். ஆனால் அந்தச் சூழ்ச்சிக்காரிக்குக் கொடுத்த வாக்கைக் கூடத் தன் தாய் காப்பாற்ற விரும்புவதை எண்ணிப் பெருமைப்பட்டார். ''அன்னையே! எனக்குப் பட்டம் வேண்டாம். அரசர் படையில் ஒருவனாக இருப்பதே எனக்குப் போதும். என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று கூறித் தம் தாயை வணங்கினார்.

''ஆழ்கடலின் ஆழத்தை அறியலாம். அத்திப் பூவையும், வெள்ளைக் காக்காயையும் கூடக் காணலாம். அபுரூபா பாயின் நெஞ்சாழத்தை அறியவே முடியாது. எச்சரிக்கையாக இரு. இறைவன் காப்பாற்றுவார்'' என்று கூறித் தம் அருமை மகனின் நெற்றியில் தன் நெற்றியில் துலங்கிய குங்குமத்தை எடுத்துத் திலகமாக இட்டு விடை கொடுத்தாள் அந்த வீரத் தாய்.

(தொடரும்)

இப்பொழுது
நடைபெறுகிறது

சென்னை
கெயிட்டி
அகஸ்தியா
உமா
கிருஷ்ணவேணி
மற்றும்
தென்னகமெங்கும்



முத்தா பிலிம்ஸ்

# பொம்மலாட்டம்

டைரக்ஷன்
V. சீனிவாசன்

இசை V. குமார் • திரைக்கதை வசனம் சோ • தயாரிப்பு V. ராமசாமி

SEMBI

கருத்தைக்
கவரும்

# கோயா

விந்தைப்
படைப்பு







இது நாள் வரை நீங்கள்
கனவிலே கண்டு
நெஞ்சத்தைப்
பறிகொடுத்து வந்த
நறுமணப் பவுடரை
நனவாக்குகிறது,
புதுமுறையில் அமைந்த
கோயா. பனித்துளிக்கு
நிகரான இந்த பவுடர்
இந்த நாள் வரை
கண்டிராதபடி மைய
அரைக்கப்பட்டதும்
மிருதுவானதும் ஆகும்.
அது மட்டுமா? கோயா
நிபுணர்கள் இதில் புகுத்தி
யுள்ள பரிமளம் நாள் முழு
தும் நிலைத்து, புத்தம்புதிய
சுகந்தத்தைப் பரப்பிக்
கொண்டே இருக்கும்.
புதுமை மணம்
பொருந்திய 'பிளாக்
ரோஸ்' பூத்த புது
மலரின் வாசனை
வீசும் 'கார்டீனியா',
உள்ளத்தை அள்ளும்
'பாஸ்போர்ட்'—
நீங்கள் தேர்ந்தெடுக்க
இத்தனை நல்ல வாசனை
ரகங்களில் கோயா
கிடைக்கிறது. நெடு
நாள் நீடிக்கும் உயர
மான புதிய டின்னில்
மூன்றுமே வருகின்றன
என்பதை மறவாதீர்.




புதிய முறையில்
அமைந்த உயரமான
புதிய டின்னில் கிடைக்கும்
அருமையான பவுடர்

இந்த நறுமண
பவுடரைத்
தயாரிப்போர்

# கோயா


பாரிஸ்
லண்டன்
நியூயார்க்



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்)
லிமிடெட்
(இங்கிலாந்தில்
இணைக்கப்பட்டது)

ACC-STM

# உஷ்! ரகசியம்!





முகுந்தன்

"சாப்பிட்டீர்களாமே?......" என்று கேட்டபடியே 'உண்மைக் குரல்' பத்திரிகையின் தலைமை நிருபர் ஆசிரியர் முன்னால் வந்து நின்றார்.

"ஆமாம்.... இப்படி உட்காருங்கள்..." என்று நாற்காலியைச் சுட்டிக்காட்டிய ஆசிரியர், "உங்களுக்கு ஒரு முக்கியமான வேலை காத்திருக்கிறது.... நீங்கள் இன்றிரவே கப்ஸாப் பேட்டைக்குப் புறப்பட வேண்டும். ரயில் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்து விட்டேன்....." என்றார்.

"கப்ஸாப் பேட்டையா? ஜோலார்ப்பேட்டைக்குப் பக்கமா அது?...."

"இல்லே.... இது இந்தப் பக்கம்.... நெய்வேலி, நெய்வேலி என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா?"

"ராவணனைப் பார்த்து 'கும்பகர்ணனைத் தெரியுமா?' என்று கேட்பதுபோல அல்லவா இருக்கிறது உங்கள் கேள்வி?.... நெய்வேலியிலேதானே சார் நமது சர்க்கார் கோடி கோடியாகப் பணத்தைக் கொண்டு போய்க் கொட்டிப் பழுப்பு நிலக்கரி எடுக்கிறோம் என்று ஆரம்பித்து அடுப்புக்கரி விற்பனைக்கு வந்திருக்கிறார்கள். ஒரு தடவை பத்திரிகைக்காரர்களை யெல்லாம் கூட அழைத்துக் கொண்டு போய்ப் பெரிய பெரிய ராட்சத இயந்திரங்களை யெல்லாம் காட்டியிருக்கிறார்களே!...."

"அந்த நெய்வேலியிலிருந்து மூன்று மைல் தொலைவில் இருக்கிறது இந்தக் கப்ஸாப் பேட்டை..... அங்கே போய்க் குமாரசாமி என்று பெயர் சொல்லி விசாரியுங்கள். மிகக் குறுகிய காலத்தில் நிறையப் பணம் சம்பாதித்தவராம்.... அவர் எப்படிப் பணக்காரரானார் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வர வேண்டியது உம் பொறுப்பு!"

"பூ, இவ்வளவுதானே!...."

"அப்படி இலேசாகச் சொல்லி விடாதீர். தான் எப்படிச் சம்பாதித்தேன் என்பதை யாரிடமும் சொல்லாமல் பிடிவாதமாக இருந்து வருகிறாராம் அவர். நீங்கள் கல்லிலிருந்து நார் உரிப்பவர் என்பது இந்த ஆபீசில் பிரசித்தமானதால்தான் உங்களை அனுப்புகிறேன். நைஸாகப் பேசி விஷயத்தைக் கறந்து கொண்டு வாருங்கள்!...."

உதவி ஆசிரியர் சோணாசலம் அன்றிரவே புறப்பட்டுக் கப்ஸாப் பேட்டைக்குப் போய்ச் சேர்ந்தார்.

குமாரசாமி — ஆசிரியர் சொன்னபடியே — எமகாதகராக இருந்தார். சோணாசலம் எப்படி எப்படியோ கேள்விகள் போட்டு மடக்கியும், கெஞ்சியும் விஷயத்தைச் சொல்லவே மாட்டேன் என்று உறுதியாக இருந்து விட்டார்.

"தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் ஒரு வேளை கள்ள நோட்டு, கிள்ள நோட்டு ஏதாவது அடித்தீர்களோ....?" என்று மெள்ளக் கேட்டார் சோணாசலம்.

"ஏனய்யா, என்னைப் பார்த்தால் எப்படி இருக்கிறது?" என்று வலப் பக்க மீசை மீது கைபோட்ட வண்ணம் அதட்டலாகக் கேட்டார் குமாரசாமி. சோணாசலத்தின் நாடிகள் அத்தனையும் ஒடுங்கிப் போயின. குமாரசாமியே தொடர்ந்தார்: "நான் என்ன, விஷயம் தெரியாதவனா? ஒரு ரூபாயின் மதிப்பு இருபத்திரண்டு பைசா தான் என்பது எனக்குத் தெரியாதா என்ன? இப்படியிருக்க, முட்டாள்தனமாக நான் கள்ள நோட்டு அடிப்பேனா?.... சீச்சீ!...."

சோணாசலத்துக்குச் சற்றுத் தைரியம் வந்தது. "கள்ள நோட்டு அடிக்காவிட்டால் போகிறது.... ஜாக்பாட் ஏதாவது அடித்தீர்களோ சமீபத்தில்?...."

"குதிரைக்குப் பிடித்த கொள்ளு இருக்கிறதே கொள்ளு, அதைச் சுண்டல் பண்ணினால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். இது தான் எனக்கும் குதிரைக்கும் உள்ள ஒரே தொடர்பு!.... போதுமா?...."

"போகட்டும்; அத்தைக் கிழவி அல்லது மாமாக் கிழவர் அல்லது ஒன்று அல்லது மூன்று விட்ட பெரியப்பா, சிற்றப்பா யாராவது உங்கள் பெயருக்குத் தங்கள் சொத்துக்களை யெல்லாம் எழுதி வைத்துவிட்டு மண்டையைப் போட்டார்களோ?....."

"நீங்கள் சொன்ன அத்தனை உறவுக்காரர்களும் நான் எப்போது மண்டையைப் போடுவேன் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள் ஐயா? அவர்களாவது என் பெயருக்குச் சொத்தை எழுதி வைப்பதாவது!...."

"ஓகோ!...." என்ற சோணாசலம் சிறிது யோசித்தார். "ஒரு வேளை சர்க்காரிடமிருந்து ஏதாவது பள்ளத்தை நிரப்புகிறேன் என்று காண்ட்ராக்ட் வாங்கிக் கொண்டு, அவர்கள் வாயில் மண்ணை அள்ளிப் போட்டு உங்கள் பையில் பணத்தை அள்ளிப் போட்டுக் கொண்டீர்களோ?"



''சேச்சே! அப்படி யெல்லாம் ஒன்று மில்லை......''

''அல்லது ஏதாவது தொழிற்சாலை கட்டுவதற்காக அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்யப் போக, நிலத்தின் விலைகளை யெல்லாம் ஒட்டிக்கு இரட்டியாக்கி, பணம் பண்ணினீர்களோ?......''

''அதுவும் இல்லை.....''

''சரி, விட்டுத் தள்ளுங்கள்.... நான் ஒரு சின்னக் கதை சொல்கிறேன், கேட்கிறீர்களா?''

''கதையா?.... என்ன அது....?''

''நம்ம தேசத்துக் கதைதான்.... வடக்கே எங்கேயோ நடந்தது என்பார்கள். உம்மைப் போலத்தான் ஓர் ஆசாமி ஒரு நிலக்கரிச் சுரங்கத்துக்குப் பக்கத்திலே குடியிருந்தார். அவர் தம் வீட்டுத் தோட்டத்திலே ஒரு கிணறு வெட்டினார். வெட்ட வெட்ட ஆழம் அதிகமாகிக் கொண்டே போயிற்றே தவிர, ஒரு பொட்டுத் தண்ணீர்கூட வரவில்லை. இருநூறு, முந்நூறு அடி வரை வெட்டி விட்டார்கள். வேலையாட்களும் 'நம்மால் இனி வெட்டி மாளாது' என்று போய் விட்டார்கள்.... அப்புறம் இந்த ஆசாமி என்ன பண்ணினார் என்றால் தாமே ஒரு பக்கெட்டைக் கயிற்றில் கட்டிக் கிணற்றில் விட்டார். பக்கெட் நிரம்பியது போல இருந்தது. மேலே இழுத்துப் பார்த்தால்.....

''தண்ணீர் இருந்ததாக்கும்?''

''அதுதான் இல்லை! பக்கெட் நிறையக் கரி.... சரியென்று பக்கெட் பக்கெட்டாகக் கரியை அள்ளிக் கொட்டினார், அந்தப் புண்ணியவான்.... வீடு நிறையக் கரியாகி விட்டது. திடீரென்று ஒரு நாள் பக்கெட்டைக் கட்டிவிட்டு இழுத்தபோது, அது வழக்கத்தை விடக் கனத்தது. தரைமட்டத்துக்கு வந்ததும் பார்த்தால்....''

''தங்கமாக இருந்ததோ?....''

''இல்லை, ஐயா! பக்கெட்டுக்குள்ளே ஓர் ஆள் பிக்கரியும் கையுமாக உட்கார்ந்திருந்தான்......''

''என்னது? ஆளா....?''

''ஆமாம், சுவாமி, ஆமாம்! அவன் பக்கத்திலே இருக்கிற நிலக்கரிச் சுரங்கத்திலே வேலை பார்க்கிறவன்.... பூமிக்குக் கீழே வெட்டிக் கொண்டே போனவன் இந்த ஆசாமியின் தோட்டத்துக்கு வந்து விட்டிருக்கிறான். அவன் கரியை வெட்டி வெட்டித் தள்ளத் தள்ள இவர் இழுத்துக் கொட்டியிருக்கிறார். கம்பெனிக்காரர்கள்தான் பக்கெட் விடுவதாக அந்த ஆசாமி நினைத்துக் கொண்டிருந்தாளும்! எப்படி இருக்கிறது விஷயம்......?''

''அடப் பாவமே?.... அப்புறம்?''

''அப்புறம் என்ன?.... இரண்டு பேருமாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி அந்தக் கரியை அந்தக் கம்பெனிக்கே விற்றுப் பணம் சம்பாதித்து இரண்டு பேரும் பங்கு போட்டுக் கொண்டார்கள்.... அது போல நீங்களும் ஏதாவது சித்து வேலை....!''

''பேசப்படாது ஓய்!''

'' பின்னே எப்படித்தான் பணக்காரர் ஆனீர்களாம்?.... அதைத்தான் சொல்லுங்களேன், கேட்போம்!....''

''சொல்ல மாட்டேன்! மாட்டவே மாட்டேன்......!''

சோணாசலம், ''ஐயா, உங்களிடமிருந்து செய்தி சேகரிக்காமல் நான் திரும்பினால் எனக்கு வேலைபோய் என் பெண்டாட்டி பிள்ளைகள் தெருவில் நிற்கவேண்டி வரும்'' என்று கெஞ்சினார்.

சோணாசலத்தின் ஓலம் குமாரசாமியின் மனத்தை இளக்கியிருக்க வேண்டும். ''சரி.. ''சரி.... நான் பணக்காரன் ஆனது எப்படி என்று சொல்கிறேன்..... ஆனால் ஒரு நிபந்தனை......'' என்றார்.

''என்ன அது.....?''

''அந்த நீங்கள் பத்திரிகையிலே போடக் கூடாது!....''

''யமதர்மராஜா சாவித்திரிக்குக் கொடுத்த வரம் போலிருக்கிறதே இது!....''

''நான் சொன்னால் சொன்னதுதான்..... என்ன, சம்மதமா?''

''சரி, உங்கள் இஷ்டம்....!''

''கேட்டுக் கொள்ளுங்கள் ஐயா... நான் பருத்திக் கொட்டை ஏற்றுமதி வியாபாரம் செய்தவன். சாம்பிள் ஒன்றும் சரக்கு ஒன்றுமாக — நான் மோசம் எதுவும் செய்ய வில்லை. 'இன்வாயிஸில்' தொகையைக் கூட்டிக் கள்ளத்தனமாக அந்நியச் செலாவணி சேகரிக்கவில்லை.... என்னிடம் வேலை பார்ப்பவர்கள் அரைப் பட்டினி கிடக்கும்படி அவர்கள் வயிற்றில் அடிக்கவில்லை. வெள்ளைக் கணக்கும் கள்ளக் கணக்குமாக வைத்துக் கொண்டு சர்க்காரை ஏமாற்றவில்லை. வருடம் தவறாமல் வருமான வரி கட்டி வருகிறேன், ஏய்க்காமல். சுருக்கமாகச் சொன்னால் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல்— தர்ம நியாயப்படி நடந்து கொண்டு இவ்வளவு பெரிய பணக்காரனாகியிருக்கிறேன்.''

''அடடா! நீங்கள் கோடியில் ஒருத்தர் அல்லவா? உங்கள் படத்தைப் பெரிதாகப் போட்டு, 'இதோ ஓர் அதிசய மனிதர்!' என்று ஜாம் ஜாமென்று செய்தி போட்டுப் பிரபலப்படுத்த வேண்டுமே!.... அப்படியிருக்கும் போது உங்களைப் பற்றிப் பத்திரிகையில் வரக் கூடாது என்று பிடிவாதம் பிடிக்கிறீர்களே, அது ஏன்?''

''ஏனா?.... இந்த உண்மையை வெளியில் சொன்னால் ஜனங்கள் எனக்குப் பைத்தியக்காரப் பட்டம் கட்டி விடுவார்களே, ஐயா! அதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது...'' என்று பதில் அளித்தார் குமாரசாமி.

சோணாசலம் ஊர் திரும்பியதும் ஆசிரியர் அவரை வரவழைத்து, ''என்ன! போன காரியம் காயா, பழமா?....'' என்று கேட்டார்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்?.... சுத்தக் கிறுக்கு சார், அந்த ஆசாமி.... ஏதோ உளறுகிறார்..... நாம் பிரசுரிக்கும்படியாக எதுவுமில்லை.....'' என்று ஒரேயடியாகப் புளுகினார் சோணாசலம்.

குமாரசாமிக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி விட்டோம் என்ற நிம்மதியில் அவருக்கு அன்றைக்கு என்றையும் விட நிம்மதியாகத் தூக்கம் வந்தது—ஆபீஸில்!

# தொழில்
# மந்த
# தொழில்
# சமாளிக்க
# தொழில்
# சேவை புரிகிறது
# தொழில்

எமது தொழிலிலும் மந்த நிலை கடுமையாகத்தான் இருக்கிறது. நாங்களும் மந்த நிலையை எப்படி சமாளித்து நிலைபெறச் செய்கிறது என்று கவலைப்படலாம். ஆனால் இண்டியன் ஆக்ஸிஜன் ஸ்தாபனத்தில் அப்படி ஓய்ந்துவிடுவது பழக்கமில்லை. தொழிலில் மந்த நிலை என்றாலே அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு விடுவோம். நாங்கள் இந்நிலையை சமாளிக்கும் முறைகள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

உதாரணமாக எமது மார்கெடிங் பிரிவில் தென் கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் ஏற்றுமதி செய்வதை மேன்மேலும் அதிகரிக்க ஆராய்ச்சியை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

எமது என்ஜினியர்களும் விஞ்ஞானிகளும் விரிவான ஆராய்ச்சியின் மூலம் சிறப்பு மிக்க அநேக புதிய தயாரிப்புகளை உருவாக்கி அந்நிய செலாவணியை நிறைய சேமிக்க முயற்சித்து வருகிறார்கள். சென்ற ஆண்டில் மட்டுமே இறக்குமதி செய்யப்படவேண்டிய அநேக பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்து ரூ. 36 லட்சத்திற்கு அதிகமான அந்நிய செலாவணியை மிச்சமாக்கியிருக்கிறோம். தொழில் துறைகளுக்காக இந்நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டே இண்டியன் ஆக்ஸிஜன் முதன் முறையாகத் தயாரித்து வழங்கிய புத்தம் புதிய தயாரிப்பு வெல்டிங் வேலைக்காகவுள்ள இண்டார்க் ஜாம்ஆர் 300 ஸெலேனியம் ரெக்டிபையர் செட், இண்டார்க் ஸப்மர்ஜ்ட் ஆர்க் வெல்டிங் வயர் மற்றும் ப்ளூசார்க்/ஸிஓ2 ஆடோமாடிக் ஆர்க் வெல்டிங் வேலைக்கான தொடர்பான கவசமுள்ள எலக்டிரோடு முதலியவை.

இந்தியத் தொழில்களில் உற்பத்தியை அதிகரிக்கவும், தயாரிப்பு நுட்பங்களை அபிவிருத்தி செய்யவும் சிறப்பாக உதவும் வகையில் ஆக்ஸிஜன், நைட்ரோஜன் மற்றும் இதர வாயுக்களுக்கு புதிய உபயோக முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இன்னும் அநேக துறைகளில் புதிய சிருஷ்டிகள் தொழில் திறமையை விருத்தி செய்து, தொழில் மந்தத்தின் விளைவுகளை நீக்க உதவுகின்றன.

இந்தியப் பொருளாதாரத்திற்கு சேவை புரிவதில் அநேக மார்க்கங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இண்டியன் ஆக்ஸிஜன் தன்னுடைய எதிர்கால வளர்ச்சியில் மட்டுமின்றி நாட்டின் எதிர்கால மேன்மையிலும் நம்பிக்கை வைத்திருக்கின்றது.

**IOL இண்டியன் ஆக்ஸிஜன் லிமிடெட்**

# சொர்க்கத்துக்கு ஒரு குறுக்கு வழி

இந்திரா பார்த்தசாரதி

துறவி பரமானந்தருக்கு மிகவும் கோபம். 'முட்டாள் ஜனங்கள்! பூத உடலுடனேயே பேரின்பத்தை அடையக் குறுக்கு வழியைக் காட்டுகிறேன் என்றால் ஒருவராவது வரவில்லையே!' அவர் கங்கையாற்றைத் தம் கையினால் துழாவினார். அமைதியைக் கிழித்துத் தண்ணீர் சலசலத்தது.

லட்சுமண் ஜுலா எவ்வளவு ரம்மியமான இடம்! இந்த இடத்தில்தான் அவரால் உலகத்துக்கு உபதேசம் செய்வதற்கான மாபெரும் உண்மையைக் கண்டுபிடிக்க முடிந்தது! 'பதினைந்தே நிமிஷங்களில் பரம நிலையை அடையலாம். கால் மணி நேரத்தில் கடவுள் தரிசனம்.....! எப்பேர்ப்பட்ட உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறேன். ஒருவராவது உள்ளொளி பெறுவதற்குத் தம்மிடம் வரவில்லையே!'

தொலைவில் கீதா பவனில் மணி ஒலித்தது. மரத்தில் உட்கார்ந்திருந்த குருவிகள் சத்தமிட்டுக் கொண்டு பறந்து சென்றன.

''கிளிக்....!''

பரமானந்தர் திரும்பிப் பார்த்தார். அயல்நாட்டைச் சேர்ந்தவன் போலிருக்கிறது. அவரைப் புகைப்படம் எடுத்து விட்டான்!

''குட்மார்னிங்!'' என்றார் பரமானந்தர்.

அவருக்குத் தெரியாமல் புகைப்படம் எடுத்ததற்குக் கோபித்துக் கொள்ளப் போகிறார் என்று அவன் எதிர்பார்த்ததற்குப் பதிலாக, அந்த வரவேற்பு அவனை வியப்பிலாழ்த்தியது.

''குட் மார்னிங்....!'' அவன் தயங்கிக் கொண்டே சொன்னான்.

''நான் பரமானந்தன். இந்தியத் துறவி. சொல்லப் போனால், ஜெட் உலகத் துறவி'' என்றார் புன்சிரிப்புடன்.

''ஜெட் உலகத் துறவி...! அப்படியென்றால்?'' அவன் 'காமிரா'வைத் தோள்களில் மாட்டிக் கொண்டான்.

''பதினைந்து நிமிஷங்களில் உங்களுக்குச் சொர்க்கத்துக்கு வழிகாட்ட முடியும். வருஷக் கணக்கில் தியானம், நியமம், அநுஷ்டானம் ஒன்றும் வேண்டாம்.... ஏன், மனக் கட்டுப்பாடே தேவையில்லை.''

அவன் அவரை மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''என் பெயர் ஹாரால்ட் ராபின்ஸ். அமெரிக்கப் பத்திரிகை நிருபன்.... நீங்கள் சொல்வது உண்மையா?''

''வேண்டுமென்றால் பரீட்சித்துப் பார்க்கலாம்.....!''

''இப்பொழுதேவா?''

''மனம் இருந்தால் போதும். இடம் காலம் ஆகியவற்றைப் பற்றிக் கவலை வேண்டாம்.''

ராபின்ஸ் கீழே உட்கார்ந்தான்.

''தொடங்கலாமா?'' என்று கேட்டார் பரமானந்தர்.

ராபின்ஸ் சொர்க்கத்தைத் தேடித்தான் கண்டம் கண்டமாக அலைந்து கொண்டிருக்கிறான். அமெரிக்காவில் அவன் காதலி அவனைக் கைவிட்டு ஒரு பெரிய பணக்காரனை மணந்து கொண்டு விட்டாள். மனம் உடைந்து அவன் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றான். அங்கும் அவனுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. தென்னாப்பிரிக்காவிலே சில ஆண்டுகள்



இருந்தான். வயிறு பசித்தபோது பத்திரிகை நிருபர் வேலையை மேற்கொண்டான். அமைதியை நாடி அலைந்த அவனிடம் பரமானந்தர் தாமாகவே, ''சொர்க்கத்துக்கு வழி காட்டுகிறேன்'' என்றதும் அவனுக்கு மிகவும் சந்தோஷம். மதுவிலும், அபினிலும், சொர்க்கத்தைத் தேடித் திரிந்த அவனுக்குத் துறவியின் வார்த்தைகள் ஒரு புதிய நம்பிக்கையையும் தெம்பையும் ஊட்டின.

''தொடங்கலாம்!'' என்முன் ராபின்ஸ்.

''ஒவ்வொருவருக்கும் ஏற்ற, அவருக்குகந்த தான சப்தம் உண்டு. அதைத்தான் மந்திரம் என்கிறோம். அந்த மந்திரத்தைச் சொல்லிச் சொல்லி, சப்தத்தை நம் ரத்தத்தில், ஜீவ ஓட்டத்தில் கரைத்து விட்டால் சப்தம் முதற்படியாகக் கொண்டு வெவ்வேறு நிலைகளைக் கடந்து எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு தியான நிலையை அடைகிறோம்...அதற்கு முன்பு உங்களைச் சில கேள்விகள் கேட்க வேண்டும்.''

''கேளுங்கள்.''

''உங்களை மிகவும் கவர்ந்த பெயரைச் சொல்லுங்கள்.''

''டெய்ஸி.''

''உங்கள் மனைவியா?''

''இல்லை. காதலி.''

''அவள் உருவத்தைச் சித்திரித்துச் சொல்லுங்கள்.''

ஓர் உபாசகனுக்குரிய தீவிரத்துடன் ஆரம்பித்தான் ராபின்ஸ். சொல்லி முடித்தவுடன், அவன் முன்னே டெய்ஸி நிற்பது போன்ற ஒரு பிரமை.

''டெய்ஸி, டெய்ஸி! என்று சொல்லிக் கொண்டே இருங்கள்.''

'டெய்ஸி... டெய்ஸி...' என்று சொல்லத் தொடங்கினன் ராபின்ஸ். அவன் கண்கள் தாமாகவே மூடின.

பரமானந்தர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். பாரதத்து 'முட்டாள் ஜனங்கள்' மீது அவருக்கு இருந்த கோபம் மாறி இப்பொழுது அநுதாபம் ஏற்பட்டது. அவருக்கு எல்லையற்ற குதூகலம்; ஓர் அமெரிக்கன் அவருடைய முதல் சிஷ்யனாகப் போகிறான்! அதுவும் ஒரு பத்திரிகை நிருபன்! அமெரிக்கப் பத்திரிகைகள் இந்தச் செய்தியைப் பிரமாதப்படுத்தப் போகின்றன.....

ராபின்ஸ் கண்களைத் திறந்தான். அவன் முகம் பிரகாசமாக இருந்தது.

''பேரின்பத்தை அடைந்து விட்டேன். நீங்கள் ஜெட் உலகத் துறவிதான், சந்தேகமில்லை.... சப்தத்தில் என்னைக் கரைத்து, சப்தம் என்னில் கரைய, ஒன்றோடொன்று வேறுபாடு ஒழிந்து, நிரந்தரத்வத்தின் கோடாநு கோடி வண்ண ஜாலங்களிலே பரத்துவத்தின் தனித்துவம் கண்டு, தனித்வம் இசைந்த பரத்வம் தெளிந்து....!''



''போதும்.... சொல்ல முயற்சி செய்யாதீர்கள். சொல்லச் சொல்ல வார்த்தைகளின் குறைபாடுகள் தெரியும்....!'' என்றார் துறவி.

''உங்களைப் பற்றி உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்.''

பரமானந்தர் புன்னகை செய்தார்.

''நீங்கள் இதற்காக என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம்.....எனக்கு ஆட்சேபனை இல்லை. 'காஸ்மிக்' யுகத்தில் 'கால்மணி நேரத்தில் முக்திப் பேரின்பம்' என்று தலைப்புக் கொடுத்தும் எழுதலாம். உலகத்தை உய்விக்க வேண்டும். அதுதான் என்விருப்பம்.''

''நீங்கள்தாம் மெஸ்ஸையா?''

தமக்கே அந்தச் சந்தேகம் உண்டு போல் துறவி குறுநகை செய்தார்.

''என் அநுபவத்தை என்னுடைய பத்திரிகைக்கு எழுதி அனுப்பப் போகிறேன்.''

''விண்டிகேட் கட்டுரையாக இருக்கட்டும். பணத்துக்குப் பணம். எல்லாரும் தெரிந்து கொள்ளட்டும்!'' என்றார் பரமானந்தர்.

''நீங்கள் என்னுடன் டில்லிக்கு வாருங்கள். நீங்கள் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துப் பேச வேண்டும்.''

''இப்பொழுது வேண்டாம். முதலில் அமெரிக்கப் பத்திரிகைகளில் என்னைப் பற்றிய செய்திகள் வரட்டும். பிறகு இந்தியப் பத்திரிகை நிருபர்கள் தாமாகவே என்னைச் சந்திக்க வருவார்கள்.''

**சிறப்புச் சிறுகதை**

பரமானந்தர் கூறியது உண்மையாகப் போயிற்று. வியட்நாம் போர்ச் செய்திகளைப் பற்றிப் படித்து அலுத்துப் போன அமெரிக்க மக்களுக்கு, 'ஜெட் உலகத் துறவி'யைப் பற்றிய செய்தி, கற்கண்டாக இருந்தது. ராபின்ஸ் அவரை 'மெஸ்ஸையா' என்றே குறிப்பிட்டு, வியட்நாம் போரை நிறுத்துவதற்கான ஆற்றல் அவருக்கு இருப்பதாக எழுதியிருந்தான். பென்டகனில்கூட இதுபற்றி விவாதிப்பதாக அமெரிக்கப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. அவ்வளவுதான்; இந்தியப் பத்திரிகைகள் லட்சுமண் ஜூலாவுக்கு நிருபர்களை அனுப்பின. ராபின்ஸ் குறிப்பிட்ட துறவியை அவர்களால் சந்திக்க முடியவில்லை. ரிஷிகேசத்திலிருந்த ஓரிரண்டு சாமியார்கள் ராபின்ஸ் தங்களைத்தாம் சந்தித்ததாகக் கூறினார்கள். ஆனால் குட்டு வெளிப்பட்டவுடன் அவர்களையும் காணவில்லை.

டில்லியில் ராபின்ஸின் 'ஏர்-கண்டிஷன்' வீட்டில் தாடியைப் பரிவுடன் தடவிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் பரமானந்தர்.

''பார்த்தீர்களா?...இத்தனை நாட்கள் வரை நான் அவர்களுடைய கண்களில் படவில்லை. நீங்கள் எழுதியவுடன் தேடிக் கொண்டு அலைகிறார்கள்...!'' என்றார் துறவி.

''அமெரிக்காவில் உங்களுக்கு நிறைய சிஷ்யர்கள் ஏற்பட்டுவிட்டார்கள். பிராட்வேயிலும், ஹாலிவுட்டிலுமே நூற்றுக்கணக்கான நடிகர்களும், நடிகைகளும் உங்களைக் காணத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அமெரிக்கச் சுற்றுப் பிரயாணத்தை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.''

பரமானந்தர் பதில் சொல்லவில்லை; சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''மனக் கட்டுப்பாடு இல்லாமலேயே தெய்வ தரிசனம் என்பது எல்லாரையும் கவர்ந்துள்ளது. கஷ்டமான புத்தகங்களைப் படித்து மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டாம். இயற்கைச் சபலங்களை அடக்கி ஒடுக்கி அவஸ்தைப்பட வேண்டாம். மது மங்கையுடன் கூடவே பேரின்பம் என்றால் யார்தான் வேண்டாம் என்பார்கள்? குருவே நீங்கள்தான் ஜனநாயக உலகுக்கு ஏற்ற தலைவர்....!'' என்று பாராட்டினான் ராபின்ஸ்.

''சரி.... நான் அமெரிக்கப் பிரயாணத்தை மேற்கொள்ளுகிறேன். அதற்கு முன்பு இந்தியப் பத்திரிகை நிருபர்களையும் சந்தித்து விடுகிறேன். நான் உங்களுடன் தங்கியிருக்கும் செய்தியை நீங்கள் வெளியிடலாம்'' என்றார் பரமானந்தர்.

பரமானந்தருக்குத் டில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்துக்குப் போலீஸ் பந்தோபஸ்து தேவைப்பட்டது. ஸப்ரூ ஹால் பொங்கி வழிந்தது. மத்திய மந்திரிகளில் இரண்டொருவர் கலந்துகொண்டு பரமானந்தரின் பெருமையை எடுத்துக் கூறினார்கள். பாரகம்ப ரோட் முழுதும் கார் மயம். மிஸ் இந்தியா போட்டி நடப்பதாக எண்ணி ஸப்ரூ ஹாலுக்குச் சென்ற சிலருக்குப் பிறகுதான் தெரிந்தது, பரமானந்தர் பேசப் போவது......

அமெரிக்காவுக்குப் பயணமானார் பரமானந்தர். அமெரிக்காவில் அவருக்கு அமோக வரவேற்பு. பிராட்வேயும் ஹாலிவுட்டும் அவர் காலடியில் விழுந்தன. ''எல். எஸ். டி.யும் தியானமும்'', ''விவாகரத்தும் தியானமும்'' என்ற தலைப்புக்களின்கீழ் அவர் ஆற்றிய பிரசங்கங்கள் அமெரிக்காவையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டன. ''பாரதத்துக்கு வாருங்கள். தியானத்தைச் சொல்லித் தருகிறேன். பதினைந்தே நிமிஷங்களில் உள்ளொளி காணலாம். இது உத்தரவாதம்'' என்றார் பரமானந்தர். விசாவுக்காக 'க்யூ' வரிசைகள் நீண்டன. பாரத அரசாங்கத்தின் சார்பாக நிதி இலாகா துறவிக்குப் பாராட்டுக் கடிதம் அனுப்பிற்று. அயல்நாட்டு யாத்திரிகர்களை வரவேற்கத் டில்லித் தெருக்கள் செப்பனிடப்பட்டன.

ராபின்ஸ் பத்திரிகை நிருபர் வேலையை ராஜிநாமா செய்துவிட்டுப் பரமானந்தருடைய பிரதமக் காரியதரிசி ஆனான். லட்சுமண் ஜூலாவில் அவர் ஏற்படுத்த விருந்த ஆசிரமத்துக்காக டாலர்கள் வந்து குவிந்தன. இதை நிர்வகிக்க ஒரு காரியாலயம் உருவாயிற்று.

அமெரிக்காவின் தலைசிறந்த ஒரு 'ஆர்க்கிடெக்ட்' போட்டுத் தந்த திட்டத்தின்படி லட்சுமண் ஜூலாவில் தியானம் செய்வதற்கான ஆசிரமங்களும், மற்றைய சௌகரியங்களுக்கான கட்டடங்களும் எழுந்தன. அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் கங்கையாற்றில் நீராட இயலாதென்பதற்காக அழகான நீச்சல் குளங்கள் தாமரை மலர் வடிவத்திலும், நவீன கலைப் பாணி வடிவங்களிலும் கட்டப்பட்டன. கட்டடங்களிலெல்லாம் நிறுக நிறுசான வண்ணக் கண்ணாடிகள். மரங்கள் செறிந்த இமயமலைக் காடுகளில் உட்காருவதற்கு மேடைகளும், செயற்கை நீரருவிகளும் உண்டாயின. பரமானந்தருடைய புதிய தியான ஏற்பாட்டின்படி மது அருந்துவதோ, அதை ஒட்டிய மற்றைய விஷயங்களோ தவறில்லை என்ற காரணத்தால் அவற்றுக்கும் இடமளிக்கும் வகையில் பரமானந்தருடைய 'ஜெட் உலக ஆசிரமம்' எழுந்தது. படுக்கை அறைகளெல்லாம் 'ஏர்-கண்டிஷன்' செய்யப்பட்டிருந்தன.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஆறு மாதங்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார் பரமானந்தர். உலகத்தின் எல்லாப் பிரதம நகரங்களிலும் அவர் தியான ஏற்பாட்டுக்குக் கிளைகள் ஏற்பட்டன. அவர் பாரதம் திரும்பிய போது, அவருடன் அமெரிக்காவிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் ஒரு பெரிய நட்சத்திரப் பட்டாளமே வந்தது.

'பாரதப் பண்பாட்டை' வேற்று நாடுகளில் கொடி கட்டிப் பறக்கச் செய்த பரமானந்தருக்குத் டில்லிப் பிரமுகர்கள் ஒரு பெரிய வரவேற்பு அளித்தனர். ஒளிவு மறைவு இல்லாமல் ஆடை தரித்துத் திரைப் படங்களில் நடித்த ஹாலிவுட் நடிகைகள் இப்பொழுது பைஜாமா, குர்த்தா அணிந்து மேடையில் தோன்றியது கண்கொள்ளாக்

# ராம்தீர்த் பிரஹ்மி ஆயில்

( ஸ்பெஷல் நெ: 1 )  ( ரிஜிஸ்டர்டு )



கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கரு நிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம், பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சியளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

## யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்கியமாக வாழ்வீர்கள்.

விலை ரு. 3. ( தபால் செலவு உள்பட )

## SHRI RAMTIRTH YOGASHRAM

**DADAR - BOMBAY - 14**

மதராஸ் டிப்போ : 25, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ் - 3
போன் : 34258

எமது சென்னை ஆபீஸில் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன

---

தொலை பேசி எண் : 76103  த. பெ. எண் : 2910  தந்தி : செந்தில்

# தி இந்தோ மெர்கண்டைல் பண்ட் பிரைவேட் லிட்.

(ரிஜிஸ்டர்ட் : இந்தியன் கம்பெனி சட்டம் 1956க்கு உட்பட்டது)

25, சுந்தரேஸ்வரர் தெரு - மயிலாப்பூர், சென்னை - 4

கீழ்க்காணும் சீட்டு குரூப்புகளுக்கு, 1961-ம் வருடத்திய 24-ம் நம்பர் மதராஸ் சீட்டு பண்டுகள் சட்டத்தின் கீழ் நாங்கள் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

| வகுப்பு சிரிஸ் | சீட்டு நெ. சீட்டுத் தொகை | மாதத் தவணை | டிக்கெட்டுகள் எண்ணிக்கை | மொத்த காலம் |
|---|---|---|---|---|
| | | **தினசரி சீட்டு** | | |
| A | ரு. 9,000 | ரு. 20 தினசரி | 30 | 450 நாட்கள் |
| B | ரு. 4,500 | ரு. 10 ,, | 30 | 450 ,, |
| C | ரு. 2,000 | ரு. 5 ,, | 40 | 400 ,, |
| D | ரு. 800 | ரு. 2 ,, | 40 | 400 ,, |
| E | ரு. 400 | ரு. 1 ,, | 40 | 400 ,, |
| | | **மாதாந்திர S. T.** | | |
| A | ரு. 6,000 | ரு. 200 மாதத்துக்கு | 30 | 30 மாதங்கள் |
| B | ரு. 3,000 | ரு. 100 ,, | 30 | 30 ,, |
| C | ரு. 1,500 | ரு. 50 ,, | 20 | 30 ,, |
| D | ரு. 750 | ரு. 25 ,, | 30 | 30 ,, |
| E | ரு. 600 | ரு. 20 ,, | 30 | 30 ,, |
| F | ரு. 450 | ரு. 15 ,, | 30 | 30 ,, |
| | | **மாதாந்திர L. T.** | | |
| A | ரு. 30,000 | ரு. 500 மாதத்துக்கு | 60 | 60 மாதங்கள் |
| B | ரு. 15,000 | ரு. 250 ,, | 60 | 60 ,, |
| C | ரு. 7,500 | ரு. 125 ,, | 60 | 60 ,, |
| D | ரு. 3,600 | ரு. 60 ,, | 60 | 60 ,, |
| E | ரு. 1,800 | ரு. 30 ,, | 60 | 60 ,, |
| F | ரு. 1,200 | ரு. 20 ,, | 60 | 60 ,, |

இதர விவரங்களுக்குத் தேவையான குரூப்பை குறிப்பிட்டு எழுதவும் :

## இந்தோ மெர்கண்டைல் மூலம் சேமித்து பலன் அடையுங்கள்

கிளை: 1, ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்-1
தொலைபேசி எண் : 21941

M. V. சுப்ரமணியம்
மேனேஜிங் டைரக்டர்



இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை
மிட்லண்ட்
மஹாராணி
ராக்ஸி
ராம்
மற்றும்
தென்னகமெங்கும்
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
நடிக்கும்
சுஜாதாவின்
என் தம்பி
டைரக்ஷன்
A.C. திருலோகசந்தர் M.A.,
பாடல்கள் :
கண்ணதாசன்
வசனம் :
A. L. நாராயணன்
இசை
M.S. விஸ்வநாதன்
ARIES

காட்சியாக இருந்தது. அவர்கள் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள். என்ன வென்று விசாரித்தபோது, 'இராம நாமம்' என்று தெரிய வந்தது. 'வெளி நாடுகளில் இராம நாமம் விற்றேன்' என்றார் பரமானந்தர், தமக்கென்றே உரிய இயல்பான ஹாஸ்யத்துடன்.

அவ்வளவுதான்; அடுத்த நாள் பார்லிமெண்டில் கம்யூனிஸ்ட் அங்கத்தினர் ஒருவர் 'ராம நாமம்' விற்கும் தொழிலைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வந்தார். பரமானந்தரையே ஒரு தேசிய ஸ்தாபனமாகக் கருதி, அவருடைய வெளிநாட்டு சிஷ்யர்களுக்கும் ராஷ்டிர பாஷையாகிய ஹிந்தியைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று சம்யுக்த சோஷலிஸ்ட் அங்கத்தினர் ஒருவர் திருத்தம் கொண்டு வந்தார்.

லட்சுமண் ஜுலா அமளிப்பட்டது. நட்சத்திர தரிசனத்துக்காகப் பத்திரிகை நிருபர்களும் இளைஞர் சேனையும் அங்கு குழுமியிருந்தனர். இன்னின்ன மரத்தடியில் யார் யார் உட்கார்ந்து 'தியானம்' செய்ய வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டுப் பெயர்களை 'டைப்' அடித்து ஒட்டியிருந்தார்கள். அவரவர்களுக்குரிய 'சப்த'த்தைத் திரும்பத் திரும்பச் சொல்ல அலுக்கும் சில 'பெரிய நட்சத்திரங்களின்' சௌகரியத்துக்காக, ஒரு தடவை சொல்லியதை ரிகார்ட் செய்வதற்காக 'டேப் ரிகார்டுகள்' வைக்கப்பட்டிருந்தன.

புதிய தியான ஏற்பாட்டைத் தொடங்கி வைத்துப் பரமானந்தர் பேசினார்: 'தியானம் என்றால் புலன்களை அடக்க வேண்டும். அது இதுவென்று இதுவரை ஏமாற்றி வந்திருக்கிறார்கள். தேவையில்லை. அவரவர்கள் தங்கள் தங்களுக்கு இஷ்டமான காரியத்தைச் செய்யலாம். மது அருந்தலாம், மாமிசம் சாப்பிடலாம், மங்கையை நாடலாம். பதினைந்து நிமிஷங்கள் தியானம் செய்தால் போதும். ஒவ்வொருவருக்கும் ஒரு மந்திரம் உண்டு. ராம நாமமாக இருக்கலாம். கிருஷ்ணசப்தமாக இருக்கலாம். ஏன், 'டாலர், டாலர்' என்றுகூடச் சொல்லலாம். ஒலி என்பது தியான ஏணியின் முதல் படி. ஏறிச் சென்றால் சொர்க்கத்தின் வாசலை அடைவோம். தியானத்துக்குப் பிறகு புதிய உத்வேகத்தைப் பெற்று இஷ்டப்படி நீங்கள் செயலாற்றலாம். பாவ புண்ணியத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை...'


இதையொட்டி, ஹாலிவுட்டின் பிரதம இசை அமைப்பாளராகிய வாலாடி விஸ்கி அமைத்துத் தந்த 'ட்யூ'னில் கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஸ்லோகங்கள் பாடப்பட்டன. நட்சத்திரங்கள் காமிரா முன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். ஒரு புதிய உலகத்தையே உண்டாக்கிவிட்ட உற்சாகம் எங்கும் பொங்கி வழிந்தது.

ஒவ்வொரு சிஷ்யரையும் தனித் தனியாக அழைத்துப் புதிய தியான முறையைச் சொல்லித் தந்தார் பரமானந்தர். எல்லோரும் தங்கள் தங்கள் மரங்களை நாடிச் சென்றார்கள்.

ஓங்கி வளர்ந்த குன்றுகள் அடங்கிய இமயமலைச் சாரல். அமைதியின் பெருமூச்சாக ஓடும் கங்கையாறு. பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மரங்கள். தியானத்தில் ஆழ்ந்த அரம்பையர் போன்ற ஹாலிவுட் நங்கைகள்.... நீச்சல் குளங்கள், கண் கவர் கட்டடங்கள், எல்லாவற்றுக்கும் சிகரமாகப் பேரொளியை உலகுக்குத் தந்த இருபதாம் நூற்றாண்டு மெஸ்லயா பரமானந்தர். இவரை வைத்துக் கொண்டு ஒரு திரைப்படம் தயாரித்தால் என்ன என்று தோன்றிற்று, தியானத்தை நாடி வந்த ஹாலிவுட் தயாரிப்பாளர் டி ஸ்மித்துக்கு. சொல்லப் போனால், தியானம் செய்யும் போதுதான் அவருக்கு இந்த எண்ணம் உண்டாகியது.

உடனே அவர் ராபின்ஸைக் கண்டு விவாதித்தார். முதலில் ராபின்ஸ் இந்த

மாடர்ன் ஆர்ட்டிஸ்ட் மருதாசலம் – 9



யோசனைக்கு மதிப்புத் தரவில்லை. ஆனால் பரமானந்தர் படத்தில் நடித்தால், வசூலாகும் தொகையில் பாதிக்கு மேல் ஆசிரமத்துக்குத் தருவதாக டி ஸ்மித் வாக்குறுதி அளித்த பிறகு, இருவரும் பரமானந்தரிடம் சென்றார்கள்.

பரமானந்தர் வெகு நேரம் தீவிரமாகச் சிந்தித்தார். கடைசியில் அவர்முகத்தில் புன்னகை தோன்றியது.

''வண்ணப் படமா?'' என்று கேட்டார்.

''ஆமாம், சினிமாஸ்கோப்!'' என்றார் டி ஸ்மித்.

''சரி...இங்கு இவ்வளவு பேர்கள் வந்திருக்கிறார்களே, இவர்களைப் பாதியில் இப்படியே விட்டுச் செல்வதா?'' என்று கேட்டார்.

''ராபின்ஸ் பார்த்துக் கொள்வார்.''

பரமானந்தர் ராபின்ஸை நோக்கினார். அவன் உடனே பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் பேசாமல் இருந்தான்.

'' என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று ராபின்ஸைக் கேட்டார் டி ஸ்மித்.

''எனக்கும் படத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆசை. ஆசை உண்டாகிவிட்டால், அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு சுருவாக நடிப்பது கஷ்டம்...'' என்றான் ராபின்ஸ்.

''ஒரு வருஷம் கழித்துப் பார்க்கலாமே?'' என்றார் பரமானந்தர்.

''ஒரு வருஷம் கழித்து இது ஆறிப் போய்விடக் கூடும்'' என்றார் தயாரிப்பாளர் டி ஸ்மித்.



'' சரி, சாயந்திரம் யோசித்துச் சொல்லுகிறேன். நான் எல்லோருக்கும் தியானம் சொல்லிக் கொடுத்துச் சில நாட்களாக நானே தியானம் செய்யவில்லை'' என்றார் பரமானந்தர்.

''மிஸ் ஹாரியட் நடிப்பாளா?'' என்று ஆவலோடு கேட்டான் ராபின்ஸ். மிஸ் ஹாரியட்டுக்கும் டி ஸ்மித்துக்கும் உள்ள தொடர்பு அவனுக்குத் தெரியாத விஷயமல்ல. அவர்கள் இருவருடைய ஆசிரமங்களும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தான் டி ஸ்மித் லட்சுமண் ஜூலாவுக்கு வந்திருந்தார்.

''குருவைக் கேட்ட பிறகுதான் நடிகைத் தேர்தல் செய்ய வேண்டும்'' என்றார் டி ஸ்மித்.

அன்று சாயந்திரம் மீண்டும் இருவரும் பரமானந்தரைச் சந்தித்தார்கள். அவர் முகம் பிரகாசமாக இருந்தது.

''வழி கண்டுபிடித்து விட்டேன்'' என்றார் குரு. டி ஸ்மித் தாம் அடையப் போகும் லாபத்தை மானசிகமாகப் பங்கிடு செய்தார்.

'' என்ன வழி?'' என்று கேட்டான் ராபின்ஸ்.

''நான் இந்த ஆசிரமத்தில் எதற்காக இருக்க வேண்டும்? ஒவ்வொருவருக்கும் அவரவருடைய மந்திரத்தைக் கண்டுபிடித்துச் சொல்லித் தரத்தானே! ஒருவர் சொல்லித் தந்து விட்டால் தியானம் செய்வது அவரவர்களுடைய பொறுப்புத் தானே? ஆகவே....''

பரமானந்தர் தமது திட்டத்தை விவரித்தார். டி ஸ்மித் திகைத்துப் போனார். துறவிக்கு எவ்வளவு கூர்மையான அறிவு!...ஜெட் உலகத்துக்கு ஏற்ற தலைவர் அல்லவா?

''ராபின்ஸ் தாமும் நடிக்க விரும்புகிறார் என்ற காரணத்தால் அவரும் நடிக்கலாம். எனக்கு ஆட்சேபமில்லை.''

அடுத்த நாள் பத்திரிகைகளில் பரமானந்தர் ஹாலிவுட் படத்தில் நடிக்கப் போகும் செய்தி கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் கட்டிப் பிரசுரமாகியது.

அதே சமயத்தில் நியூயார்க்கிலிருந்து குருவின் ஸ்தானத்திலிருந்து சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்ய ஏற்றுமதியாகியது, ஒரு கம்ப்யூடர். பரமானந்தரின் 'காஸ்மிக்' மூளையை மெச்சாதவர்கள் இல்லை.

நாள் முழுதும்
தலைமயிர் படிந்திருக்க



கல்கெமிகோவின்

காஸ்டரால்

சுகந்த கூந்தல் தைலம்
உபயோகியுங்கள்

மிக சுத்தமான கலிம்பற்ற ஆமணக்கெண்ணெயிலிருந்து தயாரித்தது. மயிர்க்கால்களை புஷ்டிப்படுத்தி மங்கலான மயிர்களுக்கு புத்துயிரையும் பிரகாசத்தையும் அளித்து நாள் முழுதும் மயிர் கலையாமல் இருக்கவும் உதவுகிறது.




CAC-1/68 T/a

ஒரு கல்கத்தா கெமிக்கல்
தயாரிப்பு



Sri Navinchandra Himchand Shah, Director, Jeewanlal (1929) Limited, Calcutta, and Smt. Gitaben were married recently.

மிகவும் மழமழப்பாக முகக்ஷவரம்
செய்து கொள்வதற்கென
'இரு முறை தீட்டப்பட்டது'
•
சேஸரில் பொருந்தினால்
உடைவதில்லை
•
நீடித்து உழைக்கிறது




பிரமாதமான முகக்ஷவரத்
திற்கு எப்பொழுதும்
ஜெனித் பிளேடுகளையே
உபயோகியுங்கள்

ஹிந்த் ரேஸர் அண்ட் பிளேடு கோ. ப்ரை. லிட.

hrb/104 ta

# ஒரு டிரேடு மார்க்கிலே என்ன இருக்கிறதா?



INTERPUB/LG/I A

## ஏராளமான விஷயங்கள்

பெரும்பாலோர் நினைப்பதுபோல டிரேடு மார்க் என்பது ஒரு வியாபாரியின் வணிகச் சின்னம்தானா. அல்ல, அதற்கும் மேல். உதாரணமாக, மேலே காணப்படும் டிரேடு மார்க்கை எடுத்துக் கொள்ளுங்களேன். அது, கஸ்தூர்பாய் லால்பாய் சார்புள்ள ஏழு நெசவாலைகளின் தொகுதியான லால்பாய் குரூப்புக்குச் சொந்தம். இந் நூற்றாண்டின் துவக்க கால முதலே, தரமான துணிகளைத் தயாரித்து வரும் ஆலைகள் அவை. அவற்றின் ஒற்றுமை, அனுபவம், முன்னேற்றம் ஆகியவற்றின் சின்னமே இந்த டிரேடு மார்க்.

முடிவாக, எனினும் முக்கியமாக, நேர்த்தியான துணிகளை நயமான விலைகளிலே நீங்கள் பெறுவதற்கான உத்தரவாதமே அந்த லால்பாய் டிரேடு மார்க்.

# லால்பாய் க்ரூப்

தி அரவிந்த் மில்ஸ் லிமிடெட்.
தி ராய்ப்பூர் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
தி அசோகா மில்ஸ் லிமிடெட்.
தி ஸர்ஸ்பூர் மில்ஸ் லிமிடெட்.
தி அருணா மில்ஸ் லிமிடெட்.
தி அகமதாபாத் நியூ காட்டன் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
தி நூதன் மில்ஸ் லிமிடெட்.

விஞ்ஞானிகள் வரிசை

# எலக்ட்ரானிக்ஸ் நிபுணர்

இது எலக்ட்ரானிக்யுகம் என்று சொல்லுகிறோம். எலக்டிரானிக் சாதனங்களின் எண்ணிக்கை கணக்கெண்ணி மாளாது!

காற்றுக்கூட இல்லாத வெற்றிடத்தில் எலக்டிரான் மின் அணுவின் அபார சக்தியைக் கட்டுப்படுத்திப்பயனுள்ள விதங்களில் உபயோகப்படுத்தும் விஞ்ஞானத் துறையே எலெக்டிரானிக்ஸ்.

இவையெல்லாம் மேனாட்டிலிருந்து இறக்குமதி செய்தால்தான் முடியும்; நம்மால் முடியாது என்று அங்கலாய்த்த காலம் ஒன்றிருந்தது. அதை பழங் கதையாய், வெறும் கனவாய் மாற்றி நாமும் எலக்டிரானிக் சாதனங்களைச் செய்யலாம் என்று நம்பிக்கையூட்டும் வகையில் நாட்டின் சூழ்நிலையை மாற்றியமைத்த பெருமை திரு டி.வி. ராமமூர்த்தி அவர்களைச் சாரும்!

இந்தியக் கரும்புச் சாகுபடியில், அதிக சர்க்கரை சத்துள்ள ஒரு கரும்பு வகையைத் தோற்றுவித்த ஸர் டி. எஸ். வேங்கடராமனின் புதல்வர்தான் திரு டி. வி. ராமமூர்த்தி. முதல் எழுத்து 'டி' அவர் சொந்த ஊரான திருவையாற்றைக் குறிக்கிறது !

திரு டி. வி. ராமமூர்த்தி பௌதிகத் துறையில் 'ஹானர்ஸ்' பட்டம் பெற்றபின், மீண்டும் கிண்டி பொறி இயல் கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. பட்டம் பெற்றார். அத்துடன் நின்றுவிடவில்லை. பெங்களூரிலுள்ள இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸையன்ஸ் கல்லூரியில் சேர்ந்து, தொலைபேசி யந்திரத் துறையில் (டெலி கம்யூனிகேஷன்) ஒரு டிப்ளமா பட்டம் பெற்றார்.

அவர் தனியார் துறையில் ஒரு ரேடியோ கம்பெனியில் பிரதம என்ஜினீயராக வேலை செய்து வந்த போதுதான், உள்நாட்டுச் சரக்கையும் திறமையையும் கொண்டே இந்தியாவில் ரேடியோ செய்யலாம் என்று செய்தே காண்பித்தார். இப்படி ரேடியோவுக்குத் தேவையான பாகங்களைச் செய்யும் முதல் தொழிற்கூடத்தை நிறுவிய பெருமை திரு டி. வி. ராமமூர்த்தி அவர்களைச் சாரும். மின்சார வசதியில்லாத ஊர்களில் 'பாட்டரி' மின்சாரத்தின் உதவி கொண்டே ரேடியோப் பெட்டியை இயங்கச் செய்ய முடியும் என்பதைக் காண்பித்து, பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் மக்கள் ரேடியோவைக் கேட்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவரும் திரு ராமமூர்த்திதான்.

தில்லியில் உள்ள தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்த டாக்டர் கிருஷ்ணனும், டாக்டர் எஸ். எஸ். பட்நாகர் அவர்களும், மேற்படி கழகத்தின் எலக்ட்ரானிக் துறைக்குத் தலைமை ஏற்று, அப்போது அவர் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தை விட குறைந்த வருமானத்தில் பணியாற்ற அழைத்தபோது அவர் முக மலர்ச்சியுடன் ஏற்றார்.

வருவாய் குறைவானாலும் எலக்ட்ரானிக் துறையில் இந்தியாவுக்குப் பல்வேறு தொழில்களில் உபயோகமாகக்கூடிய யந்திர சாதன உறுப்புக்களை இந்திய மூலப்பொருள்களைக் கொண்டே செய்ய முடியுமா என்று ஆராய வாய்ப்பு இங்கு அதிகமாக இருக்கவேதான் அவர் இந்தப் பதவியை ஏற்றார்.


இங்கு வந்த பதினைந்து ஆண்டுகளில் ராணுவப் பாதுகாப்புத் துறைக்கும் தொழில் துறைக்கும் உபயோகமாகக் கூடிய பல எலக்ட்ரானிக் சாதனங்களைத் தயாரித்துள்ளார்.

தனியார்த் துறையில் வேலை செய்த போது இவர் கண்டுபிடித்த சாதனங்களை உடனுக்குடனே உபயோகப்படுத்தி, அதனைப் பெருவாரியாகப் பெருக்கிப் பயனடைந்தார்கள். ஆனால் இங்கு வந்தபின் இவர் செய்த சாதனங்களை அரசாங்கம் ஏற்று நடத்தும் தொழிற்கூடங்களில்கூட உபயோகிக்காமல் இருப்பதாக அவரே வருத்தப்படுகிறார்.

இவரை எந்த விஞ்ஞானிகள் கூட்டத்திலிருந்தாலும் சுலபமாகக் கண்டு பிடித்துவிடலாம். ஏனெனில், இவர் எந்தக் கூட்டத்துக்கும், வேட்டியும் ஜிப்பாவும், துப்பட்டாவும் அணிந்து கொண்டுதான் போகிறார். 1953ல் மேனாட்டில், பிரஸ்ஸல்ஸிலும், பெல்கிரேடிலும் நடைபெற்ற அகில உலக விஞ்ஞானிகள் மகாநாடுகளுக்கும் இதே வேட்டி — ஜிப்பா — துப்பட்டாவுடன்தான் சென்றார். இந்தப் பிரயாணத்தின் போது, முதுகெலும்புக்குள்ளிருக்கும் நரம்புத் தண்டில் முறிவு ஏற்பட்டு எட்டு மாத காலம் லண்டன் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாகக் கிடக்க நேர்ந்தது. அதன் விளைவாக அவர் கழுத்தில் ஒரு காலர் போன்ற பட்டையைச் சதா சர்வகாலமும் அணிய வேண்டியதாகி விட்டது.

திரு ராமமூர்த்தியின் ஆராய்ச்சிகளைத் தேசம் நன்கு பயன்படுத்தும் என்று எதிர்பார்ப்போமாக. ஆதாரம்: 'ஹிந்து'









K.S.C.14.66 TM

# க்ருஷென்

## எந்த வயதிலும் உங்களை 'இளமையோடு' இருக்கச் செய்கிறது

தினமும் க்ருஷென் சாப்பிட்டு என்றும் இளமையோடு விளங்குங்கள். க்ருஷெனில் சரிசமமாகச் சேர்ந்துள்ள முக்கியமான ஆறு தாது உப்புகள் மலச்சிக்கல், மூட்டுவலி, ஈரல் மற்றும் மூத்திரப்பைக் கோளாறுகள், கீல் வாதம், பிடிப்பு வலி முதலியவை வராமல் தடுக்கின்றன.




**க்ருஷென் உங்களை இளமையோடு வைத்திருப்பதன் விதம் இதுதான்:** மூத்திரப் பைகளைக்கழுவுகிறது • ஈரலை நன்குக இயங்கச் செய்கிறது • இரத்தத்தை சுத்தமாக்க உதவுகிறது • மலச்சிக்கல் அகல உதவுகிறது • ஜீரண சக்தியைப் பெருக்குகிறது • பசியெடுக்க வைக்கிறது • மூட்டுவலிகளை அகற்றுகிறது.

எளிய முறையில் என்றும் இளமையோடு விளங்க தினந்தோறும் ஒரு ஸ்பூன் **க்ருஷென்** சாப்பிடுங்கள்.

---

# டெபாசிட்டுகள்
# ரூ 1,000 மும்
## அதற்கு மேற்பட்ட தொகைகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### பிக்ஸட் டெபாசிட்டுகள்

கவர்ச்சிகரமான வட்டியில் ரூ 50,000/- வரை
இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| ஒரு வருடமும், அதற்கு மேலும் ஆனால் 2 வருடங்களுக்குள்ளாக | — 6¼ % |
| 2 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்குள்ளாக | — 6½ % |
| 3 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்களுக்குள்ளாக | — 6¾ % |
| 5 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 7 வருடங்களுக்குள்ளாக | — 7¼ % |
| 7 வருடங்களும், அதற்கு மேலும் | — 7½ % |

## மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்

எல். எல். ஏ. பில்டிங்ஸ், 150-A, மவுண்ட் ரோடு, மதராஸ்-2.

போன்: 82026

கிளை: 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்
டி. வி. நரசிம்மன், எம். ஏ., பி. ஏ., ஐ. ஐ. பி., செக்ரட்டரி

Criterion-MII-928-TL

# காஷ்மீர் இளவரசியின் கதி!

'நந்தலால்'




தலைப்பைப் படித்ததுமே இந்த இளவரசிக்கு என்ன நேர்ந்தது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அது ஒரு சோகக் கதை.

காஷ்மீர் இளவரசியின் வருகையைச் சிங்கப்பூர் மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால் ஏமாந்தனர். அவள் உயிருடன் இருந்தால்தானே சிங்கப்பூருக்கு வருவதற்கு!

1955 ஏப்ரல் 11ந் தேதி இந்திய விமானப் போக்குவரத்துச் சரித்திரத்திலேயே ஒரு துக்க தினம். அன்றுதான் 'காஷ்மீர் இளவரசி' நாசகாரர்கள் வைத்த கால வெடிக்கு (டைம் பாம்ப்) பலியானாள்.

இந்தோனேஷியாவில் பாண்டுங் என்ற இடத்தில் நடைபெற்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற ''பாண்டுங் சமாதான'' மகாநாட்டில் கலந்துகொள்ள எட்டுப் பேர் அடங்கிய கோஷ்டியினர் 'காஷ்மீர் இளவரசி' என்ற விமானத்தில் ஹாங்காங்கிலிருந்து புறப்பட்டனர்.

பாதி வழி வந்து கொண்டிருக்கும்போது பெரும் வெடிச் சத்தம் ஏற்பட்டு விமானம் தீப்பற்றியது. பிரயாணம் செய்த எட்டுப் பேர்களில் மூவர் மட்டுமே கடலில் எட்டு மணி நேரம் எமனுடன் போராடித் தப்பினர். இவர்கள் துணை பைலட் தீக்ஷித். ஜே. ஸி. பதக். விமானப் பாதுகாப்பு என்ஜினியர் ஏ. எஸ். கார்னிக். இவர்கள் பிரிட்டிஷ் கப்பல் ஒன்றின் மூலம் சிங்கப்பூர் சென்று 'மராத்தா இளவரசி' என்ற விமானத்தில் பம்பாய் வந்து சேர்ந்தனர்.

இந்தக்காஷ்மீர் இளவரசியில் சீனப்பிரதமர் சூ என் லாய் பிரயாணம் செய்ய இருந்தார். இவர் கடைசி நிமிஷத்தில் திட்டத்தை மாற்றிப் பிரயாணத்தைத் தள்ளிப் போட்டார். நாச வேலை நடக்கலாம் என்று முன்கூட்டியே ஹாங்காங் விமான நிலையத்துக்குச் சீன அரசாங்கம் அறிவித்திருந்தது. ஹாங்காங் விமான நிலையத்துக்கு அழையா விருந்தாளியாக வந்து இந்திய விமானக் குழுவினரிடம் பேச்சுக் கொடுத்தார் ஒரு நபர். ஒரு கைப்பெட்டி காணாமல் போய்ப் பரபரப்பை உண்டாக்கியது. சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் அது முன்பிருந்த இடத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் நோக்குகையில் திட்டமிட்டுச் செய்யப்பட்ட வேலை என்று ஊர்ஜிதமாகிறது.

ஹாங்காங் விமான நிலையத்தைச் சேர்ந்த சென — சூ என்பவன் இக்கால வெடியை வைத்துவிட்டு போர்மோஸாவுக்குத் தப்பி ஓடி விட்டான். இவனை விசாரணைக்கு ஒப்படைக்க 'சியாங்–கே–ஷேக்' (தேசிய சீனா) அரசாங்கம் மறுத்து விட்டது. விமானத்தில் எந்த விதக் கோளாறும் இருக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சூ என்லாய் தெய்வாதீனமாக அன்று தப்பினார்.

சுமார் முப்பது லட்சம் மைல்கள் பிரயாணம் செய்து காலவெடிக்குப் பலியான காஷ்மீர் இளவரசி பன்முறை நேருஜியை ஏற்றிச் செல்லும் பாக்கியம் பெற்ற விமானம்.

# தனிமைத் துயர்

ஸரோஜா ராமமூர்த்தி

□ □ □ □

அட்டைப் படக் கதை

□ □ □ □

செல்லக் குழந்தை ஒன்று முனுமுனுத்துச் சிணுங்குவது போல் காற்று பொருமிக் கொண்டேயிருந்தது. சரளா தன்னந் தனியளாக அந்த வீட்டு வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடி கம்பளிச் சட்டை பின்னிக் கொண்டிருந்தாள்.

எதிர்ச்சாரி வீடுகளுக்கிடையே அமைந்திருந்த புல் தரையில் குழந்தைகள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். நீல நிறச் சராயும் வெள்ளைக் கம்பளிச் சட்டையும் அணிந்து அவள் மகன் முரளி அடித்துப் பிடித்து ஓடி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு சரளாவின் உதடுகளில் இளநகை அரும்பியது. வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பெருமிதத்துடன் மீண்டும் சட்டை பின்னுவதில் முனைந்தாள்.

முரளி ஆரோக்கியமான சிறுவன். அதிகம் வியாதி வந்தது கிடையாது. நன்றாக ஓடியாடி விளையாடிவிட்டு வந்தானானால்,— ''அம்மா! தூங்கப் போறேன், கதை சொல்றியா?'' என்றபடி தன் செப்பு வாயைத் திறந்து நீண்ட கொட்டாவி ஒன்று விடுவான். அவனும் தூங்கிவிட்ட பிறகு அங்கே ஆழமான அமைதி நிலவும் போது அவள் செய்வதொன்றும் தெரியாமல் கணவன் தொலைவிலிருந்து எழுதும் கடிதங்களைப் படிப்பாள். அப்படிப் படிக்கையில் அவள் கணவனுடன் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பது போல் கற்பனையில் மிதந்து கொண்டேயிருப்பாள்.

திடுமென்று முரளி தூக்கத்தில் முனகுவான். பிறகுதான் தன் கணவன் அஸ்ஸாம் எல்லையில் தேசத்தைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருப்பது நினைவுக்கு வரும். ஜன்னலின் திரைச் சீலைகளை விலக்கிவிட்டு நெடுந் தொலைவில் பார்வையைப் பொருத்தி இரண்டு துளிக் கண்ணீரைச் சிந்துவாள் சரளா.

தன்னந் தனியாக அந்த வீட்டில் அவளும், முரளியும் இருப்பதே ஒரு வேடிக்கை. அதுவும் அவள் பிடிவாதத்தால் விளைந்தது.

கணவன் யுத்தகளத்துக்குச் செல்லுமுன்பாக அவளிடம் இதைப் பற்றி நீண்ட நேரம் விவாதித்தான்.

''உன் அம்மா வீட்டுக்குப் போயேன்'' என்றான் சிகாமணி சரளாவைப் பார்த்து.

''அதெப்படி முடியும்? அம்மாவுக்கு அந்த வீட்டில் முன்னைப் போல அதிகாரம் இல்லே. அண்ணி வந்த பிறகு அவர்கள் எதிலும் தலையிடுவதில்லே. எங்க அண்ணியைப் பற்றித்தான் தெரியுமே உங்களுக்கு! பெரிய ராஜா வீட்டு மகன்னு நெனைப்பு! அத்தனையும் கர்வம்!''

''சரி, சரி, அவங்க எப்படியோ இருந்துட்டுப் போறாங்க. நீ என்ன சும்மா அவங்க வீட்டுச் சாப்பாட்டை எதிர்பார்த்துக்கிட்டா இருக்கப் போறே? மாசம் சாப்பாட்டுக்குன்னு அண்ணனிடம் ஏதாவது குடுத்திடேன்.... அப்புறம் பால், பழம்னு தனியா வாங்கிக்க—''

''நான் ஒண்ணும் அங்கே போகல்லே. எனக்குப் பிடிக்கலேன்னு விடுங்க—''

''பின்னே எங்க வீட்டிலே போய் இரு...!'' என்றான் சிகாமணி.

''ஐயே!'' என்று உதட்டைப் பிதுக்கிக் கேலி செய்தாள் சரளா.

''உங்க ஊரும், நீங்களும்! சுத்தப் பட்டிக்காடு. குழந்தைக்குத் தலையை வலிச்சாக்கூட நல்ல டாக்டர் கிடையாது. அங்கே யார் போய் இருக்கிறது?''

''அப்ப இங்கேயே இருந்துக்க.... நான் நாளன்னைக்குக் கிளம்பறேன். உன் இஷ்டம். நீ எந்த வழியும் போக விடமாட்டே. அப்புறமா தனியா விட்டுட்டுப் போயிட்டான்னு உன் அம்மா, அப்பா என்னைக் கரிச்சுக் கொட்டுவாங்க....!''

''அவங்க கரிச்சுக் கொட்டறதைக் கேட்க நீங்கதான் இங்கே இல்லியே. அதைப் பத்தி உங்களுக்கு எதுக்குங்க கவலே?'' என்று சரளா சிரித்தாள். பளிச்சென்று முத்து வரிசை போல் இருந்த பற்களின் ஒளி முத்தாக மின்னின.

அவனும் பதிலுக்குக் குறும்பாகச் சிரித்தபடி அவள் கண்களை உற்றுப் பார்த்தான்.

இரண்டு பேருமே நல்ல பிடிவாதக் காரர்கள்.

சிகாமணி மிகவும் சிக்கனமாக அவன் பெற்றோர்களுக்கு மட்டும் சரளாவை அந்த ஊரில் தனியாக விட்டு விட்டுப் போவதைப் பற்றி எழுதினான். அதற்கு அவன் தந்தை நிஷ்டூரமும், கோபமும் கலந்த கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

'இந்தக் காலத்துப் பிள்ளைகளின் போக்கே மிகவும் விசித்திரமாக இருக்கிறதென்றும், அவனே ராணுவத்தில் சேர்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், படித்த மனைவியை விரும்பித் தேடிக் கொண்டவன் அவள் போக்குப்படி நடப்பதில் தாம் ஒன்றும் வியப்படையவில்லை என்றும் எழுதியிருந்தார்.

''மாமா என்ன எழுதியிருக்காங்க?'' சரளா அவன் உடுப்புகளுக்கு இஸ்திரி போட்டபடி கேட்டாள்.

''படித்துப் பாரேன். வழக்கமானதைத்தான் எழுதியிருக்காரு. வயசாச்சில்லே? அப்படித்தான் எழுதுவாங்க—''

''அவங்க என்ன வேணும்னாலும் எழுதட்டும். ஊருக்குக் கிளம்பறதுக்கு முன்னாடி அவங்களைப் போய்ப் பார்த்துச் சொல்லிக் கும்பிட்டுவிட்டுக் கிளம்புங்க'' என்றாள் சரளா.

சிகாமணி வியப்புடன் அவளைப்பார்த்தான். வண்டி வண்டியாக அவளைப் பற்றி அவர்கள் எத்தனைதான் குறை கூறினாலும் சரளாவின் மனம் சலிப்படைவதில்லை. ஒருவேளை அவள் தன்னைச் சோதிக்கிறாளோ என்ற ஒரு சந்தேகம் அவனுள் எழுந்தது.

''நிசம்மாத்தான் சொல்றியா சரளா?'' என்று கொஞ்சலுடன் கேட்டான் அவன்.

''ஏன் உங்களுக்கு அப்படியொரு சந்தேகம் அவங்களைப் பத்தி நான் எப்பவுமே உயர்வாத்தான் நெனச்சிருக்கேன்—'' சிகாமணி இதயத்தில் ஏக்கம் கவிந்தது. 'படித்த மனைவி படித்த பெண்' என்று அடிக்கடி தன் பெற்றோர்கள் ஏசினாலும் அந்தப் படித்த மனைவியின் பண்பு உள்ளத்தைப் பற்றி அவர்கள் புரிந்துகொள்ளவே இல்லையே என்றுதான் அவன் ஏங்கினான்.

சரளா கணவனின் பிரயாணத்துக்கு வேண்டியவைகளைப் பற்றிக் கவனிப்பதில் மூனைந்திருந்தாள். தொட்டிலில் கண் வளரும் மதலைக்கு மூன்று மாதங்கள் இருக்கலாம். சிகாமணி ரயிலுக்குப் புறப்படும் போது அது தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தது. மனைவியின் கண்கள் கலங்கின. உதடுகள் புன்முறுவலை உதிர்த்தன. மகிழ்ச்சியும் துயரமும் கலந்தவாறுசரளா ரயிலடியில் நின்றிருந்தாள்.

''எப்படித் தனியா இருப்பே?'' என்று ரயில் கிளம்புவதற்கு முன்பு திரும்பவும் கேட்டான் சிகாமணி.

''தனி என்ன தனி? இதோ உங்க மகன் இருக்கானே. இவனை விட இன்னொருத்தர் துணை எதற்கு?''

ரயில் கடைசியாகக் கூவிவிட்டுப் புறப்பட்டது; வீட்டுக்குத் திரும்பியதும் சரளாவுக்கு வீடே 'ஹோ'வென்று காட்சி தந்தது. ரேடியோவை உரக்கத் திருகிவிட்டுச் சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

மருமகன் அஸ்ஸாமுக்குச் சென்றுவிட்டதைக் கடிதம் மூலம் அறிந்த சரளாவின் தாய் சிறிது காலம் மகளுடன் வந்து தங்கியிருந்தாள். வயது சென்றவளாதலால் அவள் சரளாவின் தனிமையை அதிகம் போக்கிவிட்டதாக நினைக்க முடியாது. மேலும் அந்த ஊரில் கோடை நாட்களில் கூட மாலை நேரத்தில் லேசான குளிர் உண்டு. கிழவி எப்பொழுதுமே கம்பளியைப் போர்த்துக் கொண்டு கணப்படியில் உட்கார்ந்திருப்பாள். சரளாவுக்கு ஏதாவது வேலைகள் இருந்து கொண்டே இருக்கும். ஸ்வெட்டர் பின்னுவது, தோட்டம் போடுவது, கடைக்குப் போய் வருவது, குழந்தை முரளியைக்



கவனிப்பது என்று" அவள் பொழுது கருக்காகவே போய்க் கொண்டிருந்தது.

இடையில் கிழவிக்கு மார்ச்சளி கட்டிக் கொண்டு ஜுரம் வந்தது. படுத்த படுக்கையாகக் கிடந்தவளை வைத்தியம் பார்த்து உடலைத் தேற்றி ஊருக்கு அனுப்பி வைத்துவிட்டாள் அவள்.

''ஏண்டியம்மா! இந்த மலை சீமையிலே தனியா குழந்தையை வைச்சிக்கிட்டு இருக்கணுங்கறே? என்னோடே வந்துடேன்'' என்று தாயார் அழைத்தாள்.

''தனி என்ன தனி? ஊருக்கு வந்து ஒரு இரண்டு மாசம் தங்கியிருக்கலாம். பிறகு நானும் இவனும் என்னைக்குமே தனியாய்த்தான் குடித்தனம் நடத்தணும். அவர் சண்டை முடிஞ்சு ஊரோட வரதுக்கு எத்தனை வருஷங்கள் ஆகுமோ?'' என்று பதில் அளித்தாள் மகள்.

ஊரில் இருக்கிற மருமகளின் சுபாவத்தை நினைத்துக் கிழவி மகளை அதிகம் வற்புறுத்தவில்லை. ஊருக்குப்போய்விட்டாள். சிகாமணி ஊருக்குக் கிளம்பும்போது மூன்று மாதமாக இருந்த முரளி மூன்று வயதுப் பாலகனாக ஆகிவிட்டான். வீட்டின் எதிரே இருக்கும் 'நர்ஸரி'ப் பள்ளிக்குப் போக ஆரம்பித்துவிட்டான் அவன்.

'உங்க மகன் பள்ளியின் சீருடை அணிந்து கொண்டு உங்க மாதிரியே 'டாக் டாக்'கென்று நடந்து போகும்போது நீங்க என் கூடவே இருப்பதாக நினைக்கிறேன். உங்க வீட்டாரும், என் வீட்டாரும் திட்டம் போட்டுக் கோபித்துக் கொண்டாற்போல் ஒருத்தராவது கடிதம்கூடச் சரியாகப் போடறதில்லே. உங்க சின்னம்மா மகளுக்குக் கல்யாணம்னு கடிதம் வந்தது. போயிருந்தேன். ஒருத்தரும் அவ்வளவா நான் வந்ததை விரும்பலே போலிருக்கு. 'புருஷனை ராணுவத்திலே சேரச் சொல்லிட்டுத் தனியாவா இருக்கே'ன்னு உங்க சின்னம்மா கேட்டாங்க.

'சமீபத்திலே ஒரு முறை வரப்போறதா எழுதியிருந்தீங்களே. அதைப் பத்தி ஒண்ணுமே அப்புறம் எழுதலியே'' என்கிற மாதிரி நீண்ட நீண்ட கடிதங்களைக் கணவனுக்கு வரைந்து தள்ளுவதில் தன் தனிமைத் துயரைக் கரைக்கப் பார்த்தாள் சரளா.

கம்பளி நூல் உருண்டை பாதியாகக் குறையும்வரை ஊசிகள் இரண்டும் பின்னிக் கொண்டே இருந்தன. 'மஸ்டர்ட் கலர்' பின்னணியில் கறுப்பு வளைவுகள் குறுக்கும், நெடுக்கும் ஓடுகிறாற்போல் கம்பளிச் சட்டை உருவாகிக் கொண்டிருந்தது. சிகாமணியின் திரண்ட மார்பில் அந்தச் சட்டை அழகாகப் பொருந்தும் என்பதை நினைத்தபோது சரளாவுக்கு நீண்ட பெருமூச்சும், சிரிப்பும் வந்தன.

முரளி விளையாட்டை முடித்துக்கொண்டு எதிர்ச்சாரியிலிருந்த வீட்டிலிருந்து ஓடி வந்தான். அந்த மலைக் காற்றிலும் அவன் நெற்றி எங்கும் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன.

கம்பளி நூலையும், ஊசிகளையும் மேஜையின்மீது வைத்துவிட்டு மகனை அப்படியே அணைத்து முந்தானையால் வியர்வையை ஒற்றி எடுத்தாள்.

''முரளி! பாலும், பிஸ்கட்டும் சாப்பிடுடா கண்ணு! ரொம்ப நேரமா விளையாடிக்கிட்டே இருந்தியே! களைப்பாக இருக்குமே!'' என்றபடி உள்ளே போய்க் கோப்பையில் சூடான பாலும், பிஸ்கோத்துகளும் எடுத்து வந்தாள்.

அவள் தனக்கென்று அதிகமாக ஒன்றும் சமைத்துக் கொள்வதில்லை. இரண்டு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் பூரி செய்து வைத்துவிடுவாள். பழங்கள் இருக்கவே இருக்கின்றன.

இன்று என்னவோ, தலையை வலிப்பது போல் இருக்கவே, 'ஹீட்டரி'ல் காப்பி போட்டு எடுத்து வந்து நாற்காலியில் உட்கார்ந்து பருக ஆரம்பித்தாள். பாதிப் பருகிக்கொண்டிருந்தவள், கோப்பையை அருகே வைத்து விட்டு விளக்குகளைப் பொருத்தினாள்.

மீண்டும் வாசலுக்கு வந்தபோது அந்த நீண்ட சாலையின் வளைவில் யாரோ வந்து கொண்டிருந்தார்கள். யாராக இருக்கும் என்று சரளா நின்று கவனித்தாள். முரளி சித்திரப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு எழுத்துக் கூட்டிப் பாடம் படித்துக் கொண்டிருந்தான்.

தெருக் கோடியில் வந்துகொண்டிருந்தவர் ஒவ்வொரு வீடாகத் தயங்கி நின்று பார்த்துக்கொண்டே வந்தார். வருகிறவர் ராணுவத்தைச் சேர்ந்தவர் என்பது அவர் பார்வையின் மிடுக்கும், நடையும் காட்டிக் கொடுத்தன.

கடைசியாக அவர் அந்த வீட்டின் வாசற்படியில் வந்து தயங்கி நின்று, ''நமஸ்தே'' என்று சரளாவுக்கு வணக்கம் தெரிவித்தார்.

''நீங்கள்தானே சிகாமணியின் மனைவி?'' என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

''ஆமாம்... நீங்கள்? ஓ! வாருங்கள், வாருங்கள். உட்காருங்கள்.... அவர் சௌக்கியந்தானே?'' என்று பரபரத்தாள் சரளா.

ராணுவ நண்பர் நாற்காலியில் உட்கார்ந்தபடி முரளியைக் கவனித்தார்.

''சௌக்கியம்தான் அம்மா... இவன் தானா உங்கள் பையன்? டேய் பையா! அப்பா கிட்ட வறயா, அழைச்சுக்கிட்டுப் போகிறேன்?'' என்று கேட்டபடி பிஸ்கோத்துப் பொட்டலங்களையும் ஆப்பிள்களையும் எடுத்து மேஜை மேல் வைத்தார்.

குழந்தை முரளி சிறிது நேரம் தயங்கி நின்று விட்டுப் பிஸ்கோத்துப் பொட்டலத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு விஷமம் செய்ய ஆரம்பித்தான்.

''உங்கள் வீட்டுக்காரர் சௌக்கியமாக இருக்கிறார் அம்மா. உங்களையும், குழந்தையையும் பார்த்துவிட்டு வரும்படி என்னிடம் சொன்னார். நான் பங்களூருக்குப் போக வேண்டியவன். நாளைக்குப் போய்க் கொள்ளலாம் என்று இடையில் ரயில் மாறி வந்திருக்கிறேன்.''

சரளா திறந்த விழிகளுடன் அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவள் திடுமென்று ''கொஞ்சம் இருங்கள் அண்ணா, சாப்பிட ஏதாவது கொண்டு வருகிறேன்'' என்று எழுந்தாள். சுடச் சுடக் காப்பியும் கொண்டு வந்து வைத்தாள்.



பெங்களூர் டெக்கான் ஹெரால்டு, பிரஜாவாணி சுதா & மயூரா பத்திரிகைகளின் விளம்பர மானேஜர் திரு கே. பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குமாரத்தி சௌ. ஜானகிக்கும், சிரஞ்சீவி டி. ஆர். திரிவிக்ரமன் அவர்களுக்கும் சமீபத்தில் பெங்களூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!


**தவளதந்த்**
பற்பொடி
பற்களை வலுவுடனும், உறுதியாகவும், பளிச்சென்றும் வைத்திருக்கிறது. பற்சிதைவைத் தடுக்கிறது.



**அபயாஸன**
டேப்லெட்டுகள்
வயிற்றுக் கோளாறுகளுக்குச் சிறந்த மருந்து



**பஞ்சாரிஷ்டா**
ஜீரணசக்தியை விருத்தி செய்யவும், சக்தியை மீட்டளிக்கவும், சிபாரிசு செய்யப்படும் டானிக். இது பசியை அதிகரித்து, நரம்புத் தளர்ச்சியைச் சமனப் படுத்துகிறது.



ஸாண்டு பார்மஸூடிகல் ஒர்க்ஸ் லிட்.,
பம்பாய்-25.

பலத்திற்கும் ஆரோக்கியத்திற்கும்
பண்டிட். D. கோபாலாசார்லுவின்
# ஜீவாம்ருதம்
69 வருடங்களாக பிரசித்திப்பெற்றது
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்
சென்னை-17.

# தவறாது உபயோகித்தால் போர்ஹான்ஸ் பற்பசை ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கிறது

சிறியோர், பெரியோர் யாவரிடமிருந்தும் தாமாகவே தேடி வந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் தடுப்பதிலே போர்ஹான்ஸ் பற்பசையின் வியக்கத்தக்க வெற்றியைப் போற்றுகின்றன. இந்த நற்சாட்சிக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிட். கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.

"நான்கு வருடங்களாகத் தவறாது நான் போர்ஹான்ஸ் பற்பசை உபயோகித்து வருகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு என் பற்கள் சீர்கெட்டு, துர்நாற்றத்தோடு அடிக்கடி இரத்தமும் வடிந்தது... ஒரு டாக்டர் 'போர்ஹான்ஸ் பற்பசை' உபயோகிக்குமாறு சிபாரிசு செய்தார்...பல் கோளாறுகள் அகன்று, என் பற்கள் இப்போது மிக நன்றாக உள்ளன".

—'ராமு' கடப்பா.

"கடந்த மூன்று வருடங்களாக உங்கள் போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிப்பதால், என் ஈறுகள் வலுவடைந்து ஆரோக்கியமாக விளங்குகின்றன. எனக்கு முன்பு ஈறுக் கோளாறுகளினால் அவதியிருந்தது. ...உங்கள் பற்பசையின் உதவியால் மட்டுமே இப்போது என்னால் சுகமடைய முடிந்தது".

—டி. என். தாஸ், ஷிகார்பூர்.

## போர்ஹான்ஸ்

### பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

பற்களைத் தக்கமுறையில் பராமரிக்க இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் பற்பசையையும், போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷையும் உபயோகியுங்கள்.... உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!




இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற வண்ணப் புத்தகம். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கிடைக்கும். இப்புத்தகத்தைப் பெற, (தபால் செலவுக்காக) 10 பைசா தபால் தலைகளை, இக் கூப்பனுடன் அனுப்புங்கள்: மானேர்ஸ் டென்ட்டல் ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1.

K 6

பெயர் ____________________

விலாசம் ____________________

____________________

மொழி ____________________

35F-203 TAM

சமையலறையின் இருளைப் போக்கியவாறு விளக்குகள் பளிரென்று ஒளிர வெகு நாட்களுக்கு அப்புறம் சமைக்க ஆரம்பித்தாள் சரளா. உருளைக் கிழங்கு பொடிமாஸ், வெங்காய சாம்பார், தக்காளி ரசம், பப்படம் என்று உணவு வகைகளின் மணம் தெரு வரை வீசியது.

சிகாமணியின் நண்பர் பிரம்பு நாற்காலியில் சாய்ந்தபடி சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார். இடையிடையே அவள் பரபரப்புடன் வாசலுக்கு வந்து அவரைக் கவனித்தாள். முரளி தூங்கி வழிய ஆரம்பித்தான்.

''குழந்தை தூங்க ஆரம்பித்து விட்டான் அம்மா... சாப்பாடு போடுங்கள்'' என்று கூறியவாறு அவர் தம் மார்பின் மீது சாய்ந்து அரைத் தூக்கத்தில் இருப்பவனை வருடிக் கொடுத்தார்.

சரளா இந்தக் காட்சியைக் கண்டு நெகிழ்ந்து போனாள். அவன் பிறந்து மூன்று மாதங்களுக்கு அப்புறம் இன்றுதான் புதிதாக ஓர் ஆண்மகனின் மார்பின் மீது உறங்கும் வாய்ப்பை அவன் அடைந்திருக்கிறான் என்கிற நெகிழ்ச்சியில் அவள் அப்படியே நிலைப்படியைப் பற்றியவாறு நின்றாள்.

''பையன் சாப்பிடவேண்டாமா அம்மா?''

''சாப்பாட்டை விட அவன் வயிறும், நெஞ்சும் நிறைந்துதான் தூங்கறான் அண்ணா!''

''சிகாமணியும் இதைத்தான் சொல்லுவான் அம்மா... உங்கள் சமையல், பேச்சு, குழந்தையின் சிரிப்பு என்று எதைப் பற்றியாவது பேசுவான்.''

சரளா கணவனைப் பற்றிக் கேட்டவுடன் துயரமும் மகிழ்வும் நிறைந்த நிலையில் ஒன்றும் தோன்றாமல் நின்றாள். அன்று என்னவோ அவளுக்கு எல்லாமே புதுமையாகவும், மகிழ்வைத் தரக் கூடியதாகவும் தோன்றியது.

முரளியை அணைத்து எடுத்துப் போய் அவள் கட்டிலில் விட்டுப் போர்த்திவிட்டாள்.

''பையா, இதோ பாரடா! உன் அப்பா மூணு வருஷங்களுக்கு அப்புறம் வரப் போகிறதாச் சொல்லி அனுப்பியிருக்காரு. உனக்குத் தெரியுமோ?'' என்று தன் மகிழ்ச்சியை மகனுடன் பகிர்ந்து கொண்டாள்.

வெளியே சிகாமணியின் நண்பர் தொண்டையைச் செருமிக் கொள்வது கேட்டு வாசலுக்கு வந்தாள்.

''கிளம்பறேன் அம்மா!''

''என்ன அண்ணா! கிளம்பவாவது? குளிக்கச் சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும். இங்கே பிருந்து கடைசிப் பஸ் இத்தனை நேரம் கிளம்பிப் போயிருக்கும்.... இப்போது நீங்கள் போயும் பிரயோசனமில்லை.''

அவர் விக்கித்து நின்றார். 'தன்னந் தனியாக ஒரு இளம் பெண்ணுடன் இத்தனை நேரம் தங்கியிருந்ததே பொருத்தமற்ற செயல். இரவு இங்கேயே தங்குவதா?'

''என்ன அண்ணா யோசனை?''

''ஒன்றுமில்லை...''

''பின்னே குளிக்கப் போங்க—''

எத்தனை வருஷங்களுக்கு அப்புறம் சுகமான வெந்நீரில் சந்தனச் சோப்பின் மணத்தில் குளிக்க முடிந்தது? உடலில் புத்துணர்ச்சி பெருகப் பிரயாணக் களைப்புத் தீர அவர் வெளியே வந்தார்

கூடத்தில் அலங்கார மேஜைமீது தலை வாரிக் கொள்ளும் 'பிரஷ்', ஆண்கள் முகப் பவுடர், தலைக்குக் 'கிரீம்' என்று ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன.



அவர் தயங்கி நின்றார்.

''என்ன வேணும்?'' என்று எட்டிப் பார்த்துக் கேட்டாள் சரளா.

''இந்த வீட்டிலே வேறு யாராவது உறவுக்காரங்க இருக்கிறாங்களா?''

''ஏன்?''

''ஓர் ஆண்பிள்ளையின் தேவைகள் முழுதும் மேஜை மீது இருக்கவே கேட்டேன்.''

சரளா வெட்கம் சிந்தும் முகத்துடன், ''எல்லாம் அவர் வச்சுட்டுப் போனபடி இருக்குது. அப்பப்போ தூசி தட்டி வைப்பேன். திடும்னு வந்தார்னு தேவைப்படும் பாருங்க! அதோட அவருக்கு மறதி அதிகம். அங்கங்கே எதையாவது தொலைச்சுட்டு வந்துடுவாரு. அவர் விரும்பற பொருள் இல்லேன்னு உடனே 'தொம் தொம்னு' குதிப்பாரு''— என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

அவர் தலைவாரி முடிப்பதற்குள் உணவருந்தும் மேஜைமீது சாப்பாட்டுப் பொருள்களைக் கொண்டு வந்து வைத்தாள் சரளா.

பளபளவென்றுமின்னும் எவர்சில்வர் தாம்பாளத்தை வைத்துவிட்டு உள்ளே சென்று திருநீற்று மடல் ஒன்றை எடுத்து வந்தாள்.

''இதெல்லாம் எனக்குப் பழக்கமில்லையம்மா'' என்றார் நண்பர்.

''அவர் திருநீறு பூசிக்காமல் சாப்பிட மாட்டாரு!''

அந்த அவருக்காக இவர் பூசிக்கொண்டு தான் ஆக வேண்டுமா என்பது ஒரு கண யோசனைதான். அவரை அறியாமல் விரல்கள் பழநி ஆண்டவனின் விபூதியை அளைந்து நெற்றியில் தீட்டிக் கொண்டன.

நெடு நாளைக்கப்புறம் கிடைக்கும் இனிமையான உணவு அது. குடும்பப் பெண் ஒருத்தியின் அன்பிலே குழைந்து வெந்த அந்தச் சோறும், கரியமுதுகளும் தேவாமுதமாக ருசித்தன அவருக்கு.

''நீங்க சாப்பிடலையே?'' என்று கேட்டார் அவர். சரளாவும் நெடுநாளைக்கப்புறம் இரவுச் சாப்பாடு சாப்பிட்டாள்.

பிறகு பாத்திரங்களை ஒழித்துப் போட்டு மேஜையைச் சுத்தம் செய்து அடுக்களையை இழுத்துப் பூட்டிக் கொண்டு வந்தபோது மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

தெருவிலே இருள் படர்ந்து கிடந்தது. தூரத் தூர ஒளிரும் மின் விளக்குகளில் கூடப் பிரகாசம் இல்லை.

அவருக்கு வெற்றிலை போடும் பழக்கம் இல்லை. சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்தபடி அவர், ''நான் பிரயாணிகள் விடுதிக்குப் போகிறேன். காலையிலே பஸ் எத்தனை மணிக்குன்னு சொன்னீங்க?'' என்றார்.

சரளா அவரை வியப்புடன் பார்த்தாள். ''ஏனண்ணு அங்கே போகணும்? இங்கேயே ராத்திரி தங்கிவிட்டு விடியற்காலம் போகலாமே... பஸ் ஹாரன் அடிச்சு ஊருக்குப் போறவங்களைக் கூப்பிடுவான். அஞ்சு மணிக்கு முதல் பஸ்.''

குழந்தை போன்ற அந்த முகத்தில் நிலவும் அசாதாரணமான நம்பிக்கையைப் பார்த்தவுடன் அவர் ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றார்.

''ராத்திரியிலே நான் ரொம்ப நேரம் தூங்க மாட்டேன். வேலையிலே கண் முழிச்சுப் பழக்கமாயிடுச்சு. நானும், உங்க வீட்டுக்காரரும் ராத்திரி முழுதும் ஏதாச்சும் பேசிக்கிட்டுக் கழிப்போம். 'ஹோ'ன்னு இருக்கிற மலைப் பிரதேசம். வெளியே பார்த்தால் இந்த நடைமுறைப் பழக்கத்துக்கும் எங்களுக்கும் ரொம்பத் தூரம்னு நினைக்கத் தோணும். ஏதோ புது உலகத்திலே இருக்கிற மாதிரிமேலே ஆகாசம். கீழே பாதாளம்; சுற்றிலும் மலைகள், காட்டாறுகள். ஆயிரக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து இங்கே வந்த பிறகுதான் அன்பும், பண்பும் நிறைந்த குடித்தனப் பாங்கைப் பார்க்க முடிகிறது.''

சரளா ஆழ்ந்த சிந்தனையுடன் நாற்காலியில் உட்கார்ந்தபடி அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

மலைப் பாதை. எதிரிகளை நோக்கி முன்னேறுதல். திடீரென்று பதுங்கிக் கொள்ளுதல். எங்கிருந்தோ பூமியைப் பிளக்கிறாற் போல் எழும் பயங்கரமான வெடிகுண்டுகளின் சத்தம். நெருப்பும் புகை மண்டலமும். சிகாமணி தனக்கு ஏதேனும் உயிர்ச் சேதம் ஏற்பட்டுவிட்டால் மனைவி, மகனிடம் தன்னைப் பற்றிக் கூறும்படியாகச் சொன்ன செய்திகள் என்று அவர் பேசிக் கொண்டேயிருந்தார்.

இத்தனை நாட்கள் தனிமைத் துயரில் தன்னைத் தோய்த்துக் கொண்டு வாழ்ந்தவளுக்கு இந்தப் பேச்சுக்கள் அமுதம் போல் இனித்தன. நெஞ்சில் மகிழ்ச்சி துளும்பி வழிவது போல் இதயம் கனத்தது.

மேஜை மீது கிடந்த சிகரெட் பெட்டி அநேகமாகக் காலியாகி விட்டிருந்தது.

மலைகாட்டில் வைகறை மெல்ல மெல்லத் தான் வரும்.

எங்கிருந்தோ பஸ்ஸின் குழல் ஒலி கேட்டது.

நாற்காலியில் சாய்ந்து அப்படியே உறங்கி விட்டிருந்த அவளை அவர் எழுப்புவதற்குத் தயங்கவில்லை.

திரண்ட தோளின் ஒரு பக்கம் தட்டி, ''அம்மா... பஸ்காரன் கூப்பிடுகிறான். நான் கிளம்பட்டுமா?'' என்று அழைத்தார்.

சரளா திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். தன் நம்பிக்கைக்கு முற்றிலும் பாத்திரம் ஆகிவிட்ட அந்த நண்பர் முகம் கழுவி, உடை அணிந்து பிரயாணத்துக்கு ஆயத்தமாகி நிற்பதை அறிந்து அவசரமாக மின் அடுப்பில் தேநீர் தயாரித்தாள்.

ஆவி பறக்கும் தேநீரை அவர் சுவைத்துப் பருகும்போது இரண்டாம் முறையாகப் பஸ்ஸின் குரல் ஒலி கேட்டது.

அரைத் தூக்கத்தில் முனகிக் கொண்டிருந்த முரளியைத் தோளில் சாய்த்தபடி அவள் அவரைத் தெரு வரையில் பின் தொடர்ந்தாள்.

''போய் வருகிறேன் அம்மா!''

''உம்...'' என்றாள் சரளா.

இனிய நினைவுகளால் நிரம்பியிருந்த நெஞ்சில் மறுபடியும் தனிமை இடம் பெற ஆரம்பித்தது.

மீண்டும் சிகாமணி வரும்வரை அவள் இந்தத் தனிமையைத் துணை கொண்டு வாழ்ந்துதானே ஆக வேண்டும்?



வினையும் பயிர்

# அபராதம்



"அம்மா! சரியாக இன்றைக்கு எட்டாம் நாள் எங்கள் பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்டர் வருகிறாராம், அம்மா!"

"அப்படியா? நன்றாகப் படி. இன்ஸ்பெக்டரிடம் நல்ல பையன் என்று பெயர் வாங்கு. வகுப்பிலேயே முதலாவதாக வா!" என்று அன்னை ஆசீர்வதித்தாள்.

"அம்மா! உன் ஆசீர்வாதம் இருக்கும்பொழுது எனக்கு என்ன கவலை? கட்டாயம் நானே முதல்வனாக வரப் போகிறேன். ஆனால்..." அவன் பேச்சு பிள்ளைத்தனமாக இல்லை.

"ஆனால் என்ன? சொல்லு!"

"என் சட்டையும் வேட்டியும் கிழிந்து கிடக்கின்றனவே!"

" 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்னும் மூதுரையை நீ கேள்விப்பட்டதில்லையா?"

"கசக்கிக் கட்ட நான் தயார் அம்மா! துணிக்குப் போடக் கொஞ்சம் சவுக்காரம் கிடைத்தால் தேவலையே!"

"சவுக்காரம் வாங்கக் காசில்லையே, என்ன செய்வது?"

"ஓரணா இருந்தால் போதும் அம்மா!"

"அந்த ஓரணாவுக்குத்தான் நான் எங்கே போவேன்டா, கண்ணா!"

"யாரிடமாவது கேட்டுவாங்கக்கூடாதா?"

"யார் அப்பா நம்மை நம்பிக் காசு கொடுப்பார்?"

"ஏனம்மா! நீ ஒருத்தர் வீட்டுக்குக் காரியம் செய்யப் போறியே, அவங்க கேட்டாத் தர மாட்டாங்களா?"

"இருந்தால் தருவாங்க! ஆனால் மாசக் கடைசியிலே அவங்களும்தான் எங்கே போவாங்க? — இருந்தாலும் உனக்காகக் கேட்டுப் பார்க்கிறேன். கிடைச்சா உன் அதிர்ஷ்டம்!" என்றாள் தாயார்.

ஆனால் என்ன முயன்றும் முதல் நாள் வரை தாயாருக்கு அந்த ஓரணாக் காசு கிடைக்கவில்லை. பையனோ கண்ணீர் ததும்ப நின்றான். "வெளுப்பாகத் துணி உடுத்தி வர வேண்டுமென்று வாத்தியார் கண்டித்துச் சொல்லியிருக்கிறாரே, அம்மா!" என்று கூறும்போது அவனுக்கு அழுகையே வந்தது.

"நன்றாக அழுக்குப் போகத் துவைத்து உடுத்திப் போனால் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்" என்று சமாதானப் படுத்திய தாயார், துணியைத் தானே எடுத்துப்போய்த் துவைக்கவும் முற்பட்டாள். தாயாரும் பிள்ளையும் சேர்ந்து துப்புரவாகத் துவைத்து உலர்த்தித் தட்டிக் கொட்டி இஸ்திரி போட்டதற்கும் மேலாக மடித்து வைத்தார்கள்.

என்னதான் விழுந்து விழுந்து துவைத்தாலும் சவுக்காரம் போட்டுத் துவைத்தாற் போலிருக்குமா? ஆயினும் தாயாரின் சமாதானம் மகனுக்கு ஆறுதல் அளித்தது.

மறுநாள் நன்றாக உடல் தேய்த்துக் குளித்து, முதல் நாள் துவைத்து மடித்து வைத்திருந்த வேட்டி — சட்டையை உடுத்திக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டான். மற்றப் பையன்களோ பளிச்சென்று உடை அணிந்து வந்திருந்தார்கள். அவன் உடை திருஷ்டிப் பரிகாரமாக இருந்தது.

வகுப்பில் நுழைந்த உபாத்தியாயருக்கு அது கண்ணை உறுத்தியது. "என்னடா! எத்தனை தடவை படித்துப் படித்துச் சொன்னேன்? இப்படிக் கந்தலை உடுத்தி வந்திருக்கிறாயே! ஓடு, ஓடிப் போய் நல்ல துணி உடுத்து வா. இல்லாவிட்டால் வகுப்பில் நுழையாதே!" என்று சீறி விழுந்தார்.


பையன் தன் நிலையையும் தாயாரின் சிரமத்தையும் எவ்வளவோ எடுத்துச் சொன்னான். அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இன்ஸ்பெக்டரிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இருந்தவர், "என் சொல்லை மீறியதற்காக எட்டணா அபராதம்!" என்றார்.

பையனுக்குத் தலை சுற்றியது. 'சவுக்காரம் வாங்க ஓரணா கிடைக்காத தாயார் அபராதம் செலுத்த எட்டணாவுக்கு எங்கே போவாள்?' என்று கலங்கினான். உபாத்தியாயரோ எரிமலையென வெடித்துக் கொண்டிருந்தார். எனவே, அவன் தலை குனிந்தபடி வெளியேறினான். சில பையன்கள் சிரித்தார்கள். சில பையன்கள் அநுதாபப்பட்டார்கள். வகுப்பிலிருந்து வெளியேறும் பொழுது பையன் மட்டும் மனத்தில் ஓர் உறுதி பூண்டான்: "நான் நன்றாகப் படித்துப் பெரியவனாகி உபாத்தியாயராக வந்தால், எந்தப் பையனுக்கும் இப்படியெல்லாம் தாறுமாறாக அபராதம் விதிக்க மாட்டேன்."

அவன் நினைத்தபடியே உபாத்தியாயராக வந்தான். தனது பச்சையுள்ளத்தில் அந்தக் காலத்தில் பதிந்த தீர்மானத்தை உறுதியாகக் கடைப்பிடித்தான். யார் தெரியுமா, அவன்? ஆங்கிலேயரும் வியக்கும் வண்ணம் ஆங்கிலப் புலமை பெற்றுப் பாரதத்துக்குப் புகழ் தேடித் தந்த மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார்தான்!

- ரா. வீ.

## வட்ட மேஜை




# டப்பா பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்!

அமரர் 'கல்கி' அவர்கள் தம் வாழ்நாளில் எத்தனையோ தீமைகளுக்கு எதிராகத் தம் சக்தி வாய்ந்த பேனாமுனையைப் பயன் படுத்தினார். அவர் எதிர்த்துப் போராடிய தீமைகளுள் ஒன்று திரைப்பட சங்கீதமாகும். ''சினிமா சங்கீதம் டப்பா சங்கீதமாகி விட்டது'' என்று அவர் பல முறை வருத்தப்பட்டார்.

கல்கி அவர்கள் காலமாகிப் பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தக் காலத்தில் டப்பா சங்கீதத்தின் தீமை மேலும் பயங்கரமாக வளர்ந்து விட்டது. தமிழ் நாட்டின் எந்த மூலைமுடுக்கில் திரும்பினாலும் 'பயணம் எங்கே?' என்றோ, 'பட்டுப் பாவாடை எங்கே' என்றோ, 'புது நாடகத்தில்' என்றோ குமட்டல் எடுக்கும் பாடல்கள் காதில் நாராசமாக ஒலிக்கின்றன.

சங்கீத அம்சம் ஒருபுறம் இருக்க, பாடல்களின் அமைப்பைப் பார்த்தாலும் ஆபாசமான கருத்துள்ள எழுத்துக்கள் இன்றைய திரைப் பாடல்களில் நிறையக் காணப்படுகின்றன.

இதிலே வருந்தத்தக்க ஓர் அம்சம் என்னவென்றால் இந்தக் குற்றத்துக்குத் தமிழ் மக்களும் ஓரளவு உடந்தையாயிருக்கிறார்கள் என்பதுதான். ஓர் ஊரிலே ''எலந்தப் பயம்'' பாட்டை நான்கு முறை பாடும்படி பாடகியை வற்புறுத்தினார்களாம்!

சிவகங்கை
30-5-68 வி. ஆர். நாகராஜன், பி. ஏ., பி. டி.

'தமிழழகன்' எழுதி வரும் கவிதைகள் புதிய பாணி! சந்தமும் சத்தும் நிரம்பிக் கனிபோல் குலுங்குகின்றன. தமிழன்பர்களுக்குப் புதிய விருந்து. கருங்கச் சொன்னாலும் சுருக்கென்று சொல்லிச் சொக்க வைக்கிறார். அங்கதப் பாடலுக்கு (சட்டயருக்கு)ப் புனர் வாழ்வு தந்த அவர் கவிதைகள் மேலும் மேலும் வருக, வருக!

கருத்தும் கதையும் தரும் கல்கி கவிதையும் தருவது முறையாகும்.

சென்னை — 4
10—5—68 டி. என். சுப்பிரமணியம்

பம்பாய் நகரப் பள்ளிக்கூடங்களில் கோடை கால விடுமுறைக்காக மூடப்பட்டுப் பத்து அல்லது பதினைந்து தினங்களிலேயே அடுத்த ஆண்டுக்கு உரிய புத்தகங்களைப் பிரபல புத்தகக் கடைகளில் சொல்லிவிடுகிறார்கள். மேலும் மாணவர்கள் புத்தகக் கடைக்குச் சென்று தங்களுடைய பள்ளியின் பெயரையும் வகுப்பையும் சொல்லிவிட்டால் உடனடியாகப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. இதனால் மாணவர்கள் விடுமுறையிலேயே புத்தகங்கள் வாங்கிப் படிக்கத் தொடங்குகின்றனர். பள்ளி திறந்த முதல் நாளிலிருந்தே பாடங்கள் நடக்கத் தொடங்கிவிடுகின்றன.

ஆனால் சென்னை நகரப் பள்ளிகளிலோ பள்ளிக்கூடம் திறந்தவுடன்தான் அவ்வாண்டுக்கு வேண்டிய புத்தகங்களைக் கூறுகிறார்கள். மேலும் அந்தப் புத்தகங்கள் புத்தகக் கடைக்கு வருவதற்குப் பத்து நாட்கள் ஆகின்றன. மாணவர்கள் பிறகு புத்தகங்களை வாங்கிப் பள்ளிப் பாடம் நடக்கக் குறைந்தபட்சம் 25 நாட்களாவது ஆகின்றன. இந்த 25 நாட்களும் பள்ளிகளில் பாடம் நடத்துவதில்லை.

மாதுங்கா, பம்பாய்
16-5-68 வா. வே. பாலசுப்பிரமணியன்

தமிழக அரசாங்கத்தின் கொள்கைகள் பலவற்றாலும் நன்மைகள் இருந்தாலும், 'தேசிய மாணவர் படை' சம்பந்தமான நம் அரசாங்கத்தின் கொள்கையால் ஒரு பயனுமில்லை.

இதனால் தமிழகக் கல்லூரி மாணவர்கள் பல அரிய வாய்ப்புக்களை இழந்து நிற்கின்றனர்.


புகுமுக வகுப்பில் படிக்கும் மாணவர்களினின்றும் Officer Training unitக்கு ஆள் சேர்ப்பது உண்டு. இவ்வாண்டு அந்த வாய்ப்பு கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையில் நானும் என்னைப் போன்ற பல மாணவர்களும் இருக்கிறோம். காரணம் தமிழக அரசாங்கத்தின் 'தேசிய மாணவர் படை' சம்பந்தமான கொள்கையே.

இப்படையில் நடத்தப்படும் பல பரிட்சைகள் இவ்வாண்டு நடத்தப்படவில்லையாதலால் பல 'சர்டிபிகேட்டுகளை' மாணவர்கள் பெறமுடியாதவர்களாகி விட்டனர்.

படைகளைக் கலைப்பதால் தமிழகம் உறும் பலவீனம் பற்றி நான் குறிப்பிடத் தேவையில்லை. அதனை நாடறியும்; நல்லறிஞர்கள் அறிவர்.

சீனி. கண்ணன்
சங்கரலிங்கபுரம்
13—5—68

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam



ஸாரிடானின் உதவி தேவைப்படும் அந்த 'அசௌகரியமான நாட்கள்'

# பெண்மணிகள் அறிவார்கள் — சில சமயங்களில் வலியிலிருந்து நிவாரணம் பெற்றால் மட்டும் போதாது...

மந்தம், சோர்வு அல்லது வலி உண்டாகும் பொழுது ஒரே ஒரு ஸாரிடான் சாப்பிட்டால் உங்களுக்கு உற்சாகமும் புத்துணர்ச்சியும் அனுபவமாகும். ஸாரிடான் வலியைப்போக்குவது மட்டுமல்லாமல், அத்துடன் நரம்புகளில் அனுபவமாகும் அழுத்தத்தையும் போக்குகிறது. சில நிமிஷங்களுக்குள் உங்களுக்கு தெம்பும் புத்துணர்ச்சியும் அனுபவமாகும், மூளை தெளிவடையும், நீங்கள் சிரித்த முகத்துடன் திகழ்வீர்கள்! ஸாரிடான் அளிக்கும் நிவாரணம் விரைவானது, நிலையானது. முன்யோசனையுடன் எப்பொழுதும் ஸாரிடான் உங்கள் கைவசம் வைத்திருங்கள். தலைவலி, பல்வலி, உடல்வலி முதலியஉபாதைகளுக்கு அது சமயசஞ்சீவி. ஒரே ஒரு ஸாரிடான் வலியைப் போக்குகிறது, விச்ராந்தியளிக்கிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது!

**'ரோஷ்' தயாரிப்பு**

**ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:**

**வால்டாஸ் லிமிடெட்**

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம
தபால் செலவு தனி




லின்டாஸ்-டி 52-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு